உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 61 தை 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை 26 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049

ஓ.எம்.பி. ஆணையாளர்கள் நியமனம் இன்னும் இல்லை

உள்ளூராட்சித் தேர்தல் இப்போதைய சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 26

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கைக்கு ஏற்ப ஆணையாளர்களை மாற்றி தனது பரிந்துரையை அரசமைப்புச் சபை முன்வைத்த போதும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்துக்கான (ஓ.எம்.பி.) ஆணையாளர்கள் நியமனம் இன்னமும் இடம்பெறவில்லை.

இந்த அலுவலகத்துக்கான ஆணையாளர்களை நியமிப்பதற்கு அரசமைப்புச் சபை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியிருந்தது. அதனடிப்ப >> 06

தேராவில் வீட்டிலிருந்து வாக்காளர் அட்டைகள் பொலிஸாரினால் மீட்பு!

கள்ள வாக்குப் போடுவதற்கான எத்தனமா?

யாழ்ப்பாணம், ஜனவரி 26

கள்ள வாக்குப் போடும் நோக்கோடு பதுக்கி வைக்கப்பட்டிருந்தன என்று நம்பப்படும் ஒரு தொகுதி வாக்காளர் அட்டைகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று மீட்டனர் பொலிஸார்.

விசுவமடு, தேராவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து 138 குடும்பங்களுக்குரிய 288 வாக்காளர் அட்டைகள் இவ்வாறு மீட்கப்பட்டன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாக்காளர் அட்டைகளைப் பதுக்கி வைத்திருந்தார் >> 06

"சொந்த இடத்தில் இருக்க விடு"

கடற்படைக்கு எதிராக ஊர்காவலில் போராட்டம்

ஊர்காவற்றுறை, ஜன. 26

கடற்படையினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பில் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

காணிகளின் உரிமையாளர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பத்து ஆண்டுகளுக்கு மேலாக முகாம்களை அமைத்து நிலைகொண்டுள்ள கடற்படையினர் வெளியேற வேண்டும் என்று >> 06

விசாரணை அறிக்கைகளை

தேர்தலுக்கு முன்னர் சபையில் முடிந்தால் விவாதியுங்கள்

மைத்திரி பகிரங்கச் சவால்

கொழும்பு, ஜன. 26

எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறும் தேர்தலுக்கு முன்னர் முடியுமானால் ஒரே ஒரு தினமாவது விசாரணை அறிக்கைகள் மீதான விவாதத்தை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரி >> 06

யாழ்ப்பாணம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில்

காணி விடுவிப்பு குறித்து அடுத்த வாரம் ஆராய்வு

இராணுவத் தளபதி நேரில் வருகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 26

வடக்கு, கிழக்கில் உள்ள 5 மாவட்டங்களில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ளவற்றில் விடுவிக்கப்படக்கூடிய காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள், இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தலைமையில் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது. >> 06

இந்திய மீனவர்கள் 8 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 8 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இழுவைமடி (ட்ரோலர்) வகையான் இரு படகுகளும், மீன்பிடி உபகரணங்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் பின்னிரவு இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையின் செய்திக் >> 06

கடற்பன்றியின் இறந்த உடல் மீட்டுப் புதைப்பு

மன்னார், ஜன. 26

தலைமன்னார் மேற்கு கடற்பரப்பில் இறந்த நிலையில் மிதந்து வந்த சுமார் 500 கிலோ கிராம் எடைகொண்ட கடற்பன்றி கடற்படையினரால் மீட்கப்பட்டுப் புதைக்கப்பட்டது.

மிகப் பெரிய விலங்கு உருவம் ஒன்று கடலில் மிதக்கிறது என்று மீனவர்கள் நேற்றுமுன்தினம் கடற்படையினருக்குத் தகவல் கொடுத்தனர். அந்தப் பகுதிக்கு விரைந்த கடற்படையி >> 06

புதிய அரசமைப்பு மூலமே காணிச் சிக்கலுக்குத் தீர்வு

கிட்டும் என்கிறார் வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர்

யாழ்ப்பாணம், ஜன. 26

புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டால் மட்டுமே எமது மக்களின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் எனத் தெரிவித்தார் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் தமிழர்களின் காணிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்படுகிறது; >> 06

நம்பிக்கையின் பலம்

என்றும் கம்பீரம் மாறாத யாழ் மண்ணின் பலத்தை அதிகரிக்கும் நோக்கில், வருடாந்த நிகழ்வான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில், பல்தேசிய கூட்டாண்மை நிறுவனங்கள் அனைத்தும் இவ்வாண்டும் கூட்டிணைகின்றன. முன்னர் 'ஹொல்சிம் லங்கா' என்று விளங்கிய வர்த்தக நாமம் தற்போது INSEE ஆக பெயர் மாற்றம் பெற்றுள்ளதுடன், முன்னரை விட மிகச் சிறப்பாக தமது வாக்குறுதியை நிறைவேற்றிட இலங்கையில் தடம் பதித்துள்ளது. இக்கண்காட்சியில் கட்டிட நிர்மாணிப்பின் உத்தியோகபூர்வ தீர்வு வழங்குனராக பெரும்பங்கினை ஏற்பதையிட்டு INSEE பெருமிதமடைகின்றது.

9வது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2018 ஜனவரி 26ஆம், 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தில் நடைபெறும்.

துரித இலக்கம்: 011 7 800 800

சங்கத்தா சீமெந்து | மகாவலி மெரின் சீமெந்து | மகாவலி மெரின் பிளஸ்

: facebook.com/SansthaCement

JITF 2018 | INSEE CEMENT

மகிந்தவை சந்தித்த பெரமுனவினர்

வவுனியா.ஜன.26

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த வவுனியா வேட்பாளர்கள் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை அண்மையில் சந்தித்தனர்.

வவுனியா நகரசபைக்கான சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரதான வேட்பாளரும், முன்னாள் நகரசபை உறுப்பினரும், ஆசிரியருமான எஸ்.எஸ்.சுரேன் தலமை முன்னாள் அரச தலைவரின் இல்லத்தில் சந்திப்பு நடைபெற்றது.

வவுனியா மாவட்ட அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஆராய்ந்த முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபை தேர்தல்களில் சிறிலங்க பொதுஜன பெரமுன சார்பாக போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் வெற்றிபெற வாழ்த்து தெரிவித்தார்.

ஜனநாயக இடதுசாரி முன்ணணியின் பொதுச் செயலாளரும் இரத்தினபுரி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவநாணயக்காராவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். (ந.ரி4)

பெண்களின் பிரச்சினைக்கே முன்னுரிமை கொடுப்பேன்

கூட்டமைப்பு வேட்பாளர் மதியரசன் மோகனா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

"எமது பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சி னைக்கே முன்னுரிமை கொடுப்பேன். பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை முறியடி ப்பதற்கு பெண்கள் அமை ப்புக்களுடன் இண ணந்து கிராமிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்க ப்படும். ஊழல்மோசடி இல்லாத நிர்வாகம் அமைவதற்கும் தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்டுவதற்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்குமாறு, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் 4ஆம் வட்டாரமான நவிண்டில் தொகுதி வேட்பாளர் மதியரசன் மோகனா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

எனது தந்தையின் வழியில் மக்களுக்கு சேவை செய்வதற்கு நான் களமிறங்கியுள்ளேன். கடந்த காலத்தில் எமது பிரதேச சபையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. கிராம அபிவிருத்தி செயற்பாடுகளைத் திறம்பட மேற் கொண்டிருந்தது. இதனை எமது மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

நீண்டகாலம் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை, காணி, அரசியல் கைதிகளின் விவகாரம் என்பவற்றை முன்னிலைப்படுத்தி அரசுடன் பேச்சு நடத்தி வரும் அதேவேளை உள்ளூராட்சி சபைகளின் ஊடாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வந்திருக்கிறது. தொடர்ந்தும் எமது கட்சியை வெற்றிபெறச் செய்வதன் ஊடாக அபிவிருத்திச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும்.

நாம் வெற்றி பெறுவதன் ஊடாக எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் கருத்தில் கொள்வதோடு கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, விளையாட்டு போன்ற வற்றை மேம்படுத்துவதற்கான தேவைகளைக் கண்டறிந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான திட்டங்களை எமது கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று சபையின் ஊடாக மேற்கொள்ள உள்ளோம் - என்று தெரிவித்துள்ளார். (5)

மாகாணசபை முறைமை நாட்டுக்கு தேவையில்லை

அமைச்சர் அதாவுல்லா தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.26

வடக்கு, கிழக்கை பிரித்து விட்டோம், பயங்கரவாதத்தை அழித்துவிட்டோம் அடுத்ததாக மாகாண சபை முறைமை இலங்கைக்கு தேவையில்லை என்பதனை நிலைநாட்டவே இம்முறை குதிரைச்சின்னத்தில் போட்டியிடுகின்றோம் இவ்வாறு முன்னால் உள்ளூராட்சி அமைச்சர் அதாவுல்லா தெரிவித்தார்.

கல்முனை மாநகரசபையில் குதிரைச்சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போது இலங்கை அரசியலில் வடக்கு, கிழக்கு இணைப்பதற்கு முடிவெடுத்து விட்டார்கள், அரசதலைவர் முறைமையை இல்லாமல் செய்வதற்கும் ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்து விட்டார் ஆனால் பொது வாக்கெடுப்பென்று போனால் நிச்சயம் தோற்று விடுவார்கள் இது தொடர்பாக சம்பந்தனுக்கும், சுமத்திரனுக்கும் எனக்கு கிடைக்கும் நேரத்தில் நிறையவே புத்திமதிகள் சொல்லியிருக்கிறேன்.

இந்து தத்துவமும், பௌத்த தத்துவமும் அடிப்படையில் ஒன்றே என்று கூறிக்கொண்டு நாங்கள் இரண்டு சாராரும் அடிப்படையிலே சிலை வணங்குகின்றவர்கள்தான் அதனால் அடிப்படையிலே ஒன்றுதான் இஸ்லாமியர்கள் தான் வேறு என்ற பார்வையில் முஸ்லிங்களை விரட்டுவதற்கான அனைத்து வேலைப்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. என்றார். (ந.ரி4)

பேரியக்க கட்சியான மு.கவை யாராலும் அழிக்கவே முடியாது

மு.க.வின் வேட்பாளர் அமீன் முஜீப் தெரிவிப்பு

திருகோணமலை.ஜன.26

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் எனும் பேரியக்க கட்சி என்பது பல்வேறு தியாகங்களுடன் வந்த கட்சியாகும் இதனை மயிலும் குதிரையிலும் வந்து சிலர் அழிக்க முற்படுகின்றனர் இந்த பேரியக்க கட்சியை எந்தவொரு சக்தியாலும் அழிக்க முடியாது.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியில் மரச்சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளரான மூத்த சட்டத்தரணி அமீன் முஜீப் தெரிவித்தார்.

கிண்ணியா ரஹ்மானியா சந்தியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தேர்தலை நாங்கள் எமது சமூகத்தின் வாக்குகளால் வெற்றி கொண்டு சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி கிண்ணியா நகர சபையை கைப்பற்றுவதன் ஊடாக எமது இந்த வட்டார மக்களுக்கு மாத்திரமல்ல முழு கிண்ணியாவுக்கும் நிரந்தர பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்கும்.

பல அபிவிருத்திகளை மக்களின் நலன் கருதிய திட்டங்களை வகுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறேன் இதை விடுத்து சிலர் எனக்கு குடும்பம் இல்லை கோத்திரம் இல்லை என போலிப் பரப்புரைகளை ஏனைய வேட்பாளர்கள் கூறி வருகின்றனர் இவர்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறேன் இந்தப் பகுதியில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பமும் எனது உறவுகள் மீனவக் குடும்பம் கூலித் தொழிலாளிகள் அனைவரும் எனது குடும்பம் என்பதை மறந்து விடாதீர்கள் எனவே சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து நிரந்தர தீர்வை பெற்று சுமூகமான கிண்ணியாவாக சுபீட்சமிக்க கிண்ணியாவாக மாற்றியமைப்போம்.

என்றார். (ந.ரி4.40)

பொகவந்தலாவையை த.மு.கூ. கைப்பற்றும்

மாகாணசபை உறுப்பினர் ஸ்ரீதரன் தெரிவிப்பு

நுவரெலியா.ஜன.26

பொகவந்தலாவை பிரதேசத்தில் கடந்த இரண்டு வருடகாலத்துக்குள் கூட்டரசால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் எதிர்வரும் நோர்வூட் பிரதேச சபைத் தேர்தலில் பொகவந்தலாவை பிரதேசத்திலுள்ள ஐந்து வட்டாரங்களையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி கைப்பற்றுவது உறுதி என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

பொகவந்தலாவை பிரதேசத்தில் நல்லாட்சி அரசுக்கு முன்பு குறிப்பிட்டு சொல்லக்கூடிய வகையில் எத்தகைய அபிவிருத்தி திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. தொடர்ந்து இந்தப்பிரதேசம் பின்தங்கிய பிரதேசமாகவே காணப்படுகின்றது. நல்லாட்சி அரசில் அமைச்சர் திகாம்பரத்தின் முயற்சியால் தனி வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்தலைத் தொடர்ந்து மேலும் பல அபிவிருத்தி திட்டங்களை பொகவந்தலாவை பிரதேசத்தில் முன்னெடுக்கவுள்ளோம். நோர்வூட் பொகவந்தலாவை பிரதான பாதை, கெம்பியன் லொயினோன் பாதை என்பன சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

நோர்வூட் பிரதேச சபையின் பொகவந்தலாவை பிரதேசத்திலுள்ள ஐந்து வட்டாரங்களையும் தமிழ் முற்போக்குக் கூட்டணி கைப்பற்றும் வகையில் வினைத்திறனுள்ள வேட்பாளர்களை நாம் களமிறக்கியுள்ளோம்.

ஆகவே இவர்களின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது - என்றார். (ந.ரி4)

கூட்டமைப்பும் ஈ.பி.டி.பியும் அரசின் ஒட்டுக் குழுக்களே

கஜேந்திரன் தெரிவிப்பு

அரசுடன், ஈ.பி.டி.பி.யினரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் ஒட்டுக்குழுக்களாக செயற்பட்டுகின்றனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

தீவகம் வேலனையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் புதியகட்சி அலுவலகம் நேற்றுத் திறக்கப்பட்டது இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது;

தீவகம் பகுதி மக்களின் வாக்குகளைப்பெற்று பல ஆண்டு காலமாக அமைச்சு பதவியை வகித்து வந்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மக்களை தொடர்ந்தும் வறுமை நிலையில் வைத்திருக்கவே எண்ணியிருந்தார் காரணம் அவர் அரசின் கைக்கூலியாக செயற்பட்டு வந்தமையே ஆகும்.

அதேபோல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி வடக்கு, கிழக்கு இணைப் புக்கு முஸ்லிம் மக்கள் விரும்பவில்லை என சம்பந்தன் தெரிவித்தும் முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் பகைமையாக்கி அரசியலை நடத்தி வருகின்றனர்- என்றார்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கின் அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டிய தருணத்தில் 27 ஆயிரம் கோடி ரூபா நிதியை பாதுகாப்பு செலவுக்கு வரவு செலவுத்தத்திட்டத்தில் நாடாளுமன்றத்தில் ஒதுக்குவதற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒத்துழைப்பு வழங்கி மத்திய அரசாங்கத்தின் முகவராக செயற்பட்டு ஆதரவளித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் பாரம்பரியமானவர்களிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் புத்த துறவியின் உடலை தமிழாராட்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட 14 பேரினதும் நினைவுத்தூபி அமைக்கப்பட்ட இடத்தில் எரித்தனர்.

இந்த செயற்பாட்டுக்கு கூட மக்கள் பிரதிநிதியாக இருக்கின்ற கூட்டமைப்பினர் எவ்வித அதிருப்தியையும் வெளியிடவில்லை என்றார். (ந.ரி4)

பிணைமுறி விவகாரம்:

கூட்டரசு இருக்கும்வரை உரிய தீர்வு கிடைக்காது

மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.26

கூட்டரசு இருக்கும் வரையில், மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக உரிய தீர்வு கிடைக்காது. இவ்வாறு முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பான நாட்டுப்பற்று வல்லுனர்களின் கருத்துக்களம் நேற்று கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

2008 , 2014 காலப்பகுதியில் மத்திய வங்கியில் பிணைமுறி மாத்திரமல்ல எதுவிதமான மோசடிகளும் இடம்பெறவில்லை. இக்காலத்தில் காணப்பட்ட மத்திய வங்கியின் சட்டத்திட்டங்களே அதற்கான காரணம்.

இந்த சட்டங்களை மாற்றிநிதியமைச்சரின் கீழ் இருந்த மத்திய வங்கியின் பொறுப்பை பிரதமரின் அதிகாரித்தின் கீழ் கொண்டுவந்தார்கள் அதன்பின்னரே இந்த பிணைமுறி மோசடிகள் இடம்பெற ஆரம்பித்துள்ளன

இலங்கை வரலாற்றின் பெரும் மோசடிக் குற்றச்செயலாக பிணைமுறி மோசடி அனைவராலும் பரவலாக விவாதிக்கப்படுகிறது. இதன்போது உண்மை நிலவரம் குறித்து அறியாதவர்களும் தம்மிடம் காணப்படும் குற்றச்செயலை மற்றவரில் பாரப்படுத்த முனைவோரும் 2008 2014 ஆண்டு காலப்பகுதியிலும் மத்திய வங்கியில் பிணைமுறி மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கூக்குரலிடுகின்றனர்.

அந்தக் காலப்பகுதியில் மத்திய வங்கியில் எதுவிதமான மோசடிகளும் இடம்பெறவில்லை. அக்காலகட்டத்தில் காணப்பட்ட மத்திய வங்கியின் சட்டவரைவுகளுக்கு அமைவாக எதுவிதமான மோசடிகளும் இடம்பெற வாய்ப்பில்லை. அதனாலேயே மிக சூட்சுமமாக நிதியமைச்சரின் கீழ் காணப்பட்ட மத்திய வங்கி தலைமை அமைச்சரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. சட்டவரைபுகள் மாற்றப்பட்டன.

அரச தலைவர் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையோரைக் கைது செய்ய உதவி புரியுமாறு தலைமை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இது எவ்வாறு உள்ளதெனில் திருடனை பிடிக்க திருடனின் தாயிடம் உதவி கோருவதை போலவே. இந்த மோசடியில் தலைமை அமைச்சரின் பங்கு என்னவென்றால், முதலில் அர்ஜுன மகேந்திரவை பதவியில் அமர்த்தியது. இரண்டாவது மத்திய வங்கியை பிரதமரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தது. மூன்றாவது அர்ஜுன மகேந்திரனை காப்பாற்றும் வகையில் ஐ.தே.க. அமைச்சர்கள் அனைவரும் நாடாளுமன்றில் கூச்சலிடுவது.

கூட்டரசு இருக்கும் வரையில், மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக உரிய தீர்வு கிடைக்காது. பிணைமுறி மோசடி தொடர்பாக அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையில் சில வெற்றிடங்கள் காணப்படுகின்றது. அவை குறித்து அறிக்கையில் சரியான விளக்கமில்லை. சில வாக்குமூலங்கள் குறித்து எதுவித பதிவும் காணப்படவில்லை. இவை பிணைமுறிவிசாரணை அறிக்கையில்காணப்படும் சில குறைப்பாடுகளே.

மோசடிகாரர்கள் குறித்து எதுவித கைது நடவடிக்கையோ அல்லது வழக்கோ பதியப்படவில்லை என்பதானது, ஜக்கிய தேசிய கட்சி தலைவர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சித் தலைவர் என அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் இருவரும் மோசடிக்காரர்களை பாதுகாக்க மேற்கொள்ளும் சூட்சும நடவடிக்கையே தவிர மோசடிக்கான தீர்வு அல்ல. இதனால் தான் மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டிய கடப்பாட்டில் நாமுள்ளோம். 2008 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியில் எதுவித மோசடிகள் இடம்பெறவில்லை.

அது குறித்து பிணைமுறி தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்படவுமில்லை. அவ்வறிக்கையில் 2008 ஆம் காலப்பகுதியிலும் இம்மோசடிகள் இடம்பெற்றிருக்கலாம் என எதிர்வு மாத்திரம் கூறப்பட்டுள்ளது. இது அக்காலத்திலும் மோசடி இடம்பெற்றுள்ளது என்பதற்கான உறுதிகூறல் அல்ல.

இக்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொள்ளுங்கள் எங்களையும் விசாரணைக்களுஅழையுங்கள். அதற்கு முன் குற்றவாளியாக அறிக்கை இனங்காட்டியுள்ளோரை கைது செய்யுங்கள்.

பொது மக்களின் அவதானத்தை பெற்றுள்ள இந்த மோசடி குறித்து இனிமேலும் ஏமாற்று சூட்சுமத்தை கையாள இயலாது என்றார். (ற-ரி2,61)

த.தே.கூ. வேட்பாளர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்.ஜன.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவர் நேற்று முன்தினம் காலை பண்ணை மீன் சந்தைப் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த வேட்பாளரை தாக்கியதுடன் அவரை ஒரு மணித்தியாலங்கள் சந்தைக்குள் தடுத்துவைத்து இருந்த வேளை யாழ்பாணம் பொலிஸாரால் மீட்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

இனந் தெரியாத சிலர் அவரைத் தடுத்துவைத்து தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டு வேட்பாளரைத் தாக்கியுள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக தனது நிலையை யாழ்பாணம் பொலிஸ் நிலையத்திற்கும் 119 இற்கும் தனது கைப்பேசியூடாக முறைப்பாடு செய்தார். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் வேட்பாளரை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்

வேட்பாளரைத் தாக்கிய இருவர் கைது

நுவரெலியா.ஜன.26

டயகம பகுதியில் வேட்பாளரின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அக்கரப்பத்தனை பிரதேச சபையின் கீழ் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிடும் பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் ஒருவரே மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த வேட்பாளர் டயகம பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார் என டயகம பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2)

இன்சுவை யாழ்.ஓடியல் கூழ்
தினமும் மு.ப. 11 மணிமுதல்
யாழ் பாடி,
49 - 51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868,
(CS 13184/15) 0777 360 353, 075 9875 800

அம்பகமுவவிலும் தபால் மூல வாக்களிப்பு



நுவரெலியா.ஜன.26

எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று பல இடங்களில் இடம் பெற்றது.

அம்பகமுவ பிரதேச செயலக காரியாலயத்திலும் நேற்று இடம்பெற்றது.

இதில், கல்வித்துறை சார்ந்தவர்கள், போக்குவரத்து ஊழியர்கள், பிரதேச சபை ஊழியர்கள், அரச பணியார்கள் போன்றோர் வாக்களித்தனர். பெப்ரல் அமைப்பு உட்பட சிவில் அமைப்புகள் கண்காணிப்பில் நடைபெற்ற இந்த தபால் மூல வாக்களிப்பில் அம்பகமுவ பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 150 பேர் வாக்களித்தனர். (ற-ரி2)

சர்வாதிகாரமாகக் கட்சியை வழி நடத்துகிறார் ஹக்கீம்

ஹஸன் அலி தெரிவிப்பு

அம்பாறை,ஜன.26

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் எடுக்கப்படுகின்ற முடிவுகள் யாவும் ஒரு தனி நபரால், சர்வாதிகாரப் போக்கினால்தான் எடுக்கப்படுகின்றன. அந்த நபர் வேறு யாருமில்லை ரவூப் ஹக்கீம் என்ற நபரேயாகும். இதை யாராவது மறுப்பார்களாயின் அவர்கள் மக்கள் மத்தியில் என்னுடன் பேச வரட்டும் என்று சவால் விடுக்கின்றேன்.

இவ்வாறு மு.காவின் முன்னாள் செயலாளர் நாயகமும், முஸ்லிம் கூட்டமைப்பின் தலைவருமாகிய எம்.ரீ.ஹஸன் அலி தெரிவித்தார். அட்டாளைச்சேனையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அட்டாளைச்சேனை மத்திய குழு உள்ளிட்ட பல பிரதேசங்களின் மத்திய குழுவின் தீர்மானத்தின் படி ஐக்கிய தேசியக் கட்சியில் நாம் இணைந்து போட்டியிடக் கூடாது தனித்துத் தான் போட்டியிடவேண்டும்என்று எடுக்கப்பட்டதீர்மானத்தை கட்சிக்கும், அதன் தலைமைக்கும் முன் வைக்கப்பட்டபோது அந்தத் தீர்மானங்கள் ரவூப் ஹக்கீம் என்ற தனி நபரால் நிராகரிக்கப்பட்டது.

தீர்மானம் எடுப்பவர் யாருமில்லை அவர் மட்டும்தான் என்பதை உயர்பீட உறுப்பினர்களும், நாம் வாக்களித்து அனுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் போன்ற எல்லோரும் அறிவார்கள். இவ்வாறான ஒருவரின் நடவடிக்கைகளை தோற்கடிப்பதற்காகவும், எம்மக்களை பிழையாக வழி நடத்திச் செல்கின்ற சர்வாதிகாரியான ரவூப் ஹக்கீமிடம் மக்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்ற நோக்குக்காகவே நாங்கள் வெளியேறினோம். என்றார். (ற-ரி4)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 19 . 08 . 1962
உதிர்வு 27 . 12 . 2017

கடந்த 27.12.2017 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தெய்வம்

அமரர் கந்தையா சிறிகாந்தன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.01.2018) நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.11/12, பிள்ளையார் கோயிலடி,
தாவடி, கொக்குவில். (CS/13264)(11)
குடும்பத்தினர்.

முச்சக்கரவண்டிச் சாரதி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன.26

பயணிகளை இறக்கிவிட்டுவந்த முச்சக்கரவண்டியை வழிமறித்த நால்வர் அடங்கிய கும்பல் சாரதியை மோசமாகத் தாக்கி விட்டு தப்பியோடியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் இடம்பெற்றள்ளது.

தாக்கதலுக்கு இலக்கான மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த பிரபாகரன் மதீஸன் (வயது-27) சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் நவரத்தினம் துளசிதரன்
அவர்களின் அன்புத் தந்தை

அண்ணாமலை நவரத்தினம்

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

நாகமுத்தன் கந்தையா

புங்குடுதீவு-4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 1 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்தன் கந்தையா நேற்று (25.01.2018) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்தன் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களானநாகநாதன்காமாட்சி தம்பதிகளின்அன்புமருமகனும்நாகம்மாவின் அன்புக் கணவரும் லதா. ஜெயா, சுதா, மோகன், சுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை மு.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், கேரதீவு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை , உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(C / 9123,160)

மரண அறிவித்தல்

விசுவலிங்கம் சோமசுந்தரம்

(வேலணை மேற்கு 08, வேலணை)



வேலணைமேற்கு08ஆம்வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் சோமசுந்தரம் நேற்று (25.01.2018) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் கலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் மகாலெட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் கோமதியின் அன்புக் கணவரும் விஜிதா, விஜயரூபன், பத்மரூபன் (கிராம அலுவலர், J/28,J/29, புங்குடுதீவு), சாந்தரூபன், திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவலிங்கம், தர்சிகா, துஷாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்,வேலணை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புமாமனாரும் காலஞ்சென்றவர்களான காந்திமதி, இந்துமதி, விசாகரெட்ணம், வளர்மதி மற்றும் கருணாநிதி, செல்வநிதி (மலேசியா), பூமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிஷா, விதுர்சன், பபிஷன், டாரணிஜா, சபரீஸ், ஷபியா, கவிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலணை மேற்கு, 08, வேலணை (J 9124,16)

தகவல்: குடும்பத்தினர்.
077 983 3217, 077 5247154

தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒட்சிசன் சிலிண்டர் பற்றாக்குறை

நோயாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜன.25

வடக்கில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவைக் கொண்டுள்ள ஒரேயொரு ஆதார வைத்தியசாலையான தெல்லிப்பழை வைத்தியசாலையில், நோயாளர்களுக்கு வழங்குவதற்கான ஒட்சிசன் சிலிண்டருக்கு பற்றாக்குறை நிலவுகின்றது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக இந்தப் பற்றாக்குறை தொடர்கின்றது என்று வைத்திய சாலைத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வைத்தியசாலைக்கு தினமும் பெருமளவான நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றார்கள். வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக் கூடமும் இயங்குகின்றது.

இதனால் நாள் தோறும் 30 ஒட்சிசன் சிலிண்ட ருக்கான தேவை இருக்கின்றது. வைத்தியசாலையில் 40 தொடக்கம் 50 வரையிலான மருத்துவப் பிரிவுகள் உள்ளன.

ஒப்பீட்டளவில் அதிகளவான மருத்துவ பிரிவுகளை இந்த வைத்தியசாலை கொண்டுள்ளது. ஆகவே அதிகளவான சிலிண்டர்கள் தேவை.

ஆனால் கடந்த இரண்டு வார காலமாக வைத்தியசாலைக்கு மிகக் குறைந்த அளவான ஒட்சிசன் சிலிண்டரே யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் வழங்கப்படுகின்றது.

நோயாளர்களின் தேவைகளை முழுமை செய்ய அவை போதவில்லை. தற்காலிக ஏற்பாடாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்தே சிலிண்டர் பெறப்படுகின்றது.

பருத்தித்துறையில் சிலிண்ட ருக்கான வாயு நிரப்பும் பிரிவு உள்ளது. ஆனால் அங்கு நிரந்தரமான பணியாள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது டெங்கு நிலைமை காரணமாக அதிகளவான நோயாளர்கள் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் சிலிண்டர் தேவையாக உள்ளது. வாயு நிரப்பு நிலையத்தில் பணியாற்றும் ஒருவரை நிரந்தரமாக நியமிக்க வேண்டிய தேவை உள்ளது.

அவ்வாறு ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டால் வருடம் ஒன்றுக்கு 6 லட்சம் வரையில் மட்டுமே சம்பளம் வழங்க வேண்டி இருக்கும். ஆகவே நிரந்தரமாக பணியாள் இருந்தால் தேவையின்போது வாயு உடனடியாக நிரப்பிக் கொள்ளலாம்-என்றனர்.

தட்டுப்பாடு நிலவியதுதான். அது தற்போது முழுமைப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

பருத்தித்துறை வைத்தியசாலையில் உள்ள ஒட்சிசன் நிரப்பு நிலையத் தொகுதியில் வயர் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாகவே இந்தத் தாமதம் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

(எ-5)

வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

காரைநகர்,ஜன.26

காரைநகர் மணிவாசகர் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் சபைத் தலைவரும் யாழ்ற்ரன் கல்லூரி ஓய்வு நிலை அதிபருமான வே.முருகமூர்த்தி தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

சபையின் தலைவராக ஓய்வு பெற்ற காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் மு.சு.வேலாயுதபிள்ளை தெரிவு செய்யப்பட்டார். சபையின் உப தலைவர்களாக ஓய்வு நிலை அதிபர் க. தில்லையம்பலம், ந.பாரதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி வீரமங்கை யோகரத்தினம், வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை அதிபர் க.நோர்த்திரானந்தன், காரைநகர் இந்துக் கல்லூரி உப அதிபர் தெ.லிங்கேஸ்வரன், காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய ஆசிரியர் தே.சத்தியானந்தன், கூட்டுறவுத் திணைக்களப் பரிசோதகர் சு.அகிலன், ஓய்வு நிலை வங்கியாளர் து.நாகேந்திரம், பனை அபிவிருத்திச் சபையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் நா.பாலகிருஸ்ணன், கனகசபாபதி, சி.சோதிலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கணக்குப் பரிசோதகர்களாக வே.சபாலிங்கம், ஆசிரியர் வே.உருத்திரசிங்கம் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

(எ-250)

மகாகும்பாபிஷேகம்

வடமராட்சி,ஜன.26

பருத்தித்துறை புலோலி வடமேற்கு காந்தியூர் வற்றாப்பளை திருவருள்மிகு கண்ணகை அம்மன் கோவில் புனராவர்த்தன ஏக குண்ட பட்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட் கிழமை காலை 7.39 மணிமுதல் 8.02 மணி வரை சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிமுதல் மாலை 4.45 மணிவரை இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை சிவஶ்ரீ ம.ச. வேதாரண்யக்குருக்கள் நல்லாசியுடன் பச்சிலைப்பள்ளி அம்பாள் திருக்கோவில் முதன்மைக் குரு சிவஶ்ரீ பிரபாகரக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார். தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-173)

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம்,ஜன.26

வண்ணார்பண்ணை, நாவாந்துறை பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது ஆயிரத்து 300 வரையிலான குடியிருப்புக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்த நடவடிக்கை கடந்த 17, 18ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

நாவாந்துறைப் பிரதேசத்தில் 683 குடியிருப்புக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஏழு குடியிருப்பாளர்களின் சுற்றாடல்களில் நுளம்பு குடம்பிகள் காணப்பட்டன. குடியிருப்பாளர்க ளுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வண்ணார்பண்ணையில் 614 வரையிலான குடியிருப்புக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 194 குடியி ருப்புக்கள் நுளம்பு பெருகக் கூடிய இடமாக காணப்பட்டன. அந்தக் குடியிருப்புச் சுற்றா டல்களை உடனடியாக துப்பரவு செய்யுமாறு கோரப்பட்டது சோதனை நடவடிக்கையில் சுகாதார தொண்டர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் போன்றோர் கலந்து கொண்டனர். (எ-17)

சாவகச்சேரி

மருத்துவமனைக்கு வருகை தந்த மாகாண சுகாதார அமைச்சர்

சாவகச்சேரி, ஜன.26
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் பதவியேற்ற பின்னர் முதல்தடவையாக சாவகச்சேரி ஆதார மருத்துவ மனைக்கு நேற்றுமுன்தினம் வருகை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
வருகை தந்த அமைச்சர், மருத்துவமனை விடுதிகளில் உள்ள நோயாளர்களைப் பார்வையிட்டதுடன் மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் மூன்று மாடிக் கட்டடமான விபத்து சிகிச்சை கட்டடத்தையும் பார்வையிட்டுச் சென்றார் என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

மன். ஜோசப்வாஸ் நகர் மீனவர்களின்

பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் விசமிகளால் சேதம்

மன்னார், ஜன.26
மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் மீனவர்களின் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி வலைகள் பாப்பாமோட்டை கடற்பரப்பில் வைத்து இனம் தெரியாத நபர்களால் கடந்த சில தினங்களாக முழுமையாக சேதப்படுத்தப்பட்டு வருகின்றன என பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
"மன்னார் கோந்தைப்பிட்டி கடற்கரையில் இருந்து கடலுக்குச்சென்று மீன் பிடிப்பதற்காக கடலில் போடப்பட்டிருந்த தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் மீன வர்களின் பெறுமதி மிக்க மீன் பிடி வலைகளே கடந்த சில தினங்களாக இனம் தெரியாதவர்களால் சேதப்படுத் தப்பட்டுள்ளன.
விடத்தல் தீவு மற்றும் பாப்பாமோட்டை கடற்பிரதேசத்தில் தோட்டவெளி யோசப் வாஸ் நகர் கிராம மீனவர்கள் பல வரு டங்களாக மீன்பிடியில் ஈடுபட்டு வரு கின்றனர்.
சிறகு வலைத் தொழிலானது விடத்தல் தீவு பாப்பாமோட்டை கடற்பிரதேசத்தில் மாத்திரமே மேற்கொள்ள முடியும். குறித்த தொழிலை மேற்கொள்ளும் போது எமக்கும் பாப்பாமோட்டை மீன வர்களுக்கும் இடையில் தர்க்கங்கள் ஏற்படுவது வழமை. எனினும் பிரச்சி னைகளை சங்கத்தினூடாகவும், மீன் பிடி தினைக்களத்தினூடாகவும் கதைத்து தீர்த்துக்கொள்ளுவதும் வழமை.
இந்த நிலையில் சுமார் 8 இலட்சம்

ரூபாய்க்கும் அதிகமான பெறுமதியு டைய மீன்பிடி வலைகள் கடலில் வைத்து கடந்த சில தினங்களாக வெட் டப்பட்டு முழுமையாக சேதப்படுத்தப்பட் டுள்ளன. குறித்த வலைத்தொகுதிகள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன. கடலை யாரும் உரிமை கோர முடியாது. இது எங்களு டன் பேசி தீர்த்துக்கொள்ள வேண்டிய விடயம். அவ்வாறில்லாமல் வலைத் தொகுதிகள் சேதப்படுத்தப்பட்டுள்ளமை வேதனையை ஏற்படுத்தியுள்ளது- என்றனர். பாதிக்கப்பட்ட ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் தமது பாதிப்புக்கள் குறித்து அடம்பன் பொலிஸ் நிலை யத் திலும் முறைப்பாட்டை பதிவு செய்துள் ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.
(எ-56)

இல்ல மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்.ஜன.26
யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கல்லூரி முதல்வர் தலைமை யில் இடம்பெறும் போட்டியில் முத ன்மை விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிரந்த ரச் செயலாளர் வே. சிவஞான சோதி கலந்து கொள்ளவுள்ளார். அனைவரையும்கலந்துகொள்ளு மாறு பாடசாலைச்சமூகம் தெரி வித்துள்ளது. (எ-21)

கால்கோள் விழா

சாவகச்சேரி,ஜன.26
மீசாலைநாவலர் முன்பள்ளியில் புதிய மாணவர்களை இணைக் கும் கால்கோள் விழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெ றும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
முன்பள்ளி அசிரியை தே.ஜெய ராஜன் தலைமையில் நடைபெ றும் நிகழ்வில் முதன்மை விருந் தினராக ஓய்வுநிலை அரச அலு வலர் அ.பெ.சதாசிவமும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபா கரனும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

அகில இலங்கை ரீதி யில் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் சுகாதார அமைச்சும், இலங்கை நீரிழிவு சம் மேளன அகம்சுரப்பியி யல் கல்லூரியும் இணைந்து நடத்திய கட்டுரைப்போட்டியில் மத்திய பிரிவில் யாழ்ப் பாணம் வேம்படி கல் லூரிமாணவிஅம்பிகை சண்முகலிங்கன்தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்தார். கொழும்பு தாமரைத்தடாக கலை அரங்கில் சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்னதலைமையில்கூந்த 20ஆம் திகதி நடை பெற்ற விருது வழங்கு கும் நிகழ்வில் விருது வழங்கி மதிப்பளிக்கப் பட்டார். (எ-ம)

தைப்பூச பெருமஞ்ச திருவிழா

இணுவில்.ஜன.26
வரலாறு பிரசித்தி பெற்ற இணு வில் கந்தசுவாமி கோவிலில் தைப்பூசமஞ்சத்திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை நடைபெற வுள்ளது.
அன்றைய தினம் மாலை 6 மணிக்கு சக்தி தரிசனம் நடை பெறவுள்ளதால் தைப்பூச நிகழ்வுகள் யாவும் முன்கூட்டியே நடைபெறவுள்ளது. பகல் 1.30 மணிக்கு மஞ்சத்திருவிழா நடைபெறவுள்ளது. அதிகாலை 4 மணிக்கு பாற்குடப்பவனி இணுவில் மருதானாமடம் பல்ல ப்பர் வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும்.
காலை 9 மணிக்கு மாபெரும் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி 12 மணிக்கு முடிவடையும். 12.30 மணிக்கு உலகப்பெரு மஞ்சத்தில் சண்முகப்பெருமான் வீதியுலா வருவார். பாற்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் எதிர்வரும் 30ஆம் திகதி அன்று முற்பதிவு செய்து கொள்ளவும். (எ-21)

பதிவேட்டை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம்.ஜன.26
நல்லூர் கமநல சேவைகள் நிலைய அதி கார இடப்பரப்புக்கு உட்பட்ட கமத்தொழில் காணிகளின் விவரங்கள் உள்ளடங்கிய பதிவேடு தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. இது நல்லூர் கமநல சேவைகள் நிலையத் தில் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்காக காட்சிக்கு வைக்கப்படவுள் ளது என்று நல்லூர் கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தி யோகத்தர் சு.சத்தி யேந்திரன் தெரிவித் தார்.
பதிவேட்டில் ஏதேனும் திருத்தம் செய்ய வேண்டியிருப்பின் அதற்குரிய விண்ணப் பப் படிவத்தைப்பெற்று முழு மைப்படுத்தி 14 நாள்களுக்குள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து திருத்தங்கள் மேற்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-ரி)

கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்.ஜன.26
கூவில் கீரிமலை அண்ணா மகேஸ்வரர் தேவஸ்தானத்தின் வசந்த மண்டப கும்பா பிஷேக பூசை புதிதாக அமைக்கப்பெற்ற வசந்த மண்டபத்தில் இன்று வெள்ளிக்கி ழமை காலை 09.23 முதல் 11.06 மணி வரை நடைபெறவுள்ளது.
அனைத்து அடியார்களையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (எ-4)

கும்பாபிஷேகம்

வடமராட்சி.ஜன.26
துன்னாலை தெற்கு கலிகைச் சந்தி திருவருள்மிகு கலியுக வரத கந்தசுவாமி திருக்கோவில் புனராவர்த்தன அஸ்டபந்தன நவகுண்ட மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட் கிழமை காலை 8.30 மணிமு தல் 10.40 மணிவரையிலான சுப வேளையில் நடைபெறவுள் ளது.
எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 10 மணிமுதல் மறுநாள் 28 ஆந்திகதி ஞாயிற்றுக்கி ழமை மாலை 3 மணிவரை இடம்பெறும்.
அல்வாய் மாறம்புலம் மாணிக் கப்பிள்ளையார் திருக்கோவில் முதன்மைக் குரு பிரம்ம ஸ்ரீ உஸ்வரக்குருக்கள் கும்பாபி ஷேகத்தை நடத்திவைப்பார். தொடர்ந்து 12 தினங்கள் மண்ட லாபிசேகம் நடைபெறும்.
(எ-173)

வீதியைக் கடக்க முற்பட்ட

வயோதிப பெண்ணை மோதியது உந்துருளி

வடமராட்சி,ஜன.26
சாலையைக் கடக்க முற்பட்ட வயோதிபப் பெண் ஒருவரை முட்டி மோதியது மோட்டார் சைக்கிள். பின்னர் எதிரே வந்து கொண்டிருந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடனும் மோதி விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் வடமராட்சி நெல்லியடி சந்தையடியில் நேற்று முன்தினம் மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றது.
இதில் படுகாயமடைந்த வயோதிபப் பெண் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற் றப்பட்டுள்ளார். படுகாயமடைந்தவர் நெல்லியடி மத் தோனி, கரவெட்டியைச் சேர்ந்த ச.சரஸ்வதி (வயது-65) என்பவராவார். (எ-4)

கலை, இலக்கிய ஆற்றுகைகளின் சங்கமம் நிகழ்வு

யாழ்ப்பாணம்.ஜன.26
யாழ்ப்பாண இலக்கியக் குவியத்தின் ஏற் பாட்டில் கலை, இலக்கிய ஆற்றுக்க களின் சங்கமம் (கலைவெளி2) நிகழ்வு வேல் நந்தகுமார் தலைமையில் தும் பளை, பருத்தித்துறையில் அமைந்துள்ள அஞ்சலியகத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்று சங்கத்தின் தலைவர் க.சோதிதாசன் தெரிவித்தார்.
நடனம், வில்லிசை, கவிதை, நூல் அறி முகம், தனிக் கவிதை, ஓரங்க நாடகம் போன்ற கலாசார நிகழ்ச்சிகளுடன் 'யார்க் கெடுத்துரைப்போம்' என்ற தலைப்பில் சிறப்புக்கவியரங்கமும்நடைபெறும்என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-ரி)

கசிப்பு உடைமையில் வைத்திருந்த நால்வருக்கு ரூ.35ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி,ஜன.26
கசிப்பு உடைமையில் வைத்தி ருந்த நான்கு பேருக்கு சாவகச் சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தி னம் 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது எனத் தெரிவிக் கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக் கல் செய்யப்பட்ட வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதி வான் இருவருக்கு தலா 10 ஆயி ரம் ரூபா வீதமும் இருவருக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதமும் தண்டம் விதித்தார் என வும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

பிணைமுறி மோசடியுடன் ஐ.தே.க. எம்.பிக்களுக்கு நேரடித் தொடர்பா?

திலக் மாரப்பன குழுவின் அறிக்கை அடுத்த வாரம் ரணிலிடம் கையளிப்பு

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு தொடர்பிருக்கின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அடுத்த வாரம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட மேற்படி விசாரணைக் குழுவின்தலைவராகஅயலுறவுத்துறைஅமைச்சர் திலக் மாரப்பன செயற்பட்டுவருகிறார்.

பிணைமுறி மோசடியுடன் ஐக்கிய தேசியக் கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்கள்சிலருக்கு தொடர்பிருக்கின்றது எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த மோசடியின் பிரதான சூத்திரதாரியாகக் கருதப்படும் அர்ஜுன் அலோசியஸுடன் இவர்கள் அலைபேசி ஊடாக தொடர்பைப் பேணி வந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அண்மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தின் போது, திலக் மாரப்பன தலைமையில் விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

மோசடியான முறையில் இடம்பெற்றுள்ள பிணைமுறி ஏலத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தொடர்புபட்டுள்ளனரா என்பதை ஆராய்வதே இக்குழுவின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. (5)

போலி வாக்குச் சீட்டுடன் வேட்பாளர் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜன. 26

பெண்வேட்பாளர் ஒருவர் போலி வாக்குச் சீட்டுடன் தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் எச்சரிக்கப்பட்டு விடுவிக் கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கரைச்சிப் பிரதேச சபைக்குப் பரந்தன் வட்டாரத்தில் போட்டியிடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பரந்தன் பகுதியில் சட்டவிரோதமாக வியாபார நிலையம் ஒன்றை அலுவலகமாக பயன்படுத்தியமை மற்றும் போலி மாதிரி வாக்குச் சீட்டுக்களை வைத்திருந்தமை போன்ற குற்றச் சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. அவர் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப் பட்டுள்ளார். அவரிடம் இருந்த போலி வாக்குச் சீட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(4,35)

ஓ.எம்.பி...

டையில் கிடைத்த விண்ணப்பங்களில் இருந்து ஆணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அரச தலைவருக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், அதில் இடம்பெற்றிருந்த ஆணையாளர் ஒருவரை ஏற்றுக்கொள்ள மறுத்த அரச தலைவர் புதியவர்களைப் பரிந்துரைக்குமாறு அரசமைப்புச் சபையிடம் கேட்டிருந்தார். அதன்படி புதிய ஆணையாளர்களின் பெயர் பட்டியலை அரசமைப்புச் சபை ஏற்கனவே அரச தலைவருக்கு வழங்கிவிட்டது. இருப்பினும் அவர்களுக்கான நியமனமும் இன்னும் வழங்கப்படவில்லை.

இப்போது உள்ளூராட்சித் தேர்தல் காலம் என்பதால் நியமனம் எதனையும் வழங்கமுடியாது என்று அரச தலைவர் தரப்பில் இருந்து காரணம் கற்பிக்கப்படுகிறது.

இந்த அலுவலகத்தை நிறுவுவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் அது இன்னும் இயங்க ஆரம்பிக்கவில்லை. இந்த அலுவலகத்தை உருவாக்கி இயக்குவதாக 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அரசு உறுதியளித்தது. எனினும் அதனை நிறைவேற்றுவதில் மிகவும் மெத்தனமாகவே செயற்படுகின்றது என்று மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

வடக்கில் காணாமற்போனவர்களின் உறவினர்களோ இந்த அலுவலகத்தை நிராகரிக்கின்றனர். பன்னாட்டு சுயாதீன விசாரணை ஒன்றே தமக்கு வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். (உ-5)

கடற்படைக்கு...

அவர்கள் வலியுறுத்தினர்.

"கடற்படையினர் முகாம் அமைத்து தங்கியிருக்கும் பகுதியை அண்டிய ஏனைய காணிகளும் சுவீகரிக்கப்படும் என்று காணியின் உரிமையாளர் ஒருவருக்கு கடற்படையினர் காணித் திணைக்களத்தினூடாக கடிதம் அனுப்பியுள்ளனர். அதையடுத்தே ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தோம் . கடற்படையினர் தற்போது நிலை கொண்டுள்ள இரண்டு பரப்பு காணியுடன் 25 குடும்பங்கள் வாழ்ந்து வந்த 3 ஏக்கர் காணி கடற்படையின் முகாமைச் சுற்றி உள்ளது. இந்தக் காணியில் குடியிருக்க முடியாத நிலை ஏற்படுமோ என்று அச்சமாக இருக்கின்றது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

"வேண்டாம் வேண்டாம் காணி சுவீகரிப்பு வேண்டாம்", "எம்மைச் சொந்த இடத்தில் இருக்க விடு", "நாங்கள் எங்கள் நிலத்தில் வாழ வேண்டும்" ஆகிய பதாதைகளைத் தாங்கிய வாறு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

காணி சுவீகரிப்பை நிறுத்த வேண்டும் எனக் கோரிய மனு ஒன்றையும் கிராம அலுவலரிடம் அவர்கள் கையளித்தனர். (ற-ரி5,26)

இந்திய...

குற்புபு தெரிவித்தது. கைது செய்யப்பட்டவர்கள் தமிழ்நாட்டின் புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

2017ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட 84 பேருடன், இந்த ஆண்டில் கைது செய்யப்பட்ட 29 பேர் மற்றும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட 8 பேர் என இந்திய மீனவர்கள் 141 பேர் இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ற-8)

தேர்தலுக்கு...

வித்துள்ளார்.

பிணைமுறி விசாரணை அறிக்கை மற்றும் பெரிய ஊழல் மோசடி விசாரணை அறிக்கை ஆகியவை நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் மீதான விவாதம் அடுத்த மாதம் 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் நடத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையிலேயே. பாணந்துறை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்தப் பகிரங்க சவாலை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

மத்திய வங்கி ஊழல் மற்றும் பெரிய இலஞ்ச ஊழல், மோசடி என்பவற்றை மேற்கொண்டு நாட்டின் அரச வளங்களையும் மக்களின் பணத்தையும் கொள்ளையிட்டவர்கள் யார் என்று மக்கள் நன்றாக அறிவார்கள். ஒருபோதும் உண்மையை மக்களிடமிருந்து மறைத்து வைக்க முடியாது.

மத்திய வங்கி பிணைமுறி ஆணைக்குழு அறிக்கை மற்றும் பெரிய இலஞ்ச ஊழல் மோசடிகளைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு அறிக்கை என்பவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கூச்சலிட்டவர்கள் அந்த அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் ஊழல்வாதிகளின் கூட்டமைப்பொன்றினை கட்டியெழுப்பி அவ்வறிக்கை பற்றிய விவாதத்தில் ஈடுபடுவதை தாமதித்து வருகின்றனர்.

இந்த ஆணைக்குழு அறிக்கைகள் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்தினம் ஊழல்வாதிகளின் கூட்டமைப்பு பொரளையிலுள்ள வீடொன்றில் சந்தித்து கட்சி, நிறம், இனம் மற்றும் மொழி பேதமின்றி தமது ஊழல் செயற்பாடுகளை மறைப்பதற்காக ஒன்றிணைந்துள்ளது.

அந்த அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டால் பெரும்பாலானோரின் தவறுகள் நாட்டிற்கு வெளிச்சமாகும். எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறும் தேர்தலுக்கு முன்னர் முடியுமானால் ஒரே ஒரு தினமாவது அவ்வறிக்கை மீதான விவாதத்தை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக எதிரணியினரால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த அதற்காக வாக்களிக்கவோ, அன்றைய தினம் நாடாளுமன்றத்துக்கோ வருகை தரவே இல்லை. நாடாளுமன்றத்துக்கு வெளியேயிருந்து ரவி கருணாநாயக்கவுக்கு வாழ்த்துக்கூறிய விதம் தொடர்பாக நான் தெரிவித்தமைக்கு பதிலளிக்கும் வகையில் அத்தகையதொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவில்லை என்று முன்னாள் அரச தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அன்றைய ஹன்சாட் பதிவுகளின்படி முன்னாள் அரச தலைவர் மகிந்த நாடாளுமன்றத்துக்கு வரவில்லை. மக்களை ஏமாற்றுவதற்கோ, திசை திருப்புவதற்கோ எந்தவொரு அரசியல் கட்சிக்கும் முடியாது. சட்டத்தின் முன்னிலையில் சகலரும் சமமாக கருதப்படுவதுடன் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட சகலரும் குற்றவாளிகள் ஆக்கப்படுவார்கள் -என்றார். (5)

கடற் பன்றியின்...

னர் அதனைக் கட்டி இழுத்து வந்து கரையேற்றினர். அது ஒரு கடற்பன்றியின் உடல் என்பதை அடையாளம் கண்டனர். ஆய்வுகளின் பின்னர் அது புதைக்கப்பட்டது. (உ-21)

தேராவில்...

என்ற குற்றச் சாட்டின் கீழ் அந்த வீட்டில் இருந்வர் மற்றும் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான தபால் ஊழியர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தேசியக் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் என்று ஊர் மக்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வாக்காளர் அடையாள அட்டைகள் அஞ்சல் திணைக்களத்தால் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்திலும் விநியோகப் பணி மும்முரமாக நடைபெற்று வருகின்றது. அஞ்சல் ஊழியர்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

விசுவமடுதேராவில்பகுதியில்விநியோகத்துக்கு என அனுப்பப்பட்ட வாக்களார் அட்டைகளில் பலவே நேற்று மீட்கப்பட்டன.

புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலை அடுத்து நேற்றுக் காலை குறித்த வீட்டுக்குச் சென்ற பொலிஸார், தேர்தல் திணைக்கள அதிகாரிகள் வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் ஆகியோரால் வாக்காளர் அட்டைகள் மீட்கப்பட்டன.

"விசாரணைகளில் வாக்காளர் அட்டைகளை வைத்திருந்த நபர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் எனத் தெரியவந்துள்ளது" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(உ-21,ரி3,35)

காணி...

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டச் செயலர்கள், மாவட்ட படைத் தளபதிகள், அரச தலைவரின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, பாதுகாப்பு அமைச்சின் செயலர், இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடல் அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

விடுவிப்பதற்கு படையினர் ஏற்கனவே இணக்கம் தெரிவித்த காணிகள்கூட இன்னும் விடுவிக்கப்படவில்லை என்று கூட்டத்தில் மாவட்டச் செயலர்களும், அரச தலைவரின் செயலரும் சுட்டிக் காட்டினர். அது தொடர்பாகக் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த இராணுவத் தளபதி இணங்கிக்கொண்ட காணிகள் விடுவிக்கப்படும் என்றும், இராணுவத்தினரின் பாவனையில் இல்லாதபோதும் அவர்கள் வசமுள்ள காணிகளில் பலவும் விடுவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் பாவனையில் இல்லாத போதும் அவர்கள் வசம் உள்ள காணிகளை அடையாளப்படுத்த அடுத்த வாரம் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் செல்லவுள்ள தாகவும் இராணுவத் தளபதி அப்போது தெரிவித்தார்.

முகாம்களை இடம்மாற்றுவதற்கான நிதியைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிக்கலே தாமதத்திற்குக் காரணம் என்றும் இராணுவத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில இடங்களில் முகாம்களை இடமாற்றுவதற்கு கோரிய நிதியில் அரைவாசி நிதியே வழங்கப்பட்டதாகவும், எஞ்சிய நிதியையும் விடு வித்தால் முகாம்களை முழுமையாக இடமாற்ற முடியும் என்றும் இராணுவத்தினர் சந்திப்பில் குறிப்பிட்டனர். (உ-5)

புதிய...

அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிற தீர்மான வரைவை உறுப்பினர் து.ரவிகரன் நேற்று மாகாண சபையில் முன்வைத்தபோது தவராசா இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:

குடியேற்றம் என்பதை நாம் அரச குடியேற்றம், அத்து மீறிய குடியேற்றம் என்று இரண்டாக பிரிக்கலாம். அத்து மீறிய குடியேற்றம் என்பது சட்ட ஒழுங்கு பிரச்சினை சார்ந்தது. அவ்வாறான குடியேற்றங்களை தடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அதனை நாம் செய்யாமல் விடுத்துவிட்டு எல்லாம் தாம்பாளத்தில் கிடைக்கும் என்று இருந்தால் ஒன்றுமே நடக்காது.

1948ஆம் ஆண்டு வடக்கு- கிழக்கில் இருந்த இனப்பரம்பலுக்கும் இப்போதைய இனப்பரம்பலுக்கும் இடையில் பல வித்தியாசங்கள் உள்ளன. முன்பைவிட இப்போது இனப்பரம்பல் அதிகரித்துள்ளது. இதற்கு அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களே காரணம்.

இந்தப் பிரச்சனைக்கு நாம் இப்போது இருக்கின்ற அரசமைப்பை வைத்துக் கொண்டு எதனையும் செய்ய முடியாது. எனவே நாம் அரசமைப்பை மாற்றி அமைக்கவேண்டும். சந்திரிகாவின் அரசமைப்பு முன்மொழிவில் இதற்கான ஏற்பாடுகள் இருந்தன. ஆனால் நாம் அதனைத் தவறவிட்டுவிடோம்.

இப்போது வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கையில் காணிப் பிரச்சினைக்குத் தீர்வினை காணக்கூடிய வகையில் ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் எங்களில் பலர் இடைக்கால அறிக்கையை முழுமையாக வாசிக்காமல், அதில் எதுவும் இல்லை என்று கூறி வருகின்றனர்.

வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கையில், காணி பகிர்ந்தளிப்பு என்ற விடயத்தில், அரசமைப்பு ஆரம்பமான பின்னர் காணிகளில் குடியேற்றத் திட்டங்களில் முன்னுரிமையானது காணியற்ற நபர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படி வழங்கும் போது முதலில் சம்பந்தப்பட்ட மாவட்டத்தினை சேர்ந்த, சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவோர் உப பிரிவினையும் சேர்ந்தவர்களுக்கும் இரண்டாவதாக, சம்பந்தப்பட்ட மாவட்டத்தினை சேர்ந்தவர்களுக்கும், மூன்றாவதாக சம்பந்தப்பட்ட மாகாணத்தினைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்படவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. நான்காவதாகவே ஏனைய நபர்களுக்கு வழங்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனை முழுமையாக வாசிக்காமல் சிலர் குறைகூறி வருகின்றனர். இருக்கின்ற அரசமைப்பினால் நாம் எதுவுமே செய்ய முடியாத நிலையில், புதிய அரசமைப்பின் ஊடாகவே நாம் பிரச்சினைக்குத் தீர்வினைக் காணமுடியும்.

இந்தப் புதிய அரசமைப்பு முயற்சியையும் குழப்பி அடித்துவிட்டு, சந்திரிகாவின் தீர்வினை நழுவவிட்ட பின்னர் அழுது குழறுவதைப் போல இதனையும் குழப்பி இன்னும் பல வருடங்களுக்கு எத்தனை திட்டமிட்ட குடியேற்றங்கள், அழிவுகள் என எண்ணிக் கொண்டிருங்கள் எனக் காட்டமாக தெரிவித்தார். (உ-8)

ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலர் தற்காலிக பதவி நீக்கம்

கொழும்பு, ஜன. 26

பதுளை தமிழ்ப் பாடசாலையின் பெண் அதிபரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முடியும் வரை ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலர் சந்தியா அம்பன்வல பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்படுவதாக ஊவா மாகாண ஆளுநர் எம்.பி.ஜயசிங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு ஆளுநரின் பணிப்பின் பேரில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபரை முதலமைச்சர் முழந்தாழிட்டு மன்னிப்புக் கோரச் சொல்லும் வேளையில் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலர் உள்ளிட்ட பலர் இருந்ததாகவும் முதலமைச்சர் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றுமாறு அவர்கள் அதிபரை வற்புறுத்தியதாகவும் ஆசிரியர் சங்கம் குற்றஞ் சாட்டியிருந்தது.

இதேவேளை ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர், பதுளை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் தொடர்பிலும் மாகாண ஆளுநரின் பணிப்பின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் நிறைவடையும் வரை அவர்களும் பதவிகளிலிருந்து நீக்கப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

மாணவர்கள் உட்பட 11 பேர் கடத்தல்: கைதான இருவருக்கும் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன. 26

2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாணவர்கள் ஜவர் உட்பட 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரிகளான கஸ்தூரிலாகே காமினி, அருண மென்டிஸ் ஆகியோரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்றுக் கட்டளையிட்டார்.

11 பேர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க உட்பட எழுவருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் அறுவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

திருகோணமலை கன்சைட் முகாமிலிருந்து பொலித்தீன் பையால் சுற்றப்பட்ட சடலங்களை லொறியொன்றில் ஏற்றினார் என்ற சந்தேகத்தின் பேரில் கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரி கஸ்தூரிலாகே காமினி என்பவர் கைது செய்யப்பட்டதுடன், அதே குற்றச்சாட்டில் மென்டிஸும் கைது செய்யப்பட்டு நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றையதினம் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விசாரணைகளை இறுதிக் கட்டத்தில் இருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இருவரின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ள கடற்படை கொமாண்டர் பிரசாத் ஹெட்டியாராச்சிக்கு திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது. (5)

கோத்தாவுக்கு எதிராக நடவடிக்கை: இடைக்காலத் தடையுத்தரவு நீடிப்பு

கொழும்பு, ஜன. 26

பொதுச் சொத்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நடவடிக்கை எடுப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிவரை நீடித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பொதுச் சொத்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சுமத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றிதழை (பொதுச் சொத்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட அரச நிதியைப் பயன்படுத்தியிருப்பதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவியிலுள்ளவரால் சான்றுப்படுத்திய சான்றிதழ்) வலிதற்றதாக்குமாறு கோரி, கோத்தபாய ராஜபக்ச கடந்த நவம்பர் 24ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்ற த்தில் ரிட் மனு வொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான பி.பத்மன் சூரசேன (மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்), சிரான் குணரத்ன ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், மனு தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கான தினமாக பெப்ரவரி 14ஆம் திகதி குறிக்கப்பட்டது. மனு மீதான விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தமது சேவை பெறுநர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்க வேண்டுமாயின், இடைக்காலத் தடையுத்தரவு நீடிக்கப்பட வேண்டும் என்று மனுதாரர் சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி ரொமேஷ்டி சில்வா கோரினார். கோத்தபாய ராஜபக்ச நகர திட்டமிடல் அமைச்சின் செயலராக இருந்த காலப்பகுதியில் காணி சீர்திருத்தக் குழுவினால் அவருடைய தந்தையாரான டி.ஏ.ராஜபக்சவின் பெயரில் நூதனசாலை அமைக்கப்பட்டு அதற்கு செலுத்தப்படவேண்டியிருந்த 33 மில்லியன் ரூபா பணம் செலுத்தப்பட்டுவிட்டதாகவும் சட்டத்தரணி அறிவித்தார். வாய்மொழிமூல ஒப்பந்தத்துக்கமையவே தங்காலை, மெதமுலனயில் மேற்குறிப்பிட்ட நூதனசாலை அமைக்கப்பட்டதாகவும் டி.ஏ.ரா ஜபக்சவின் பிறந்ததினத்தையொட்டி, முழுமையா கக் கையளிக்கப்படாத குறித்த நூதனசாலை 2014ஆம் ஆண்டு நவம்பரில் திறக்கப்பட்டதாகவும் அறிவித்ததுடன், 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதமளவிலே கோரப்பட்ட தொகை செலுத்தப்பட்டதாகவும் அறிவித்தார். பின்னர் அறிவிக்கப்பட்ட 33 மில்லியன் ரூபா விட அதிக செலவு ஏற்பட்டதாகவும் மேலதிக தொகை செலுத்தப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டதாகும் குறிப்பிட்ட அவர், நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் 90 மில்லியன் ரூபா அரசை நிதியைப் பயன்படுத்தியதாக நீதிமன்றத்தில் சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமையவே சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அது அவருடைய வேலை இல்லை என்றும் குறிப்பிட்ட சட்டத்தரணி, கோத்தபாயவைக் கைது செய்வதே அவர்களுடைய நோக்கம் என்றும் அவரை கைது செய்வதற்கு எந்தக் காரணங்களும் இல்லை என்றும் குறிப்பிட்டார். அவரின் மேலதிக தொகுப்புரையை சமர்ப்பிக்கவேண்டியுள்ளதால் பெப்ரவரி 14ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டதுடன், 15ஆம் திகதி வரை தடையுத்தரவு நீடிக்கப்பட்டது. மனுவின் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சானி அபேசேகர, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்கார, அந்தப் பிரிவின் உதவி அத்தியட்சகர் கமல் பிலிஸ்கர மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (5,71)

260 தேர்தல் முறைப்பாடுகள் இதுவரை 222 நபர்கள் கைது

கொழும்பு, ஜன. 26

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான விதிமுறைகளை மீறிய 106 சம்பவங்களும், 260 தேர்தல் முறைப்பாடுகளும் நாடு முழுவதும் பதிவாகியுள்ளதுடன், 222 சந்தேகநபர்களும் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதாகைகள், சுவரொட்டிகள், கட்சிக் கொடிகளைக் காட்சிப்படுத்தி வாகனங்களை செலுத்தியமை மற்றும் அவற்றை வைத்திருந்தமை, சட்டவிரோத ஊர்வலங்களை நடத்தியமை உள்ளிட்ட குற்றசாட்டுகளில் ஈடுபட்டமை தொடர்பிலேயே 222 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 24 மணித்தியால காலப்பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்கிக் காயப்படுத்தியமை, அச்சுறுத்தியமை, பீதியை ஏற்படுத்தியமை உள்ளிட்ட தேர்தல் குற்றச்சாட்டுகள் 260 கிடைத்துள்ளதாகவும், 106 தேர்தல் விதிமுறைகளை மீறிய சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (5)

ரணில் விடோடோ அலரிமாளிகையில் முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜன. 26

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தோனேசிய அரசதலைவர் ஜோகோவிடோடோவுக்குமிடையிலான முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு நேற்றுக் காலை அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு உறவுகளைப் புதிய பரிமாணத்தில் மீள வலுப்படுத்துவது தொடர்பில் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் தொடருந்து சேவையை நவீன தொழில்நுட்பத்துடன் மாற்றியக்க இந்தோனேசியா முழு ஆதரவளிக்கும் என்று ரணிலிடம் ஜோகோவிடோடோ உறுதியளித்தார்.

இதன் முதற்கட்ட ஆய்வறிக்கையைப் பெற்றுக்கொள்ள இந்தோனேசியாவிலிருந்து தொழில்நுட்ப குழுவொன்றை இலங்கைக்கு விரைவில் அனுப்புவதாகவும் இந்தோனேசிய அரச தலைவர் தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பையேற்று இந்தோனேசிய அரச தலைவர் நேற்றுமுன்தினம் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் சந்திப்பை மேற்கொண்டிருந்த அவர் நேற்றுக் காலை தலைமை அமைச்சரை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

7ஆம் நூற்றாண்டில் இந்தோனேசியாவை ஆண்டிருந்த சிறீவிஜயராஜ வம்சத்தினர் இலங்கையுடன் தொடர்புகளைப் பேணியுள்ளனர் என தலைமை அமைச்சர் கூறியிருந்ததுடன், இந்தோனேசியாவின் தொழில்நுட்பத்தை இலங்கைக்குப் பெற்றுக்கொள்ளல், அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இருவருக்குமிடையில் பேச்சுகள் நடைபெற்றன.

இந்தச் சந்திப்பில், இந்தோனேசிய அரச தலைவரின் மனைவி ஜரனா ஜோகோ விடோடோ, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி மைத்திரி விக்கிரமசிங்க, அமைச்சர்களான சாகல ரத்நாயக்க, டி.எம்.சுவாமிநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (5,61)

தொடர்வேலை நிறுத்தத்துக்கு தயாராகும் மருத்துவ சங்கம்

கொழும்பு, ஜன. 26

எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்துக்குச் செல்லவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன செவிசாய்க்காமை, சைட்டம் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காமை, மருத்துவக் கல்வியில் குறைந்தபட்ச தகுதி தொடர்பில் எழுந்துள்ள குறைபாடுகள் போன்றன தொடர்பிலேயே மருத்துவர்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்துக்குச் செல்லவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தொழில்சார் நிபுணர்களின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அந்தச் சங்கத்தின் செயலர் ஹரித அழுத்கே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது மருத்துவத்துறையில் பெரிய ஒழுங்கீனங்கள் ஏற்பட்டுள்ளன. மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் மாணவர்களை மருத்துவச் சட்டத்தின் கீழ் உள்வாங்க முயற்சித்தல், மருத்துவ சேவையில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமை உள்ளிட்ட பிரதான 6 காரணிகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

இலவசக் கல்வி, இலவச மருத்துவம் என்று நலன்புரி அரசாக வெளிக்காட்டிக்கொள்ளும் கூட்டு அரசு இன்று 'கல்வியைப் பணத்துக்காக விற்று வருகின்றது. இலவசக் கல்வி என்பது அரச தலைவரினதோ, தலைமை அமைச்சரினதோ அல்லது அரசியல்வாதிகளினதோ சொத்துகள் அல்ல. பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவே மாலபேயில் இயங்கும் தனியார் பல்கலைக்கழகத்தை மூடுமாறு கூட்டு அரசிடம் கோருகின்றோம்.

நல்லாட்சி அரசால் தொடர்ந்தும் அரச மருத்துவத் துறையினருக்குப் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி மருத்துவத் துறையை சுயாதீனமாக இயங்கவிடாமல் தடை செய்கின்றனர். மருத்துவ அறிவைப் பெறாதவர்களை மருத்துவர்களாக வைத்திய சட்டத்தின் மூலம் உள்வாங்குவதனால் நாட்டின் மருத்துவத்துறைக்குப் பெரும் அசௌகரியம் ஏற்படும் - என்றார். (5)

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிகளின் அலைபேசியில் பிரபாகரன் படம்

கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஜன. 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரது அலைபேசிகளில் பிரபாகரனின் ஒளிப்படம் காணப்படுகின்றது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் அமைந்துள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மலர்மொட்டுக்கு 51 சதவீத வாக்குகள் கிடைக்கும் என்று புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் அரச தலைவர் மைத்திரி விசர் பிடித்தது போன்று பேசுகின்றார்.

இந்த தேர்தலில் கட்சி, நபர்கள் என்ற அடிப்படையில் வாக்களிப்பதனை விடவும் அரசுக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாக்களிக்க கிராம மக்கள் ஆயத்தமாகி வருகின்றனர். அரசுத் தரப்பாக ஜக்கிய தேசியக் கட்சி, மைத்திரி தரப்பு, ரணில் தரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் என்பன காணப்படுகின்றன.

நல்லாட்சி அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் ஒரே தரப்புக் கூட்டு எதிர்க்கட்சி மட்டுமேயாகும். மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி மட்டுமே அரசுக்கு எதிரான சக்தியாக அமைந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டு மக்களினால் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு பொருள்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன.

நாட்டின் தேசியப் பாதுகாப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. சில காலங்களுக்கு முன்னதாக வடக்கில் புலிகளின் செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளதாக மைத்திரியே கூறியிருந்தார். பன்னாட்டுச் சமூகத்தின் ஆதரவுடைய அரச தலைவர் எனக் கூறிக் கொள்ளும் மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் இருக்கும் நிலையில் வெளிநாடுகளில் பிரபாகரனின் ஒளிப்படத்தைக் காண்பித்து பணம் திரட்டுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரது அலை பேசிகளில் பிரபாகரனின் ஒளிப்படம் காணப்படுகின்றது - என்றார். (5)

இந்தோனேசியாவுடன் மூன்று ஒப்பந்தங்கள்

கொழும்பு, ஜன. 26

மருத்துவ உபகரணத் தயாரிப்பு, தொடருந்துத்துறை அபிவிருத்தி மற்றும் கல்வித்துறை மேம்பாடு என்பவற்றுக்கான தொழில்நுட்ப உதவிகளை இலங்கைக்கு வழங்கத் தயாராக உள்ளதாக இந்தோனேசிய அரச தலைவர் தெரிவித்தார். அத்துடன் இலங்கையில் தொடருந்து உற்பத்தித் தொழிற்சாலையொன்றினை ஆரம்பித்தல் தொடர்பாகவும் ஆராயவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு இரு நாள்கள் பயணமாக வந்துள்ள இந்தோனேசிய அரச தலைவருக்கும், அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்ற பேச்சுக்களின் போதே. இந்தோனேசிய அரச தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவினால் அனுப்பி வைத்துள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

இருநாடுகளுக்கிடையிலான இரு தரப்பு வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்துவதற்காகச் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திடுவது தொடர்பாகவும் அரச தலைவர்கள் கவனம் செலுத்தினர்.

கடந்த சில ஆண்டுகளாகத் தொழில் முயற்சியாளர்கள் முதலீடு செய்வதற்கான சாதகமான பின்னணி இலங்கையில் காணப்படுவதுடன் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள இந்தோனேசிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் இருக்கும் நிலையில் வெளிநாடுகளில் பிரபாகரனின் ஒளிப்படத்தைக் காண்பித்து பணம் திரட்டுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரது அலை பேசிகளில் பிரபாகரனின் ஒளிப்படம் காணப்படுகின்றது - என்றார். (5)

கடந்த சில ஆண்டுகளாகத் தொழில் முயற்சியாளர்கள் முதலீடு செய்வதற்கான சாதகமான பின்னணி இலங்கையில் காணப்படுவதுடன் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள இந்தோனேசிய தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துமாறு மைத்திரி, இந்தோனேசிய அரச தலைவரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு சாதகமான பலன் கிடைத்தது.

வேண்டுகோளுக்குச் சாதகமான பலன் கிடைத்தது.

ஆடைக் கைத்தொழிற்துறையில் உள்ள ஒத்துழைப்புக்களை மேலும் அதிகரிப்பதிலும் அரச தலைவர்கள் கவனஞ்செலுத்தினர்.

இலங்கையைச் சூழவுள்ள கடல் வளங்களை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பயனுள்ள முறையில் உபயோகிப்பதற்கு அவசியமான உதவிகளை வழங்குமாறு மைத்திரி இதன்போது இந்தோனேசிய அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்ததுடன் அவர் அது தொடர்பாகச் சிறப்புக் கவனஞ் செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

பாதுகாப்புத் தொடர்பான செயலமர்வுகள், இராணுவப் பயிலுநர் பரிமாற்றல் செயற்திட்டங்கள் என்பவற்றினூடாக இருநாடுகளினதும் பாதுகாப்பு படைகளுக்கிடையே காணப்படும் ஒத்துழைப்புக்களை மேம்படுத்துதல் தொடர்பாக அரச தலைவர்கள் இருவரும் கலந்துரையாடியதுடன், திருகோணமலையில் இடம்பெறும் இராணுவப் பயிலுநர் பாடநெறியில் பங்குபற்றுவதற்கு இந்தோனேசியக் கடற்படை வீரர்களுக்கும் சிறப்பு வாய்ப்புக்கள் காணப்படுவதாக மைத்திரி இதன்போது தெரிவித்தார். மேலும், இருநாடுகளுக்கிடையிலான தொடர்புகளை விருத்தி செய்யத்தக்க 3 புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் இருதரப்புக் கலந்துரையாடலின் பின்னர் அரச தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன. (5)

சட்டவிரோத புகலிட கோரிக்கையாளர்களுக்கு

ஆஸ்திரேலியா எச்சரிக்கை!

கொழும்பு, ஜன. 26

சட்டவிரோதப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் ப்ரைஸ் ஹட்ச்சன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோத ஆள்கடத்தற்காரர்களின் பொய்களைக் கண்டு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. 2017ஆம் ஆண்டில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயற்சித்த 29 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் நோக்கில் இலங்கையிலிருந்து புறப்பட்ட சிலரை இலங்கை அதிகாரிகள் ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்குள் அல்லது நியூசிலாந்துக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்து புகலிடம் பெற்றுக்கொள்ள முடியும் என்று சில தரப்பினர் பிழையாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்ற அனைத்துப் புகலிடக் கோரிக்கையாளர் படகுகளும் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (5)

அத்துமீறினால் ரூ 17.5 கோடி

கொழும்பு, ஜன. 26

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் வெளிநாட்டுப் படகுகளுக்கு 60 லட்சம் முதல் 17.5 கோடி ரூபா வரை தண்டபணம் அறவிடப்படவுள்ளதாக மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர நாடாளுமன்றில் தெரிவித்தார்.

படகில் மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றை வெளியில் வைத்திருந்தால் 40 இலட்சம் முதல் 15 கோடி வரை தண்டபணம் அறவிடப்படும்.

அத்துடன் வடக்கு மீனவர்கள் பிரச்சினைகள் இந்த அண்டு இறுதிக்குள் தீர்க்கப்படும். வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பு எமக்கு அவசியம் என்று குறிப்பிட்டார். (5)

பிணைமுறி அறிக்கை அச்சிடப்படுகின்றதாம்

விரைவில் வரும் என்கிறார் சபாநாயகர் கரு

நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிணைமுறி விசாரணை அறிக்கையின் எஞ்சிய தொகுதி தற்போது அச்சிடப்பட்டு வருகின்றது. விரைவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு சபாநாயகர் கரு ஜெயசூரியா தெரிவித்தார். விசாரணை அறிக்கையின் பக்கங்கள் தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரச தலைவரின் செயலர் எனக்கு அனுப்பிய அறிக்கையை நான் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தேன். எனினும் முழுமையான அறிக்கையை பெற்றுக்கொள்வது தொடர்பில் செயலரிடம் வினவினேன்.

ஆணைக்குழுவின் ஏனைய தொகுப்புகள் தொடர்ந்து அச்சகத்தில் அச்சிடப்பட்டும் கோர்க்கப்பட்டும் வருகின்றன. சட்டமா அதிபரின் யோசனையின் பிரகாரம் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் அறிக்கையின் மிகுதித் தொகுதி தற்போது அச்சிடப்பட்டு வருகின்றது. ஆணைக்குழுவின் அறிக்கையை விரைவில் சமர்ப்பிப்பதாக அரசதலைவரின் செயலர் எனக்கு அறிவித்துள்ளார். அறிக்கை எமக்கு விரைவில் கிடைக்கப்பெறும் - என்றார். (5,31)

பெண் வேட்பாளர்களுக்கு எதிரான தாக்குதல் தொடர்பில் கனடா கரிசனை

கொழும்பு, ஜன. 26

இலங்கையின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களுக்கு எதிரான உடல் மற்றும் உள ரீதியான துன்புறுத்தல்களுக்குக் கனடா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இலங்கையிலுள்ள கனேடியத் தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண் வேட்பாளர்கள் மீதான சில தாக்குதல்கள் தொடர்பாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மொனராகல மாவட்டம் வெல்லவாயப் பிரதேசத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்த பெண் வேட்பாளர் ஒருவர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதேவேளை, கிழக்கு மாகாணம் ஆரயம்பதி செல்வநகர் பிரதேசத்தில் பெண் வேட்பாளர் ஒருவரது வீடு சேதமாக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் பெண் வேட்பாளர் ஒருவர் தாக்கப்பட்டுவீட்டுக்காவலில்வைக்கப்பட்டதுடன், அவரது பொலிஸ் முறைப்பாட்டை மீளப்பெறுமாறும் அச்சுறுத்தப்பட்டுள்ளார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

பசிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஜன.26
முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் முன்னாள் பணிப் பாளர் கித்சிரி ரணவக்க கடந்த அரசதலைவர் தேர்தலின் போது ஜீ ஜ குழாய்களை கொள்வனவு செய்து அரசாங்கத் துக்கு நட்டத்தை ஏற்படுத்தினார் என தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.
கொழும்பு மேல் நிதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர் மானிக்கப்பட்டது.கடந்த அரதலைவர் தேர்தலின் போது ஜீ ஜ குழாய்களை கொள்வனவு செய்து அரசுக்கு 36.5 மில் லின் ரூபா நட்டத்தை ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப் படுகின்றது. (ற-ரி5)

ரஹ்மத் மன்சூரின் வாகனம் தீக்கிரை

மட்டக்களப்பு,ஜன.26
நகர திட்டமிடல், நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இணைப்பு செயலாளரும் கல்முனை மாநகர சபைக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசிய கட் சியின் யானை சின்னத்தில் 16ஆம் வட்டாரத்தில் போட்டியி டும் வேட்பாளருமான ரஹ்மத் மன்சூரின் வாகனம் இனந் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.
இந்தச்சம்பவம் நேற்று கல்முனை செய்லான் வீதியில் இடம்பெற்றது.
அவரது சாரதியின் வீட்டுக்கு அருகிலுள்ள வளவொன்றில் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே தீக்கி ரையாக்கப்பட்டது.சம்பவும் தொடர்பில் மேலதிக விசார ணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

ஐப்பான் குழுவினர் மைத்திரியுடன் சந்திப்பு

கொழும்பு,ஜன.26
இலங்கை வந்துள்ள ஜப்பான் வர்த்தக மற்றும் தொழில் துறை குழுவினர் நேற்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.
அரசதலைவர் வாசஸ்தலத்திலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றது என அரசதலைவர் ஊடக பிரிவு தெரிவித்தது.
இலங்கையில் புதிய வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புக் களை ஆராய்வதற்காகவே இந்தக் குழு இலங்கை வந்துள்ளனர் எனவும் அதைப் பற்றிய கலந்துரையாடலே இடம்பெற்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.(ற-ரி5)

குருநாகலில் நேற்று குப்பைமேட்டில் தீ

கொழும்பு,ஜன.26
குருநாகல் சுந்தராஹெல பகுதியில் அமைந்துள்ள குப்பை மேட்டில் திடீரெனத் தீப்பரவல் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப் பட்டது.நேற்று அதிகாலையே குப்பைமேட்டில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.வறட்சியான காலநிலை தொடர்வதால் குப் பைமேட்டில் வேகமாக தீப்பரவியது எனக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

ஊவா மகாணசபையில் மோதல் உறுப்பினர்கள் மீது தாக்குதல்

பதுளை, ஜன.25
ஊவா மாகாண சபை உறுப்பினர் கணேசமூர்த்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்று மாகாண சபை அமர்வு நடைபெறவிருந்த நிலையில் கணேசமூர்த்தி எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.எம்.ரத்னாயக்கவு டன் வந்தார். அதேவேளை மாகாண சபையின் புதிய கல்வி அமைச்சராகப் பதவியேற்றுகும் செந்தில் தொண் டமானுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்கு மக்கள் கூடியிருந்தனர். அதன்போதே கணேசமூர்த்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாகாணசபை உறுப்பின ரானகணேசமூர்த்திமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலை வரான ஆர்.எம். ரத்னாயக்க வின் வாகனத்தில் ஏறி சபைக்கு வந்தார். மாகாண சபையின் புதிய கல்வி அமைச்சராக பதவியேற் றுள்ள செந்தில் தொண்ட மானை கௌரவிக்கும் முக மாக ஊவா மாகாண சபையில் பொது மக்கள் கூடியிருந்தனர். ஊவா மாகாண சபைக்குள் கட்சி தாவிய கணேசமூர்த்தி சபை வளாகத்துக்குள் உள்நுழைகை யில் அவர் மீது தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது. அங்கு நின்ற ஐக்கிய தேசி யக் கட்சியின் மாகாண சபை உறுப்பி னரான உபாலி சேனாரத்ன மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்ட மக்களில் 9 பேர் தாக்கப்பட்டு, அவர்க ளும் பதுளை அரசினர் மருத்துவம னையில் சேர்க்கப்பட்டனர். தாக்குத லில் எதிர்க்கட்சித் தலைவரின் வாகனத் திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.
தாக்குதலில் காயமடைந்த மாகாண சபை உறுப்பினர்கள் இருவரும் நோயாளர் காவு வண்டி மூலம் பதுளை மருத்துவ சாலைக்கு கொண்டு செல்லப் பட்டனர்.
சம்பவத்தையடுத்து ஊவா மாகாண சபை வளாகத்தில் கலகமடக்கும் பொலி ஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்ப டுத்தப்பட்டது.
சபை அமர்வு ஆரம்பமானதும் தாக்குத லில் தொடர்பில் கண்டனங்கள் தெரி விக்கப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரொருவர் தாம் சபைக்கு வருவதற்கு பாதுகாப்பு இல்லையென வும் இராணுவத்தினருடன் தான் சபைக்கு வரவேண்டும்என்று குறிப்பிட் டார்.புதிதாக மாகாணக் கல்வி அமைச் சராக பொறுப்பேற்றுள்ள செந்தில் தொண்டமானும் தமக்கு சபைக்கு வருவதற்கு பாதுகாப்பு வழங்கவேண் டும் என்று சபையில் தெரிவித்தார்.
முதலமைச்சர் இது தொடர்பில் சட்டபூர் வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து அங்கிருந்து வெளி யேறினார்.
சம்பவம் நடந்ததை கேள்வியுற்று அப் பகுதிக்கு விரைந்த அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஆகி யோர் ஊவா மாகாண சபையில் கூடியி ருந்த பொதுமக்களுடன் சந்திப்பில் ஈடு பட்டனர்.
தாக்குதல் நடத்தியவர்களைப் பதுளை பொலிஸார் தேடிவருகின்றனர் என்று கூறப்பட்டது. (ற)

மருத்துவமனை ஊழியர் சேவைப் புறக்கணிப்பு

கொழும்பு,ஜன.26
வெல்லவாய மருத்துவம னையில் உள்ள ஊழியர் கள் நேற்று சேவைப்புறக்க ணிப்பில் ஈடுபட்டனர்.
மேலதிக கொடுப்பனவுகள் உள்ளீட்ட பல கோரிக்கை களை முன்வைத்தே இவர் கள் புறக்கணிப்பில் ஈடுபட்ட னர் எனத் தெரிவிக்கப்பட் டது.
இதனால் நோயாளர்களுக் கான சிகிச்சை பாதிக்கப்பட் டது எனத் தெரிவிக்கப்பட் டது. (ற-ரி5)

இந்தோனேசிய அரசதலைவரின் பயணம் நிறைவு

கொழும்பு,ஜன.26
இரண்டு நாள்கள் உத்தி யோகபூர்வ பயண மொன்றை மேற் கொண்டு இலங்கை வந்த இந்தோனேசிய அரசதலைவர் ஜோகோ விடோடோ நேற்று இந் தோனேசியா நோக்கி புறப்பட்டுள்ளார்.
அலரி மாளிகையில் அர சத லைவரையும், தலைமை அமைச்சரை யும் சந்தித்த இந்தோனே சிய அரச தலைவர் இரு தரப்புப் பேச்சுவார்த்தை யில் ஈடுபட்டார் எனத் தெ ரிவிக்கப்பட்டது. இதன்போது , 3புரிந்துர் ணவு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டது என வும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

பாடசாலை மாணவனுக்கு மிதிவண்டி அன்பளிப்பு

வவுனியா, ஜன.26
வவுனியா கூமாங்குளம் சித்தி விநாயகர் பாட சாலை மாணவனுக்கு நேற்றுத் லண்டன் வீ - 3 ப்வுண்டேசன் அமைப் பால் வழங்கப்பட்டது. போரால் பாதிக்கப்பட்ட மதிவதணன் திவ்வியா குடும்பத்தில் உள்ள மூன்று பிள்ளைகள் இந் தப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர் . இவர்கள் காலம் தாழ்த்தியே பாட சாலை வருவதனால் கொழும்பைப்பிறப்பிடமா கக்கொண்ட திருதிருமதி வேதராஜா மௌறீன் குடும்பத்தினர் தமது பேரப் பிள்ளைகளின் பேரில் வீ 3 அமைப்பினூடாக இவ்வுத வியை வழங்கினர் .
கல்லூரி அதிபர் பாலச்சந்தி ரனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட சமூகசேவை உத் தியோகத்தர் செ.ஸ்ரீநிவா சன் ஆசிரியர்கள் அபிவி ருத்தி உத்தியோகத்தர் எஸ் .கே.வசந்தன் ஆகி யோரும் கலந்து கொண்ட னர். (ற-ரி5)

மண்மேடு விழுந்ததில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜன.26
பெலிஹத்த பன்சல்கொட பிரதேசத்தில் நேற்று மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இரண்டு பேர் உயி ரிழந்தனர். கிணறொன்றை வெட்டிக்கொண்டி ருந்த போதே இருவர் மீது கிணற்றின் சுவர் இடிந்து வீழ்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.
வலஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 32 மற்றும் 35 வயதுடைய நபர்களை இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.
சம்பவம் தொடர்பில் பெலிஹத்த பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

பேருந்து மீது கல்வீச்சு

கொழும்பு,ஜன.26
கொழும்பு நோக்கி வந்துக் கொண்டி ருந்த இலங்கை போக்குவரத்து சபையின் சிலாபம் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றின் மீது கல் வீச்சு தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப் பட்டது.
சிலாபம் கொழும்பு வீதியின் காக்காப்பள்ளி சந்திக்கு அருகில் நேற்று இந்தத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக் கப்பட்டது.
முச்சக்கர வண்டி யில் வந்தவர்களே தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றனர் என பேருந்து சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.
தாக்குதலால் பேருந்தின் முன்பகுதி முற்றாகச் சேதமாகியது எனத் தெரிவிக்கப்பட்டது.
(ற-ரி5)

மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற

திட்டங்களை குழப்பும் வகையில் முதலமைச்சர் செயற்படுகின்றார்

எதிர்க் கட்சித்தலைவர் குற்றம்சாட்டு

யாழ்ப்பாணம்.ஜன.26

மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களைக் குழப்புகின்ற வகையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செயற்படுகின்றார் என வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா குற்றம்சாட்டினார்.

வடக்குமாகாண சபையின் 116ஆவது அமர்வு அவைத் தலைவர் தலைமையில் நேற்றையதினம் இடம்பெற்றது. அதிலேயே எதிர்க்கட்சித்தலைவர் இந்த விடயத்தை சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்,

மாவட்டச்செயலர் என்பவர் ஒரு அரச அதிகாரியே. அவர் அரசியல்வாதி அல்லர். மாவட்டத்துக்கு தேவையான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது, அரசால் கிடைக்கும் உதவிகள், திட்டங்களை செயற்படுத்துவது போன்றவற்றையே அவர் செய்து வருகின்றார். அதற்குள் எங்களையும் சேர்க்கவில்லை என மாகாண சபையினர் அவரிடம் சண்டை பிடிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதிலும் மாகாணத்தின் முதலமைச்சராக இருந்துகொண்டு பண்பு இல்லாமல் அநாகரிகமான முறையில் மாவட்டச் செயலருக்கு கடிதம் எழுதுவது சரியல்ல. அவருக்குரிய மதிப்பை நாம் வழங்க வேண்டும். மாவட்டச் செயலகத்தால் நடைமுறைப்படுத்தும் திட்டங்களை மாகாண சபைக்கு கூற வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்தநிலையில் மாவட்டச் செயலருடன் சண்டை பிடித்து மாவட்டத்துக்கு கிடைக்கின்ற அபிவிருத்திகளை குழப்புகின்ற வேலையை முதலமைச்சர் செய்யக் கூடாது என்றார்.

இதற்குப் பதில் அளித்த முதலவர்.

"இலங்கை அரசு உள்நோக்கத்துடன் செய்கின்ற வேலைத்திட்டங்களை அவர் செய்துவருகின்றார். மாவட்டச் செயலர் மக்கள் நலன்சார்ந்து நடக்க வேண்டும்.

திட்டங்களை அவதானத்துடன் செயற்படுத்த வேண்டும் என்றே நாம் கோருகின்றோம். அவருக்கும் எனக்கும் தனிப்பட்ட கோபம் இல்லை. செய்கின்ற வேலைத்திட்டங்களை எமக்கு தெரியப்படுத்திசெய்யுங்கள் என்றே கோருகின்றோம்" என ஆவேசமாகக் கூறினார்.

மாகாண சபையில் உறுப்பினர்களுக்கு தெரியாமல் எந்தத் திட்டங்களையும் செய்யக்கூடாது என மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சுட்டிக்கட்டியிருந்தபோதும் மாவட்டச் செயலர் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது தமக்கு தெரியப்படுத்துவதில்லை என தெரிவித்து மாகாண கல்வி அமைச்சர் முதல மைச்சருக்குகடிதம்ஒன்றைகடந்த 18ஆம் திகதி எழுதியிருந்தார்.

அதையடுத்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவை மீறி நீங்கள் நடந்து கொள்கின்றீர்கள் என முதல்வர் மாவட்டச் செயலருக்கு கடந்த 19ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஏ-8)

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க

மாகாண சபை இதுவரை எடுத்த காத்திரமான நடவடிக்கை என்ன?

உறுப்பினர் சுகிர்தன் அவையில் கேள்வி?

யாழ்ப்பாணம்,ஜன.26

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை வடக்கில் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தொடர்பில் உறுப்பினர் து.ரவிகரன் குரல் கொடுத்து வருவதுடன் அதனை தடுத்து நிறுத்தக் கோரி வருகின்றார். வடக்கு மாகாண சபை இதுவரை எடுத்த காத்திரமான நடவடிக்கை என்ன? வடக்கு மாகாண காணி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் இத்தகைய குடியேற்றத் திட்டங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கிவுல்வலயம் என்றபெயரில்திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது. இதனை தடுக்கக் கோரி கவனவீர்ப்பு பிரேரணையாக கொண்டு வந்து கருத்துக்களை முன்வைக்கும் போதே இதனை தெரிவித்தார்.

'தமிழ் மக்களின் காணிகளை மீள வழங்காது சிங்களவர்களுக்கு தாரை வார்த்தால் நாம் மீண்டும் தூக்க வேண்டிய நிலை ஏற்படும். வடக்கு மாகாணத்தில் பல நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெற்று வருகின்றன. அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கிவுல் ஓயா திட்டம் என்ற போர்வையில் தமிழரின் பாரம்பரிய இடங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

கிவுல் ஓயா திட்டமானது இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மகாவலி அமைச்சராக இருந்தபோதே அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது மிக விரைவாக அது நடைமுறைப்படுத்தப் படுகின்றது என்றால் எல்லோரும் இணைந்து திட்டமிட்ட வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிகின்றது' என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன்,

"கடந்த 1970ஆம் ஆண்டளவில் ஆயிரம் ஏக்கர் திட்டம் ஊடாக பத்து தனவந்தர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. பின்னர் இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களின் இறுதியில் போர்க் கைதிகளான சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். விடுதலைப்புலிகள் பலம் பொருந்தியிருந்தபோது அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தவர்கள் போருக்கு பின்னர் தனிக்கிராமங்களில் இருக்க வைக்கப்பட்டுள்ளனர். இது இன்று நேற்று அல்ல. காலம் காலமாக திட்டமிட்டு நடைபெற்று வரும் குடியேற்றம்.

இந்தப் பகுதிகளில் நடக்கும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தொடர்பாக வன்னியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்கவில்லை. காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லை" என்றார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் தெரிவிக்கையில்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்திப்பதற்கு என பெயரளவிலேயே இலங்கைக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் இருக்கின்றார். வெறுமனே அரசியல் தீர்வு, இடைக்கால அறிக்கையை வைத்துக் கொண்டு எதோ மாயாஜாலாம், மந்திரம் நடக்கப்போகிறது என கூறி வருகின்றனர். ஆனால் இங்கோ எமது நிலங்கள் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் எதிர்க்கட்சியினர் ஆளும் கட்சியாகவே செயற்பட்டு வருகின்றனர் என குற்றம் சாட்டினார்.

மாகாண சபை உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர் இந்த விடயத்தை அரச தலைவர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதாக அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்தார். (ஏ-8)

திட்ட முன்மொழிவுகளை ஜனவரி மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கவும்

மாகாண அவைத்தலைவர் அறிவுறுத்தினார்

யாழ்ப்பாணம்,ஜன.26

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் நடப்பாண்டுக்கான திட்ட முன்மொழிவுகளை ஜனவரி மாத இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் 116ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்றையதினம் இடம்பெற்றது.

அமர்வில் சபை அறிவித்தல்கள் அறிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதியுடன் முடிவடைவதால் நாம் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மேற்கொள்ளவிருக்கும் திட்ட முன்மொழிவுகளை ஒப்படைக்குமாறு அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கியும் ஐந்து உறுப்பினர்கள் மட்டுமே இதுவரை திட்ட முன்மொழிவுகளை வழங்கியுள்ளனர்.

எனவே மிகுதி உறுப்பினர்களும் மாத இறுதிக்குள் தத்தமது திட்டமுன்மொழிவுகளை ஒப்படைக்கவும் எனத் தெரிவித்தார். (ஏ-8)

'ஐ' ரோட் திட்ட வீதிகளை திருத்த நிதி வழங்குமாறு சந்திரிக்காவுக்கு கடிதம்

வடமாகாண முதலமைச்சர் அனுப்பியுள்ளார்

யாழ்ப்பாணம்,ஜன.26

வடக்கில் 'ஐ' ரோட் திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள வீதிகளை திருத்த நிதியுதவி செய்யுமாறு தேசிய நல்லிணக்க செயலணிக்கு பொறுப்பாகவுள்ள முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு கடிதம் எழுதியுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கில் ஐ ரோட் திட்டம் பின்னடிக்கப்பட்டமையால் அந்த திட்டத்துக்குள் அடங்கும் வீதிகளை உடனடியாக செப்பனிட மாகாண வீதி அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி பிரேரணை ஒன்றை வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் முன்மொழிந்தார். அது தொடர்பாக முதல்வர் பதிலை வழங்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஐ ரோட் திட்டத்துக்குள் அடங்கும் வடக்கு வீதிகளை உடனடியாக செப்பனிட நடவடிக்கை எடுக்கக் கோரி செயலணிக்கு கடந்த நவம்பர் மாதம் கடிதம் எழுதியுள்ளேன். எனவே நாம் வீதிகளை விரைவில் செப்பனிட முடியும் என்றார்.

'மாகாணத்துக்குட்பட்ட பல வீதிகள் ஐ ரோட் திட்டங்களுக்கு விதந்துரைக்கப்பட்டமையால் வேறு திட்டங்களில் உள்ளடக்கப்படாத நிலையில் மிகவும் பழுதுபட்ட நிலையில் பாவனைக்கு உதவாத நிலையில் இருக்கின்றன. ஆகவே உடனடியாக கிடைக்கக்கூடிய வேறு நிதி மூலங்களில் இருந்து வீதிகளை செப்பனிட வேண்டும்' என உறுப்பினர் பரஞ்சோதி கோரிக்கை விடுத்திருந்தார். (ஏ-8)

எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த

கோரிக்கையை மீள் பரிசீலனை செய்ய முதலமைச்சர் இணக்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜன 26

வடக்கு மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச் சட்டத்தை சீர் செய்து மீளவும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா முன்வைத்த கோரிக்கையை ஏற்ற வடக்கு மாகாண முதலமைச்சர் அதனை மீள்பரி சீலனை செய்வதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் வடக்கு மாகாண சபையின் 116ஆவது அமர்வு நேற்றையதினம் இடம்பெற்றது. இந்த அமர்விலேயே எதிர்க்கட்சித் தலைவர் குறித்த விடயத்தை சபையில் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அங்கு தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரனால் கடந்த வருடம் மே மாதம் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட 2019-5ஆம் இலக்க வர்த்தமானி மூலம் பிரசுரமான வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளில் அதிகார சபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்களாக நிரல்படுத்தப்பட்டு இருக்கும் கட்டணங்கள் இதுவரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் பெறப்பட்ட கட்டணங்களை விடப் பன்மடங்கு அதிகமாகவும், மாவட்டங்களுக்கு இடையில் முரண்பட்ட கட்டணங்களாகவும் காணப்படுவதால் அவற்றை சீர் செய்து மீளவும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என் முதல்வரிடம் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர்,

"இந்த விடயம் சம்பந்தமாக எனது தலைமையில் நேற்று முன்தினம் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளேன்.

இந்த விடயத்தை மீள்பரி சீலனை செய்வதாக அவர்களுக்கு கூறியுள்ளேன்.

எனவே நான் இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் மீளாய்வு செய்கின்றேன்" என்றார்.

முன்னாள் போக்குவரத்து அமைச்சரின் காலத்தில் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கட்டணங்கள் தொடர்பில் உரிய தீர்வு வழங்கக் கோரி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் வடக்கு முதல்வரை சந்தித்த போது கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ-8)

யாழ்ப்பாண பல்கலை மாணவர்கள் 13 பேருக்கும் பிணை

யாழ்ப்பாணம்,ஜன.26
யாழ்ப்பாணப்பல்கலைக் கழக மாணவர்களுக்கு இடையே அண்மையில் ஏற்பட்ட கைகலப்புடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த 13 மாணவர்களையும் பிணையில் விடுவித்தது யாழ்ப்பாண நீதிவான் மன்று.
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் மாணவர்களுக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டிருந்தது. 6 மாணவர்கள் காயமடைந்திருந்தனர். அதையடுத்து 3ஆம், 4ஆம் வருட மாணவர்களின் கற்கைகள் மூடப்பட்டிருந்தன. கடந்த வாரம் கற்றல் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகின. அதன் பின்னர் முகாமைத்துவபீட மாணவர்களுக்கு இடையிலும் கைகலப்பு ஏற்பட்டது. இதன்போது சிங்கள மாணவர்கள் தமக்குள் மோதிக்கொண்டனர். மோதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் நான்கு மாணவர்கள் ஏற்கனவே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அந்தக் குற்றச்சாட்டில் 9 மாணவர்கள் நேற்றுமுன்தினம் பொலிஸாரிடம் சரணடைந்தனர். அவர்கள் அனைவரும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.
13மாணவர்களும்நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.
13 மாணவர்களையும் நிபந்தனையுடனான பிணையில் நீதிவான் விடுவித்தார்.
(எ-21-8)

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்;

சிவசக்தி ஆனந்தன் எம்.பியும் எம்மைப் பொறுத்தவரை துரோகிதான்

வவு. காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடி கண்டறியும் சங்கத்தின் தலைவி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.26

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தனாக இருந்தாலும் சரி சுமந்திரனாக இருந்தாலும் சரி உறுப்பினர்கள் எல்லோரையும் காணாமல் ஆக்கப் பட்ட எமது பிள்ளைகள் விவகாரத்தில் துரோகிகளாகவே பார்க்கிறோம். தேர்தல் விவகாரத்தில் எந்த அரசியல்வாதிகளுக்கும் நாங்கள் ஆதரவு இல்லை. மக்கள் பிரதிநிதிகள் இலங்கை அரசுக்கு வழங்கிய காலக்கெடு நிறைவடைய ஒருவருடமே உள்ளது. அதற்குள் எமக்கான தீர்வை உலக நாடுகள் பெற்றுத்தர வேண்டும்.

கடத்தப்பட்டு கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிந்து தருமாறு வலியுறுத்தி தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ள உறவுகளுடைய போராட்டம் ஒரு வருடத்தை எட்டியுள்ளது. தொடர்பாக கருத்து தெரிவித்த போதே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிக்கண்டறியும் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக 335ஆவது நாளாகவும் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது. பதில் கூறு என அரசுக்கு கோரிக்கை விடுத்து 14 தாய்மார்களுடன் கடந்த வருடம் தை மாதம் 23ஆம் திகதி அன்று சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தோம். அதன் ஒருவருட முழுமையை நினைவு கூருமுகமாகவே கடந்த செவ்வாய்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தோம். இருந்தபோதும் எமது பிள்ளைகள் குறித்து விரைவில் பதில் தருவதாக கூறி எமது உணவு ஒறுப்புப்போராட்டத்தை நிறுத்திய அரசு தீர்வு எதனையும் தரவில்லை. தற்போது ஐந்து மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காகப் போராட்டம் மேற்கொண்டு வருகிறோம்.
தொடர்ந்து கொண்டிருக்கும் எமது போராட்டத்துக்கு உலக நாடுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தீர்வுகளை பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையில் இருக்கின்றோம். எங்கள் பிள்ளைகள் தொடர்பாக பன்னாடுகளும் தலையிட்டு பதில் கூறும் என்ற நம்பிக்கையில் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். இலங்கை அரசு எங்களுக்கு எந்தவிதமான பதிலையும் வழங்காத நிலையில் உலகநாடுகளின் பிரதிநிதிகள் எங்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதியின் பயனாக நிச்சமாக எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும். போராட்ட காலம் இரண்டு வருடம் நீடித்தாலும் நாங்கள் கவலை கொள்ளப் போவதில்லை. காரணம்எமதுதமிழ்மக்களின்பிரதிநிதிகள் இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கியுள்ளனர். ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ளது. இப்போது எமது மக்கள் பிரதிநிதிகள் தேர்தலில் ஈடுபட்டுள்ளார்கள். அரசியல் சம்பந்தமாக நாங்கள் யாருக்கும் சார்பாக செயற்படமாட்டோம். காரணம் நாங்கள் அனைத்து அரசியல்வாதிகளையும் முழுமையாக எதிர்த்துத்தான் தனித்துவமாக இந்தப் போராட்டத்தை நடத்திவருகிறோம் என்றார். (எ-21-402)

ஊடகவியலாளருக்கு கொலை அச்சுறுத்தல் என முறைப்பாடு

சாவகச்சேரி,ஜன.26
தென்மராட்சிப் பிரதேசத்தில் ஊடகவியலாளர் ஒருவருக்கு அலைபேசியில் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
சரசாலைப் பகுதியில் சாலை அமைத்தது தொடர்பான செய்தியை ஊடகமொன்றில் பிரசுரித்தமைக்காக கொலைமிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
தமிழ் தேசிய கட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டில் செய்யப்பட்ட சாலைத் திருத்த வேலை மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டதென பரப்புரை செய்தனர் என்று இணையத்தளத்தில் பிரசுரித்தமைக்காக அலைபேசியில் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டதென குறித்த ஊடகவியலாளர் தெரிவித்தார். (எ-9)

ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.26
யாழ்.பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தினரால் புதிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் கொக்குவில் பிறவுண் சாலையில் உள்ள திறந்த பல்கலைக்கழக பிராந்திய அலுவலக மண்டபத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது.
கூட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர், பிரதி துணை வேந்தர், பதிவாளர்,: திறந்த பல்கலைக்கழக பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான கற்கை நெறிகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்படவுள்ளதால் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணப் பிராந்திய திறந்த பல்கலைக்கழக உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் அறிவித்துள்ளார். (எ-9)

அஞ்சலி நிகழ்வு

கொழும்பு.ஜன.26
அகில இலங்கை இந்து மாமன்றம் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நடத்தும் அமரர் தேசபந்து தெ.ஈஸ்வரனின் அஞ்சலி நிகழ்வு சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்று க்கிழமை காலை 10.00 மணி முதல் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பல்வேறு அமைப்புக்கள், நிறுவனங்களின் தலைவர்கள் அஞ்சலியுரை நிகழ்த்தவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
(எ-ரி)

நாடு முழுவதும் 2ஆம் தர நகரங்களாக மாற்றமடைகின்றன

25 உள்ளூராட்சி சபைகள்

யாழ்ப்பாணம்.ஜன.26
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் நாட்டில் உள்ள 25 மாவட்டங்களிலும் உள்ள உள்ளூராட்சிசபைகளில்தலாஒன்றுவீதம் தெரிவு செய்யப்பட்ட 25 உள்ளூராட்சி சபைகள் இரண்டாம்தர நகரங்களாக மாற்றப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.
நடுவண், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சாவகச்சேரி நகரசபையும் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபையும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபையும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரசபையும் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
நகர மைய அபிவிருத்தி, போக்குவரத்து முகாமைத்துவம், வடிகால் அமைப்பு, திண்மக்கழிவகற்றல் திட்டம், பொதுக் கட்டடங்கள் மற்றும் சந்தை அபிவிருத்தி, சுற்றுலா மையம், சாலைகள் பாலங்கள் புனரமைப்பு, குடியிருப்புகள் மற்றும் தொழில் நிலையங்களின் அபிவிருத்தி, குடிநீர் விநியோகம், ஒன்றிணைந்த செயற்பாடு போன்ற பத்து திட்டங்கள் இந்தத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன என அமைச்சின் செயலாளர் எச்.ரி.கமல் பத்மசிறி அறிவித்துள்ளார். இதன் பிரகாரம் மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் தெகிவளை - கல்கிசை மாநகரசபை, கம்பகா மாவட்டத்தில் நீர்கொழும்பு மாநகரசபை, களுத்துறை மாவட்டத்தில் பேருவளை நகரசபை.
தென்மாகாணத்தில் காலி மாவட்டத்தில் அம்பலாங்கொட நகரசபை, மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நகரசபை, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை நகரசபை.
மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் கம்பளை நகரசபை, மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை நகரசபை, நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன் டிக்கோயா நகரசபை.
சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிப்பிட்டி நகரசபை, கேகாலை மாவட்டத்தில் கேகாலை நகரசபை.
வடமேல் மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டி நகரசபை, புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் நகரசபை.
வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவ பிரதேச சபை, பொலநறுவை மாவட்டத்தில் இங்கிராங்கொட பிரதேச சபை.
ஊவா மாகாணத்தில் மொனராகல மாவட்டத்தில் மொனராகல பிரதேச சபை, பதுளை மாவட்டத்தில் பண்டாவளை மாநகரசபை.
கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா நகரசபை, மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகரசபை, அம்பாறை மாவட்டத்தில் கல்முனை நகரசபை.
ஆகியவை தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கான நிதி ஒதுக்கீடும் அறிவிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

அமெரிக்கக் கூட்டுப்படை அதிரடி

150 ஆயுததாரிகள் சிரியாவில் வேட்டை

டமஸ்கஸ், ஜன. 26

சிரியாவில் அமெரிக்க கூட்டுப்படைகள் நேற்றுமுன்தினம் நடத்திய சரமாரியான வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்டேட்) ஆயுததாரிகள் 150 பேர் கொன்று குவிக்கப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக மீண்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கம் சிரியாவின் சில நகர்களிலும், சிரியப் பாலைநிலங்களிலுமே தற்போது உள்ளது.

அங்கு ரஷ்யப் படைகளும், அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளும் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடத் தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 150 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்கக் கூட்டுப் படை தற்போது அறிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க கூட்டுப் படை வெளியிட்ட அறிக்கையில், 'ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் ஆக்கிரமித்து வைத்திருந்த பகுதிகளைக் குறிவைத்து, கூட்டுப்படைகள் ஷபா நகரில் வான்தாக்குதல்களை நடத்தின. இதில் 150 ஆயுததாரிகள் உயிரிழந்தனர்' என குறிப்பிடப் பட்டுள்ளது. (ம)

ரஷ்யாவில் நிலநடுக்கம்

கிழக்கு ரஷ்ய கடல் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. கிழக்கு ரஷ்ய கடல் பகுதியில் உள்ள கோமாண்டோர்ஸ்கியே ஒஸ்ட்ரோவா தீவில் இருந்து 41 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 6.2 அலகுகளாக நிலநடுக்கம் பதிவானது என்று ரஷ்ய புவியியல் ஆய்வுமையம் தெரிவித்தது. (ம)

குழந்தையில்லாத் தம்பதியர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி
தினமும் மாலை 5.00 மணிக்கு
CAPTAIN TV
காணத்தவறாதீர்கள்

ட்ரம்ப் மீது விசாரணை

அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யத் தலையீடு இருந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து ட்ரம்ப் மீது விசாரணை நடத்தப்படவுள்ளது என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நீதித் துறையின் சிறப்பு விசாரணை அதிகாரியான ரொபர்ட் மியுலர், "இன்னும் இரண்டு அல்லது மூன்று வார காலத்தில் ட்ரம்ப் விசாரிக்கப்படலாம்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த புதனன்று வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "விசாரணை செய்யப்பட முழுமையாகத் தயாராக உள்ளேன். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அதை முடிக்க நான் விரும்புகிறேன்" என்று தெரிவித்தார் என்று அமெரிக்க ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)

இன்னும் ஒரு மாதத்தில் மீட்கப்படும் 'எம்.எச்.370'

நிபுணர்கள் நம்பிக்கை

சிட்னி, ஜன. 26

மூன்றாண்டுகளுக்கு முன்னர் 239 பேருடன் மாயமான விமானத்தை மீண்டும் தேடும் அமெரிக்க நிறுவனத்தின் முயற்சிக்கு இன்னும் ஒரு மாதத்துக்குள் பயன் கிடைக்கலாம் என்று கடல்சார் ஆய்வு நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சீன நாட்டின் தலைநகரான பீஜிங் நகருக்கு கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி 239 பேருடன் பயணித்த எம்.எச்.370 வானூர்தி மாயமானது. அந்த வானூர்திக்கு என்ன ஆனது என்று தெரியாத நிலையில் அது தொடர்ந்தும் தேடப்பட்டு வருகிறது.

தற்போது அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனமொன்று வானூர்தியை தேடும் பணியில் களமிறங்கியுள்ள நிலையில், குறித்த நிறுவனம் தனது தேடுதலுக்காக நிர்ணயித்துள்ள இடத்தின் அளவு உள்ளிட்ட பல விடயங்களைக் கருத்தில்கொண்டு இன்னும் ஒரு மாததத்தில் வானூர்தி கிடைக்கப் படும் என்று கடல்சார் நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (ம)

ஐப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, ஜன. 26

ஐப்பானின் ஹான்சூ தீவில் நேற்று நில நடுக்கம் ஏற்பட்டது. பசிபிக் பெருங்கடல் ஓரத்தில் உள்ள ஐப்பான் நாட்டுக்குச் சொந்தமான ஹான்சூ தீவிலேயே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கு அடியில் சுமார் 64 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.4 அலகுகளாக பதிவானதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் உறுதிப்படுத்தியது. (ம)

Polycrome®
Light the future
நல்ல தரமான சூழலுக்கு ஏற்ற மின்சார உபகரணங்கள்
Visit Our Stall at
JAFFNA INTERNATIONAL TRADE FAIR 2018
ஜனவரி 26/27/28
Stall No. 70

வெனிசுலாவில் தற்போது பெரும் உணவுத்தட்டுப்பாடும், பொருளாதாரப் பின்னடைவும் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி அங்கு தொடர்ந்து போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. போராட்டங்களத்தில் நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்ட ஒளிப்படமே இது. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்தப்படத்தை வெளியிட்டது. (ம)

Your Gateway to the North

JITF 2018

9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JAFFNA INTERNATIONAL TRADE FAIR

26 27 28 ஜனவரி JANUARY

10.00AM - 8.00PM

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்

MUNICIPAL GROUNDS - JAFFNA

MAIN SPONSOR S-Lon

ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

IN ASSOCIATION WITH CCIY

Message from

Hon. Rishad Bathiudeen M. P.
Minister of Industry & Commerce

It is with great pleasure that I send this message of congratulations on the occasion of the 9th Edition of the Jaffna International Trade Fair 2018, a mega trade exhibition of Northern Province. The Jaffna International Trade Fair series organized by Lanka Exhibition & Conference Services Pvt. Ltd. (LECS) in association with the Chamber of Commerce & Industry of Yarlpanam (CCIY) has become a key business networking event in the Northern Peninsula. This event is also increasingly becoming a definite destination for chambers and businesses from not only the Northern Province but for businesses from other provinces as well. JITF's growing reputation is such that it is now termed as the "Gateway to the North".

My pleasant memories of JITF 2017 are still fresh as I was pleased to welcome the 75-member delegation from India's largest and oldest business chamber, the Chamber of Commerce and Industry of India (ASSOCHAM) at its inauguration.

The successes of JITF recorded year after year and the increasing joint ventures, tie ups, large orders reported from this event are clear signs that the fast growth of the Northern Province has now extended to its business sector as well.

In this background I am pleased that my Ministry is endorsing this mega expo which has become a leading networking platform for bigger local and international trade for the Provincial Businesses. In conclusion, I and my Ministry extend best wishes to the organisers and all participants of JITF 2018.

Hon. Rishad Bathiudeen M. P.
Minister of Industry & Commerce

Message from

Hon. Reginald Cooray
Governor
Northern Province

I have great pleasure of sending this message to felicitate 9th International Trade Fair 2018 (JITF 2018) organized by Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd. (LECS) together with the Chamber of Commerce & Industry of Yarlpanam (CCIY) with the support of consulate general of India, Jaffna, the Sri Lanka Convention Bureau (SLCB) and the Jaffna Municipal Council. From visibility to credibility, exhibition at Jaffna International Trade Fair has hundreds of benefits for the business. Establishing a presence, whether big or small, for a company at the exhibition gives the entrepreneurs a powerful platform for meeting new customers, reaching out to their existing clients, and building a more established and reliable trademark.

JITF – 2018 has become the most comprehensive and focused exhibitions ever in the North since the dawning of peace. Face to face meetings and dialog with key officials from the public and private sectors are held a Jaffna International Trade Fair. Jaffna International Trade Fair which is now organized for 9th Successful year is the largest international trade exhibition in Northern Province for multi-sector products, equipment and machineries. It is noticeable that exhibitors and trade-visitors are annually increasing. The fair has grown in stature from its inception 8 years ago, as the key networking and sourcing platform for the traders locally, nationally and internationally. I am very delighted to congratulate everyone who plays the key role and supportive roles to organize 9th Jaffna International Trade Fair in a successful way. I look forward to their continued success.

Hon. Reginald Cooray
Governor
Northern Province

Message from

Justice C. V. Wigneswaran
Chief Minister
Northern Province

I have great pleasure in sending this message of congratulation to your 9th "Jaffna International Trade Fair – 2018" (JITF 2018). Your annual event, I hope would contribute its mite to the betterment of the province's overall economic development. Your organization should concentrate on starting small and medium scale industries which would pave the way for the generation of income to the Northern Provincial Council and create job opportunities to thousands of unemployed youths in this part of the country. I wish great success in all your efforts.

Justice C. V. Wigneswaran
Chief Minister
Northern Provience

Message from

R.T. Jeyaseelan
Municipal Commissioner
Municipal Council - Jaffna

I am wishing you very happy New Year and I am glad that 9th Trade Fair is going to be held in the dates of 26, 27, 28 of this month in Jaffna Municipal Council Premises. People of Jaffna were received their needs by traditional methods with difficulties in the past years. After the Trade Fair only new technological instruments were introduced to us. In addition the trade fair motivated the local innovators and created new ideas. People in all the fields will be benefitted by the Trade fair such as construction, agriculture, information technology and business. Therefore, I wish you a very successful trade fair in this year.

R.T. Jeyaseelan
Municipal Commissioner
Municipal Council - Jaffna

Message from

A. Natarajan
Consul - General of India
Jaffna

I have great pleasure in sending my greetings to the participants at the Jaffna International Trade Fair (JITF) 2018. Every year, since 2010, Lanka Exhibition and Conference Services (LECS) has been successfully hosting the Mega show at Jaffna, for which I immensely thank LECS. After the end of internal conflict in May 2009, the war-affected Northern Province has been slowly but surely growing economically and infrastructurally.

The Government of India has also made substantive contributions towards economic and infrastructure developments in the Northern Province.

Meanwhile, I am pleased to state that the Consulate General of India (CGI) in Jaffna has consistently encouraged Indian entrepreneurs and various apex chamber bodies to come and participate at JITF. In the past, FIEO, ASSOCHAM New Delhi, the Tamil Nadu Chamber of Commerce and Industry, etc. all have actively participated at previous JITFs.

A strong 70 member trade delegation led by ASSOCHAM New Delhi is expected to participate at the Ninth JITF.

I am confident that JITF 2018 will also be very successful as the earlier JITFs in Jaffna.

On behalf of CGI Jaffna, we wish the organizers to have a grand success of JITF 2018.

A. Natarajan
Consul - General of India, Jaffna

Message from

V.K.Vignesh,
The Chairman
Chamber of Commerce & Industries of Yarlpanam

It gives me great pleasure to present the Chairman's message to the 9th Jaffna International Trade Fair. One of Sri Lanka's largest exhibition and consumer fairs - JITF is earnestly received by all parties in our nation and it has met continuous success in the past 8 years. Therefore, the expectation and participation of the 9th Jaffna International Trade Fair, being held on 26th, 27th and 28th of January 2018, will be prominent and magnificent. At this point, I request investors not only to trade end products in our regional markets, but also contribute to establish industries in Northern Province creating employment opportunities along with skills and knowledge transformation.

At present our country is self- assured to refocus its political and economic policy approaches towards constructing opportunities for individual creativity and private investments in business. This is a great opening especially northern business community can enhance its business connectivity with the national capital Colombo and the rest of the island. Trade fairs are the powerful marketing medium which provide visitors with a comprehensive overview of the entire market and industry. On this occasion we sincerely admit our gratitude to the exhibition organizer, Lanka Exhibition and Conference Services for their selfless involvement towards making JITF 2018 a successful occasion. Additionally, we acknowledge all participants of trade fair for giving us continuous boost and immense confidence. Further, we genuinely thank all our sponsors, media and press associates and all other government and nongovernmental bodies who lend helping hands in various modes to polish this trade fair more glorious. As a Chairman of Chamber of Commerce and Industries Yaarlpanam, I would like to take this opportunity to thank Honourable Governor of Northern Province, Honourable Chief Minister of Northern Provincial Council, Consul General –Consulate General of India, Government agent/ district secretory, Commissioner Jaffna Municipal Council, Police and government officials for your cherished support to make this trade fair a lively one.

Thank You,
V.K.Vignesh,
The Chairman.
Chamber of Commerce and Industries of Yarlpanam

Message from

Arjun Dharmadasa
Managing Director
Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

It is with great pleasure that I extend this message for the 9th Jaffna International Trade Fair (JITF). We at Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, as the organizer of this mega event are confident that exhibitions of this nature will create a gateway to facilitate trade in the north for the business community in Sri Lanka to meet the potential entrepreneurs and investors. As per the statistics there is 100% increase of the visitors to the exhibition which clearly indicates that the northern population has increased as a result of the environment being conducive for people to live with the rapid development of infrastructure in the north and east streamlining the living conditions of the northern community. Special attractions at JITF will be the "Made in Jaffna" pavilion with over 30 stalls, under the flagship of Chamber of Commerce & Industries of Yarlpanam (CCIY).

I take this opportunity to thank all government personnel and organizations who have been very supportive towards making this event a reality. I also wish to express my sincere thanks for the continuous support of this trade exhibition to the Ministry of Industry & Commerce, former Ministry of Traditional Industries & Small Enterprise Development, The Indian High Commission in Sri Lanka, the Chamber of Commerce & Industries of Yarlpanam, the Jaffna Municipal Council, Consulate General of India in Jaffna, the Ceylon Institute of Builders, the Sri Lanka Convention Bureau and all Exhibitors, Sponsors & participants. I also thank the Police and the people of Jaffna for their continued support in making JITF a great success year after year.

Arjun Dharmadasa
Managing Director
Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

OFFICIAL PARTNERS

MOBILE TELECOMMUNICATION: Sri Lanka Telecom, Mobitel
ROOFING: ANTON
FOOD: RUHUNU FOODS
PRINT MEDIA: Lankadeepa
CONSTRUCTION SOLUTION PROVIDER: INSEE CEMENT
ELECTRONIC MEDIA: MTV
LUBRICANT: Mobil
LIFESTYLE: THE HARVEST
RADIO: Hiru FM

SUPPORTED BY: Jaffna Municipal Council, Sri Lanka Tourism, ASSOCHAM
ENDORSED BY: Ministry of Industry and Commerce, Consulate General of India Jaffna, NCE
PARTNER COUNTRY: India

PFIRC
PRASANTH FERTILITY RESEARCH CENTRE

பிரசாந்த் குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்

THE TIMES OF INDIA
SURVEY OF FERTILITY CLINICS
NO. 1 FERTILITY CENTRE IN CHENNAI
NO. 4 @ NATIONAL LEVEL IN INDIA

யாழ்ப்பாணத்தில்..

25 வருடங்களாக இலங்கை மக்களின் நம்பிக்கையைப் பெற்று
ஆயிரக்கணக்கான இலங்கை தம்பதிகளின் குழந்தைக் கனவை
நனவாக்கிய பிரபல சர்வதேச புகழ்

Dr. கீதா ஹரிப்ரியா MD, DGO, FRCOG (London)

26th, 27th, 28th January 2018,
Municipal Grounds, Jaffna

Stall No.
C-1
C-2
C-3

தாய்மைக்கு தயாராகுங்கள்!

தாய்மைக்கான தடைகளை
தகர்த்தெறியும் அதிநவீன சிகிச்சைகள்!

★ ஆண்களிடம் குறை இருந்தால் என்ன?
பெண்களிடம் குறை இருந்தால் என்ன?
தீர்வு நம் கையில் இருக்கையிலே..!

★ தம்பதிகளின் தவிப்பு நீங்கி,
மடியில் குழந்தை தவழட்டும்

★ தாய்மையின் மகத்துவத்தைப் பெற்று மகிழுங்கள்!

★ ஆண்களிடம் குறை இருந்தால் என்ன?
பெண்களிடம் குறை இருந்தால் என்ன?
தீர்வு நம் கையில் இருக்கையிலே..!

★ தாய்மைக்கான தடைகளை
தகர்த்தெறியும்
அதிநவீன சிகிச்சைகள்!

Dr. கீதா ஹரிப்ரியா
MD, DGO, FRCOG (London)

Dr. கீதா ஹரிப்ரியா அவர்களை
நேரில் சந்தித்து இலவச ஆலோசனை பெறலாம்

முன்பதிவுக்கு: 075 40000 12

அதிநவீன சிகிச்சை முறைகள்

- சைட்டோ பிளாஸ்மிக் மாறுதல்
- கருவை உறை நிலையில் பாதுகாத்துத் தேவையான போது குழந்தை பெற்றுக் கொள்ளுதல்
- கருமுட்டை / விந்தணு வங்கி
- கருக்குழாய் கட்டிகள்
- விந்தணு தானம்
- எம்பிரியோஸ்கோபி
- கருமுட்டை / விந்தணு பதப்படுத்துதல்
- IUI, ICSI, IUI / IVF / ICSI Plans
- ஸ்டெம் செல் தெரபி

★ சென்னைக்கு விமான பயணச் சீட்டு இலவசம்!
★ முதற்கட்ட சிகிச்சைக்கான 5 நாட்கள் தங்குமிடம்!
★ விமான நிலையம் ⇄ மருத்துவமனை போக்குவரத்து இலவசம்!

No. 77, HARRINGTON ROAD, CHETPET,
CHENNAI-31, TAMIL NADU, INDIA.
pfrcivf.com haripriyageetha@gmail.com
0091-98410-30388 | 0091-44-422-77777

சாமர்த்தியசாலிகளின் ஒரே தெரிவு

Hero

எரிபொருள் செயல்திறன்மிக்க 110CC ஐ ஸ்மார்ட்

வழங்குகிறோம் புதுப்பொலிவுடன் புதிய 110CC ஸ்பிளென்டர் ஐ ஸ்மார்ட் மோட்டார் சைக்கிளை.

i3s technology இருப்பதனால் idel நிலைமில் தானியக்கமாக என்ஜின் அணைந்து தனிசமான அளவு எரிபொருளை சேமிக்கிறது. அதேபோல் Smart Power மற்றும் Torque-on-Demand சிறப்பம்சம் மூலம் என்ஜின் அதிர்வின்றி சீரான மற்றும் சொகுசான ஓட்டத்தை தருகிறது. மேலும்(AHO)ஒன்லைட் தொழில்நுட்பம் முழுமையான பாதுகாப்பை உறுதிசெய்கிறது.

உண்மையில் இது உங்கள் நம்பகமான தோழனாக இருக்கும். அதுவே சமார்த்தியமான சிந்தனையின் ஆற்றலாகும்.

splendor iSmart 110
It's Smart Thinking

SMART i3s TECHNOLOGY
TORQUE ON DEMAND ENGINE
5 WARRANTY

ரூ. 235,000/-

Facebook.com/HeroMotoCorpSriLanka

011 5 777 000 | R.G. டிரேடர்ஸ் - 0777 340056 | நாடளாவிய அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Abans

JIIF
2018

ALUMKA
FOOD EQUIPMENT (PVT) LTD.

உடன் அழைப்பு : 077 0020444 (விற்பனை)
070 3020444 (சேவை)

எங்களிடம் வருகை தாருங்கள் 9வது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி
2018 ஜனவரி மாதம் 26ம் , 27ம் மற்றும் 28ம் திகதிகளில்
நகராட்சிமன்ற மைதானம்
சுப்பரமணியம் பூங்கா முன்பாக - யாழ்ப்பாணம்.
அறை இல :- 107, 108

காட்சியறைகள்: இல:555, கோட்டை வீதி, பிட்ட கோட்டை. தொலைபேசி: (011) 2077630
இல:284/1, தலவத்துகொட வீதி, ஹொகன்தர தெற்கு. தொலைபேசி: (011) 2185111
அலுவலக தொலைபேசி: (011) 2074223/4
www.alumkaequipment.lk
info@alumkaequipment.lk

14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சாவகச்சேரி நுணாவிற் குளம் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய பரம்பரை குரு

பிரம்மஸ்ரீ சபாபதிஜயர் - குருசாமி ஜயர்
சிவகடாட்சக் குருக்கள்

அன்னாரின் நினைவாக இன்று (26.01.2018) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் ஆலய மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவிற்குளம், சாவகச்சேரி. (CS/13257)(11)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 15 . 12 . 1939

மறைவு 27 . 12 . 2017

அமரர் இராசையா தங்கராசா (விஜிபத்தர்)

கடந்த 27.12.2017 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இராசையா தங்கராசா (விஜிபத்தர்) அவர்களின் மரணச் செய்தி அறிந்து, உடன் வந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து 28.01.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மாலிசந்தி, அல்வாய் தெற்கு, அல்வாய். 021 226 3369 (CS.391) (13.17)

குடும்பத்தினர்.

MAJESTIC CINEPLEX A CEYLON THEATRES CINEMA Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்

விசாரணை ☎ 021- 2227712

facebook. MajesticCineplexSL

www.ceylontheatres.lk

வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு (Bill போடுவதற்கு) வரவு செலவு கணக்கு பார்ப்பதற்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்பு - 077 6519913 (911/815)

வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் 3 அறை-களையும். இணைந்த குளியலறையை யும் கொண்ட பாடசாலை மற்றும் தேவாலயத்திற்கு அருகில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.

077 756 8282 (CS/13271) (11)

விற்பனைக்கு

கறைப்பிடித்தலைத் தடுக்கும் தன்மையும் சுற்றாடலுக்கு ஏற்புடையதும் உங்களுக்கு தேர்ந்தெடுக்கக் கூடிய வர்ணங்களில் நீண்டகாலம் நீடிக்கக் கூடியதுமான சிங் அலுமினியம். கூரைத்தகடுகள் மற்றும் Turbo,Roof, Ventilator, பாதுகாப்புத் தகடுகள், இணைப்புகள் ஒரே கூரையின் கீழ் மிக்க விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

Aybowan, No.419, Oldmoor Street, Colombo -12

011 2458 171 / 011 432 0020 (ACO/144)(11)

வீடு காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கல்வயல் ஐயனார் வீதிக்கு அண்மையில் உள்ள வீட்டுடன் கூடிய 7 பரப்பும் 13½ குளி காணி விற்பனைக்கு உண்டு.

077 899 4628 (AC/13361) (11)

பெயர்மாற்றம்

வேவி பிள்ளையார் லேன் வல்வெட்டி வல்வெட்டித் துறையைச் சேர்ந்த **விஜயன்** நவனிகாந்தன ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **விஜயன் காந்தன்** எனப் பெயர் மாற்றம் செய்வ தோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

(CS/13269)(11) விஜயன் காந்தன்

பதவி வெற்றிடம்

வவுனியாவை மையமாக கொண்டு வடக்கில் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்ற உள் நாட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று அதன் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கும் சமூக மேம் பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த தகுதிவாய்ந்த ஓர் இணைப்பாளரை தெரிவு செய்வதற் கான விண்ணப்பங்களை கோருகின்றது.

விண்ணப்பதாரி 30 வயதுக்கு குறையாதவராகவும் குறைந்த பட்சம் 05 வருட அனுபவம் உள்ளவரா கவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி பின்வரும் தொழில்சார் அனுபவங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

1. கிராமிய சமூக அமைப்புகள் குறிப்பாக பெண்கள் அமைப்புகளின் திறன் விருத்தி.
2. வாழ்வாதார விருத்தி திட்டங்கள்.
3. சிறுவர் நலன் விருத்தி மற்றும் அமைப்புக்கள் தொடர்பான துறைசார் அனுபவம்.
4. இளைஞர் யுவதிகளின் திறன் விருத்தி/அபிவிருத்தி நடவடிக்கைகள்.
5. திட்டமிடல், அறிக்கைகள் தயாரிப்பு தொடர்பான அனுபவங்கள்.

கல்வித்தகைமை

பல்கலைக்கழகப் பட்டம் அல்லது டிப்ளோமா கற்கைநெறி - கிராமிய அபிவிருத்தி தொடர்பான துறைகள் அல்லது அதற்கு சமமான ஏனைய தகைமைகள்.

சம்பளஅளவுத்திட்டம் : ரூ.30,000.00 (பேசித் தீர்மானிக்கப்படும்).
வேலைத்தளம் : பூநகரி
விண்ணப்ப முடிவுத்திகதி : 09.02.2018
மின்னஞ்சல் : mfm.dcrr@gmail.com

(AVA 253/15/17)

மரண அறிவித்தல்

சரவணமுத்து பாலச்சந்திரன்

மட்டுவில், சாவகச்சேரியைப் பிறப்பிட மாகவும் இல.556, கண்ணகை புரம் ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலச்சந்திரன் 23.01.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - ராசபுஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும், நேசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சகிந்தினி, சாமினி, சத்தீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிபாஸ் கரன், குகதாசன் (விவசாய திணைக்கள - சாரதி), தர்சா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், தாரங்கி, விதுரன், குருசோத், ருத்சோத் றோகித் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், கணகசுந்தரம், இரா சேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கி ரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஸ்கந்தபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 13.01.1955 இறப்பு 23.01.2018

தகவல்: குடும்பத்தினர்.

குகதாஸ் - 077 617 1853
வில்வம் - 076 460 5636

இந்த அரசாங்கம் அத்தியாவசிய மருந்துகளுக்கான விலையை 90% ஆல் குறைத்தது மட்டுமில்லாமல், மருத்துவத்துறைக்கு செய்த சேவைகள் மிகப்பெரிய உதவி.

இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற உதவிகள் கிடைக்க வேண்டுமானால், நாட்டைப் போலவே, ஊரையும் முன்னேற்றும் **UNP** அரசாங்கத்தை பலப்படுத்துவது எனது பெருமை பொறுப்பாகும்.

சுரேஷ்குமார்
வாடிக்கையாளர்

எமது கதை
தொடரும்...



இது கட்டணம் செலுத்தப்பட்டு பிரசுரமாகும் விளம்பரமாகும்

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

www.unp.lk

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மன்ம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

புங்குடுதீவில் நடந்தது வெறும் விபத்தல்ல!

மைத்திரி ரணில் கூட்டரசுக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்தபோது தமிழ் மக்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும் என்பது. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபடி மேலே போய் 1980களில் இருந்த நிலமைக்குப் படையினர் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது. ஆனால், அது நடக்கவில்லை. வடக்கில் உள்ள மக்களின் பரம்பலுடன் ஒப்பிடும்போது அளவுக்கதிகமான இராணுவத்தினர் இன்னும் இங்கு நிலைகொண்டுள்ளனர் என்கிற குற்றச்சாட்டுத் தொடர்ந்து உள்ளது. அத்தகைய நிலமையால் நேற்றுமுன்தினம் ஓர் அப்பாவிச் சிறுமியின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது. இது ஏற்றுக் கொள்ள முடியாதது.

யாழ். தீபகற்பத்தைச் சுற்றியுள்ள தீவுகளில் ஒன்றான புங்குடுதீவில் கடற்படையினரின் 'பவள்' கவச வாகனம் மோதியதில் திருலங்கன் கேசனா என்கிற 9 வயதுச் சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்தார். பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த அந்தச் சிறுமிக்கு எமனாக வந்திருந்தது கடற்படையினரின் பவள் கவச வாகனம். இந்த விபத்தில் கேசனாவின் மாமனும் காயமடைந்தார்.

இதனைச் சாதாரண ஒரு விபத்தாகப் பதிந்துள்ள பொலிஸார் வழக்கம் போல வாகனத்தின் சாரதியைக் கைது செய்ததுடன் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் இந்தச் சம்பவத்தைச் சாதாரண விபத்துச் சட்டங்களின் கீழாக அல்லாமல் திட்டமிட்ட கொலைக் குற்றத்துக்கான சட்டங்களின் கீழ் விசாரணை செய்யவேண்டும்.

ஏனெனில் போர்க் காலங்களில் பயன்படுத்தப்படும் பவள் கவச வாகனத்தைச் சாதாரண நாள்களில் பயன்படுத்தி இந்த விபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் இந்தப் பவள் கவச வாகனம் தடுப்பு உராய்வு (பிரேக்) இன்றி நீண்ட நாள்களாக ஓடித் திரிந்ததைக் கண்ட அந்தப் பகுதி மக்கள் உரிய கடற்படை அதிகாரிகளிடம் முறையிட்டதன் பின்னரும் அந்த வாகனத்தைச் சீராக்காமல் பொதுமக்கள் பயன்படுத்தும் வீதியில் ஓட அனுமதித்தது மக்களின் உயிர்களை அலட்சியப்படுத்தியதன் வெளிப்பாடே, எனவே வாகனச் சாரதிக்கு எதிராக மட்டுமன்றி அந்த வாகனத்தை வீதியில் பயணிக்க அனுமதித்த கடற்படை அதிகாரிக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொதுமக்கள் பாதுகாப்பை உதாசீனம் செய்தமை மற்றும் கொலை ஆகிய குற்றங்களின் கீழ் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகத் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நீதித்துறையும் காவல்துறையும் இது விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம்.

புங்குடுதீவில் 4 ஆயிரம் வரையான மக்களே இருக்கின்ற போதும் அங்கு 6 கடற்படை முகாம்கள் இருக்கின்றன என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். அந்தப் படை முகாம்களில் சில நூற்றுக்கணக்கான படையினரே இருக்கின்ற போதும் தீவு முழுவதும் பரந்து கடற்படை முகாம்கள் ஆக்கிரமித்துள்ளன. இவ்வாறு 6 முகாம்களை அங்கு வைத்திருப்பதற்கான பாதுகாப்புத் தேவைகள் ஏதும் இல்லாத போதும் அந்த முகாம்கள் திட்டமிட்டு ஏன் பேணப்படுகின்றன என்பதும் ஆராயப்பட வேண்டும்.

தீவகத்தில் காணப்படும் இவ்வாறான கனதியான படையினரின் இருப்பு, தீவக மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லாமல் இருப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று என்பதையும் கவனிக்கவேண்டும்.

எனவே மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் இத்தகைய படை முகாம்களை உடனடியாகக் குறைத்து படையினரின் தேவையற்ற நடமாட்டத்தை நிறுத்த கொழும்பு அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். போருக்குப் பின்னர் வடக்கில் நடைபெற்ற விபத்துக்களில் கணிசமானவற்றில் படையினரின் வாகனங்களும் தொடர்புபட்டுள்ளன என்கிற விவரத்தையும் பார்க்கின்றபோது உடனடியாக இதன் மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்

உசிலமணி

உள்ளூராட்சித்தேர்தல் வாக்களிப்பு நாள் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. தென்பகுதி, அரசியல், கொதி நிலையின் உச்சத்தில் போய்க் கொண்டிருக்கின்றது. வடக்கு அத்தகைய கொதி நிலையில் இல்லாவிடினும் கொதிநிலை நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக நகரத் தொடங்கியிருக்கின்றது. தேர்தல் என்று வந்தாலே ஒருவர் மீது ஒருவர் சேறை வாரியிறைப்பது எம்மிடையே ஊறிப்போன ஒரு பழக்கம். அப்படி நடக்கா விட்டால் அது தேர்தலே அல்ல என்பது எழுதாத விதி.

தமிழர்விடுதலைக்கூட்டணிக் காக உள்ளூராட்சித்தேர்தலில் வாக்குக் கேட்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பைச்சேர்ந்த, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வவுனியாவில் வைத்து அணுகுண்டொன்றைப் போட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் தன்னைத் தவிர ஏனைய 15 பேருக்கும் அரசு தலா 2 கோடி ரூபா ஒதுக்கியதாகவும், அரசியல் லஞ்சம் வழங்கியே அவர்களை வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்ததாகவும் அவர் குற்றம்சுமத்தியிருந்தார். இதே கருத்தை நாடாளுமன்றத்தில் அவர் கூறியிருந்தார். அது பெரிதாகவடுபடவில்லை. இப்போது தேர்தல் காலம் என்பதால், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்கு இந்த விடயம் பெரும் தீனி என்பதால் விவகாரம் பரபரப்பாகியிருக்கின்றது.

பேரம் பேசுதல்

சிவசக்தி ஆனந்தனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ்பிரேமசந்திரன் அடிக்கடி கூட்டமைப்பின் தலைவர்களைக் குற்றம்சுமத்தும்போது, அவர்கள் பேரம் பேசுவதில்லை என்று கூறுவார். அரச தலைவர் தேர்தலில் ஆதரவு வழங்கும்போதும் சரி, ஏனைய விடயங்களில் அரசுக்கு ஆதரவு வழங்கும் போதும் சரி இவர்கள் பேரம் பேசுவதில்லை என்று சுரேஷ் பிரேமசந்திரன்தான் குற்றம் சுமத்தி வந்தார்.

கடந்த டிசெம்பர் மாதம், வரவு செலவுத் திட்ட மூன்றாவது வாசிப்பு மீதான வாக்களிப்புக்குமுன்னதாகக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர். வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்றால் சில நிபந்தனைகளை முழுமைப்படுத்து மாறு கோரினர். அதற்கு ரணில் இணங்கிய பின்னரே ஆதரவாக வாக்களித்தனர்.

நீண்டகாலப்பிரச்சினையான காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல்கைதிகள் விவகாரம், காணி விவகாரம் உள்ளிட்டவிடயங்களும், உடனடிப்பிரச்சினையான அபிவிருத்தி விடயங்களும்தான் அங்கு பேரம் பேசலாக முன்வைக்கப்பட்டன.

வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கத்தக்கதாக, அவர்களுடன் கலந்துரையாடாமல் தென்பகுதி அமைச்சர்கள் நேரடியாக வடக்கு கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றனர் என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரணிலுடனான அந்தச் சந்திப்பில் ஆவேசமாகவெடுத்துரைத்தனர். எங்கள் மக்களின் தேவைகள் எங்களுக்குத் தான் தெரியும். தென்பகுதி அமைச்சர்கள் தங்களுக்கு வேண்டியதை எமது பிரதேசத்தில் செய்ய முடியாது. மக்களின் கோரிக்கைகளை நாங்கள் முன்வைக்கின்றோம். அதற்கு நிதி ஒதுக்கீடு வேண்டும் என்று கோரப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், அரசு 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு வழங்காவிட்டால் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டேன் என்று கூறியிருந்தார்.

யதார்த்தம்

வரவு - செலவுத் திட்டத்தில் சாதாரண பெரும்பான்மை இருந்தாலே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிடமுடியும். ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் அமைச்சர்களாக இருப்போரும் வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தாலே பாதீடு நிறைவேறி விடும். இதுதான் யதார்த்தம். அரசுமூன்றில் இரண்டுபெரும்பான்மையையும் எதிர்பார்த்தினால், கூட்டமைப்பின் ஆதரவையும் கோரவேண்டிய நிலை ஏற்பட்டது. சந்தர்ப்பம் பார்த்து பேரம் பேசல் இடம் பெற்றது.

இங்கே தருணம் பார்த்து பேரம் பேசி மக்களின் அபிவிருத்திக்காக 2 கோடி ரூபாவை அரசைக் கொண்டு ஒதுக்க வைத்தவர்கள் செய்தது தவறா? அல்லது வாக்களிக்காமல் விட்டு தனது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அபிவிருத்தியைத் தடுத்த சிவசக்தி ஆனந்தனது செயற்பாடு தவறானதா? வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக சிவசக்தி ஆனந்தன் வாக்களிக்காமல் விட்டதால் அவர்கண்ட பயன் என்ன?

வடக்கு முதல்வரின் குற்றச்சாட்டு

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. அந்த ஆண்டு ஜூன் மாதம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அரச தலைவர்

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவரவர்களது தொகுதி அபிவிருத்திக்கு திட்ட முன்மொழிவுகளைச் சமர்பித்திருந்தார்கள். அதற்கு அரசு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக நிதியை ஒதுக்கியுள்ளது. ஒரு சதம் கூட சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளுக்குச் செல்லாது. 2015 ஆம் ஆண்டு நடந்ததும் இதுதான். இந்த உண்மைகள் எல்லாம் தெரிந்திருந்தும், 2 கோடி ரூபா நிதி பெற்றதான கதையை இப்போது, அதுவும் தேர்தல் காலத்தில் நீங்கள் கூறுவதன் பின்னணியில் கூட்டணியின் வெற்றி தெரியவில்லை. மாறாக கூட்டமைப்பை தோற்கடித்து சிங்களக் கட்சிகளிடம் ஆட்சியைத் தாரைவார்க்கும் சூட்சுமமே எதிரொளிக்கிறது.





வரவு – செலவுத் திட்டத்தில் சாதாரணமான பெரும்பான்மை இருந்தாலே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிட முடியும். ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர்களாக இருப்போரும் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தாலே பாதீடு நிறைவேறி விடும். இதுதான் யதார்த்தம். அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எதிர்பார்த்ததினால், கூட்டமைப்பின் ஆதரவையும் கோரவேண்டிய நிலை ஏற்பட்டது. சந்தர்ப்பம் பார்த்து பேரம் பேசல் இடம்பெற்றது. இங்கே தருணம் பார்த்து பேரம் பேசி மக்களின் அபிவிருத்திக்காக 2 கோடி ரூபாவை அரசைக் கொண்டு ஒதுக்க வைத்தவர்கள் செய்தது தவறா? அல்லது வாக்களிக்காமல் விட்டு தனது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அபிவிருத்தியைத் தடுத்த சிவசக்தி ஆனந்தனது செயற்பாடு தவறானதா? வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக சிவசக்தி ஆனந்தன் வாக்களிக்காமல் விட்டதால் அவர் கண்ட பயன் என்ன?

மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த போது பரபரப்புக் குற்றச் சாட்டொன்றை முன்வைத்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தென்பகுதிக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது. வடக்கு மாகாண சபையை புறந்தள்ளி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேரடியாக நிதி வழங்கப்படுகின்றது என்று விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் காலம் என்பதால் குறித்த அந்தக் குற்றச்சாட்டும் பெரும் சர்ச்சையை அந்த நேரத்தில் தோற்றுவித்திருந்தது. கிட்டத்தட்ட சிவசக்தி ஆனந்தன் இப்போது முன்வைத்த விடயம் போன்றுதான் அந்தவிடயமும் பெரும்பரபரப்பாகியிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தென்பகுதிக்கு அழைக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டதாக முதலமைச்சர் தனது குற்றச்சாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

சுரேஷின் வாக்குமூலம்

குறிப்பிட்ட அந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர், சிவசக்தி ஆனந்தனின் கட்சித் தலைவரான சுரேஷ் பிரேமசந்திரன்.

முதலமைச்சரின் குற்றச்சாட்டு வெளியானதும், தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பேசிய சுரேஷ், 'நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்காது மாகாண சபைக்கூடாக அபிவிருத்திகளைச் செய்ய வேண்டும் என்ற முதலமைச்சரின் கருத்து சரியானது அல்ல. புதிய அரசு வந்த பின்னர் பன்முகப்படுத்தப்பட்ட நிதி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. எனினும் சில அமைச்சர்கள் ஊடாக நிதியைப் பெற்று சில அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பதிலளித்திருந்தார்.

விக்கியிடம் விளக்கம்

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்த குற்றச்சாட்டுத் தொடர்பில் அவரிடம் விளக்கம் கோருவது என்று, சுரேஷ் பிரேமசந்திரனும் பங்கெடுத்த கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இந்தச் செய்தி வெளியானதும் முதலமைச்சர் பதிலறிக்கையொன்றை வெளியிட்டார். அதில் தனது குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் சுரேஷ் பிரேமசந்திரன் நிதி பெற்றமையை உறுதிப்படுத்தியுள்ளார். வடக்கு மாகாண சபையைக் கலந்தாலோசிக்காமல் தென்பகுதியில் நிதி பெறப்பட்டது உண்மைதான் என்று விக்கி கூறியிருந்தார்.

கடுப்பான சுரேஷ்

முதலமைச்சரின் பதிலறிக்கையினால் கடுப்பான அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், மீண்டும் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தினார். "முதலமைச்சர் பயன்படுத்திய வார்த்தைகள் தவறானவை. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது சேறுபூச முதலமைச்சர் முயற்சிக்கின்றாரா? நாடாளுமன்றம் தென்பகுதியில்தான் இருக்கின்றது. மக்கள் எங்களிடம் முன்வைக்கும் கோரிக்கைகளை நாம் அங்கு சென்றுதான் தெரிவிக்கமுடியும். அதனடிப்படையில் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தென்பகுதிக்கு அழைக்கப்பட்டு நிதி வழங்கப்பட்டது என்பதற்கும், திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்கும் வேறுபாடுகள் உள்ளன" என்று அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் சுரேஷ் திருவாய் மலர்ந்தருளியிருந்தார்.

பதில் என்ன ?

சுரேஷ் பிரேமசந்திரன் உள்ளிட்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் தனியாக நிதி வழங்கப்பட்டது ஏன் ? கூட்டமைப்பில் அப்போது 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த நிலையில் மூவருக்குமாத்திரம் நிதி வழங்கியது ஏன்? நாடாளுமன்றத்தில் 225 பேர் இருக்கையில் இவர்களுக்கு மாத்திரம் நிதி வழங்கியது ஏன்? இப்போது இரண்டு கோடி ரூபா ஒதுக்கப்பட்டதுக்குப் பக்கம் பக்கமாக கேள்வி கேட்கும் சிவசக்தி ஆனந்தன், 2015 ஆம் ஆண்டு தனது கட்சியின் தலைவருக்கு நிதி கிடைத்தபோது ஏன் கேள்வி கேட்கவில்லை.

ஆனந்தனது கருத்துப்படி இப்போது வழங்கப்பட்ட 2 கோடி ரூபா அரசியல் இலஞ்சம் என்றால், முன்னர் சுரேஷ் பிரேமசந்திரனுக்கு வழங்கப்பட்ட நிதியும் அரசியல் இலஞ்சமே.

மக்கள் முன்வைத்த திட்டங்களுக்கே அரசு நிதி ஒதுக்கியதாக சுரேஷ் பிரேமசந்திரன் முன்வைத்த விளக்கம் சரியானால், தமது தொகுதி மக்களின் கோரிக்கைகளையே 2 கோடி ரூபாவுக்கு சமர்ப்பித்திருந்தோம் என்ற கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களது விளக்கமும் சரியானதே.

உங்களுக்கு வந்தால் குருதி மற்றவர்களுக்கு வந்தால் தக்காளிச் சட்னியா ஆனந்தன் அவர்களே?

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவரவர்களது தொகுதி அபிவிருத்திக்கு திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பித்திருந்தார்கள். அதற்கு அரசு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக நிதியை ஒதுக்கியுள்ளது. ஒரு சதம் கூட சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளுக்குச் செல்லாது. 2015 ஆம் ஆண்டு நடந்ததும் இதுதான். இந்த உண்மைகள் எல்லாம் தெரிந்திருந்தும், 2 கோடி ரூபா நிதி பெற்ற தானகதையை இப்போது, அதுவும் தேர்தல் காலத்தில் நீங்கள் கூறுவதன் பின்னணியில் கூட்டணியின் வெற்றி தெரியவில்லை. மாறாக கூட்டமைப்பை தோற்கடித்து சிங்களக் கட்சிகளிடம் ஆட்சியைத் தாரைவார்க்கும் சூட்சுமமே எதிரொலிக்கிறது.

ஆசிரியருக்கான கடிதம்

சூழலைப் பாதுகாக்க மிகச் சரியான நடவடிக்கை

காணிகள் மற்றும் பொது இடங்களில் ரயர்களை எரித்தால் சுமார் 10 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வரையில் தண்டம் விதிக்கப்படும் என்று சுகாதாரத் துறையினர் பொது மக்களுக்கு எச்சரித்துள்ளனர் என்பதான செய்தியொன்று உதயன் பத்திரிகையின் நேற்றைய பதிப்பில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இன்று சுற்றுச்சூழல் போய்க்கொண்டிருக்கும் போக்குடன் ஒப்பிடுகையில் இவ்வாறான உடும்புப்பிடி நடவடிக்கைகள்தான் சூழலின் எதிர்கால இருப்புக்குக் காத்திரமான பங்களிப்பை வழங்க வல்லன.

பிளாஸ்டிக்குக்கு எதிராக இலங்கை பூராகவும் பெரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அரச தலைவர் கடந்த வருடம் தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்தபோது ஏற்பட்ட எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையாயினும் ஏதோ ஆங்காங்கே சில செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

பிளாஸ்டிக்குக்கு எதிரான விழிப்புணர்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றனதான். ஆனால் டெங்குக்கு எதிரான செயற்திட்டம் என்றால் அது ரயர்கள் எரிக்கப்படுவதுதான் என்ற பிம்பம் எம்மில் பலருக்கு பதிந்துவிட்டது.

இதனால் பல இடங்களிலும் ரயர்கள் கொழுத்தப்பட்டதை கடந்த காலங்களில் அவதானிக்க முடிந்தது. சூழலுக்கு முழுவதும் ஒவ்வாத வகையில் எம்மவர்களின் செயற்பாடுகள் அமைந்துவிட்டன.

டெங்கில் இருந்து தப்பித்தல் என்ற முயற்சியில் இறங்கி அதைவிடவும் பெரிய ஆபத்தை விலைகொடுத்தும் வாங்கும் வகையில் அத்தகைய செயற்பாடுகள் அமைந்துவிட்டன. இவ்வாறான நிலையில் சுகாதாரத் துறையினரிடம் இருந்து இந்த அறிவிப்பு வந்திருப்பது மிகச் சிறப்பானது. ஆனால் வெறும் அறிவிப்பாக நின்றுவிடாமல் செயல்வடிவம் கொடுத்தால் இந்த மண் வளம் பெறும்.

- லயனல்

ஓவிய மேதை ரவிவர்மா

ஓவியர் ரவிவர்மா இந்திய ஓவியர்களிலேயே மிகச் சிறந்தவர். உலகப் புகழ்பெற்றவர். இயற்கைக் காட்சிகளை முதன் முதலில் வரைந்த இந்திய ஓவியர் இவரே.

ஒருநாள் அவர் ஓர் ஆங்கிலேயப் பெண் மணியின் வீட்டுக்குச் சென்றிருந்தார். பல விடயங்களை அந்தப் பெண்மணியிடம் அவர் பேசினார். இதனால் நேரம் போனதே அவருக்குத் தெரியவில்லை. இருட்டி விட்டது. ரவிவர்மா அந்தப் பெண் மணியிடம் விடைபெற்றுக் கிளம்பும் சமயத்தில் சற்றும் எதிர்பாராத விதமாக மழை பிடித்துக் கொண்டது. இதை எதிர்பார்த்திராத ரவி வர்மா "இப்பொழுது எப்படி வீட்டுக்குச் செல்வது?" என்று சிந்தித்தார். அப்பொழுது அந்த ஆங்கிலப் பெண் மணி ரவிவர்மாவைப் பார்த்து "மழை பிடித்துக் கொண்டதே என்று கவலையாய் உள்ளதா? கவலைப்படாதீர்கள். அதோ சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருக்கும் குடையை எடுத்துப் போங்கள்" என்று சொல்லி விட்டு, குடை வைக்கப்பட்டிருந்த இடத்தை நோக்கி கையைக் காட்டினார். "ஓ நன்றி மடம்" என்று சொன்ன ரவிவர்மா நடந்து சென்று அங்கே சாய்த்து வைக்கப்பட்டிருந்த குடையை எடுக்க முயன்ற போது அவர் கை வெறும் சுவரில்தான் மோதிக் கொண்டது.

ஒரு கணம் திகைத்துப்போனார் ரவிவர்மா. காரணம் அங்கே இருந்தது நிஜமான குடை அல்ல. நிஜக் குடை போல் தத்ரூபமாக வரையப்பட்ட ஓவியம் "ஒரு ஓவியரான தானே இந்த விடயத்தில் ஏமாந்து விட்டோமே" என்று நினைத்து அவர் வெட்கப்பட்டார். ஒரு மிகச் சிறந்த ஓவியரை ஏமாற்றி விட்டோம் என்ற திருப்தி அந்த ஆங்கிலப் பெண் மணிக்கு பின்னர் நிஜமான குடை ஒன்றைக் கொடுத்து அவரை அனுப்பி வைத்தார். அந்தப் பெண்மணி.

சில நாள்கள் சென்ற பின் அந்த ஆங்கிலப் பெண்மணியைத் தன் வீட்டுக்கு அழைத்தார் ரவிவர்மா.

அங்கு முன் அறையில் மிகப் பெரிய மேசை ஒன்றும் அதனைச் சுற்றி நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. அந்தப் பெண்மணி ரவிவர்மாவைப் பார்த்து விருந்துக்கு என்னைத் தவிர வேறு யாருமே வரவில்லையா? நாற்காலிகள் அனைத்தும் காலியாய்க் கிடைக்கின்றனவே!" என்று கேட்டார்.

"அனைவரும் வருகின்ற நேரம்தான் நீங்கள் சற்று முன்னேயே வந்து விட்டீர்கள். முதலில் நீங்கள் சென்று அமருங்கள். நான் வெளியே அவர்கள் வருகிறார்களா என்று பார்த்து விட்டு வருகிறேன்!"" என்று சொல்லிவிட்டு வாசல் பக்கம் நோக்கித் திரும்பினார்.ரவிவர்மா.

ஆங்கிலப் பெண்மணி நடந்து சென்று ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அடுத்த கணம் தடுமாறி கீழே விழுந்தார்.

அதன் பின்புதான் கூட்டத்தில் மேசை நாற்காலிகள் எதுவும் போடப்பட்டிருக்கவில்லை என்ற விவரம் பெண்மணிக்குத் தெரிந்தது. பின்னர் தான் பார்த்தது என்ன என்று வியப்பு மேலிட பெண்மணி உற்றுக்கவனித்தார். அப்பொழுது தான் அவருக்குத் தெரிந்தது கூட்டத்தின் நடுவே தொங்க விடப்பட்டிருந்த திரைச் சீலையில் மேசை மற்றும் நாற்காலிகள் தத்ரூபமாக வரையப்பட்டிருந்தன என்று பெண்மணி வெட்கப்பட்டுத் தலை கவிழ்ந்தார். தான் ரவிவர்மாவை அன்று ஏமாற்றி மகிழ்ந்ததற்கு அவர் இன்று தன்னைப் பழி வாங்கி விடவில்லை. மாறாக தனது ஓவியத்திற மையைக் காட்டியுள்ளார். எத்தனை மக்தான மனிதர் என்று நினைத்து மேலும் வியந்தார் அந்தப் பெண்மணி.

பயிற்சி

ஒத்த ஒலிக்கும் சொற்கள் இவ்விரண்டு எழுதுவோம்

1.	பள்ளம்	....
2.	பனி	....
3.	வட்டம்	....
4.	ஒன்று	....
5.	விரல்	....
6.	பொட்டு	....
7.	கன்னம்	....
8.	பணம்	....
9.	மறம்	....
10.	தலை	....

பின்வரும் சொற்களில் உள்ள உயிர் குறிகளின் பெயர்களை எழுதுவோம்

1. சுகாதாரம் .....
2. சூழ்ச்சி .....
3. கொத்தினான் .....
4. நூலகம் .....
5. பூவிதழ் .....

"பை'களின் பல வகைகள்

- உழுவதற்கு உதவும் பை - கலப்பை
- உண்பதற்கு பயன்படும் பை - கோப்பை
- மரங்களில் இதுவும் ஒரு பை - இலுப்பை
- மாதரின் கைகளில் இருப்பது - கைப்பை
- கறி சமைக்க உதவும் பை - அகப்பை
- கர்ப்பம் தரிக்க உதவும்பை - கர்ப்பப்பை
- வீதியோரம் வளரும் புல் - தருப்பை
- வீட்டில் இருந்து அகற்றப்படுவது - குப்பை
- தேங்காயின் இளைய பருவம் - குரும்பை
- சோர்ந்தோர் பிரியும்போது சொல்வது - குட்பை'

விடுகதைகள்

1. அவனுக்கு ஒரு முறை பல்விழுந்தால் மறுமுறை முளைக்காது அவன் யார் ? ----------
2. அகன்ற வாய் உடையவர் திறந்த வாய் மூடாதவர் அவர் யார்?----------
3. அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது அது என்ன? ----------
4. அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி வாலினால் நீரை வற்றக் குடிக்குது அது என்ன? ----------
5. அண்ணனும் தம்பியும் இரண்டு பேர் அவர்களைச் சுற்றிலும் பன்னிருவர் அவர் யார்? ----------
6. அந்தரத்தில் பறக்கும் பறவையும் அல்ல அழகான வால் உண்டு குரங்கும் அல்ல அது என்ன? ----------
7. அடி மேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும் அது என்ன? ----------
8. அலை அலையாய் ஆடிவரும் கடலும் அல்ல நிலையாக இருக்காது நிலவும் அல்ல அது என்ன? ----------
9. அழுத்தி அழுத்தி மிதித்தால் அலறித் துடித்து ஓடும் அது எது? ----------
10. அந்தியிலே வருவான் அதிகாலை மறைவான் அவன் யார்? ----------

விடைகள்

1. சீப்பு	2. செக்கு
3. சங்கு	4. விளக்குத்திரி
5. கடிகாரம்	6. பட்டம்
7. மிருதங்கம்	8. முகில்
9. சைக்கிள்	10. இருள்



புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்

சிறுவன் வோஷிங்டன்

ஒரு தகப்பனார் தன் மைந்தனுக்கு ஒரு பேனாக் கத்தியைப் பரிசாக வழங்கினார். மைந்தன் உடனே அதன் கூர்மையைப் பதம் பார்த்தான். தன் கண்ணில் கண்ட பொருள்களையெல்லாம் வெட்டிச் சீவினான். அதன் கூர்மையைக் கண்டு ஆர்வத்துடன் வியந்தான். வீட்டுத் தோட்டத்தினுள் புகுந்து கைக்கு அகப்பட்டவை எல்லாவற்றையும் வெட்டித் தள்ளினான். அவைகளில் ஒன்று அவன் தந்தை வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்திருந்த சிறந்த ஒரு செடியாகும்.

பெரிய பதவியிலுள்ள அவனது தந்தை அந்தச் செடிக்குத் தானே தண்ணீர் விடுவார். தானே சுத்திகரிப்பார். தம் நேரடி கவனத்தில் அந்தச் செடியைக் கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தார். அன்று மாலை நேரத்தில் தாம் அருமையாக வளர்த்து வந்த செடி வெட்டுண்டு கிடப்பதைக் கண்டு தந்தை வெகுண்டெழுந்தார். "வெளிநாட்டுச் செடியை வெட்டியவனைச் சும்மா விடப் போவதில்லை" என்று கத்தினார்.

வீட்டிலுள்ள யாவரும் பயந்து நடுங்கினர். சிறுவன் செடியை வெட்டியது எவருக்கும் தெரியாது. தந்தையோ கொடிய கோபத்தில் இருந்தார். சிறுவனது மனச்சாட்சி சும்மா இருக்கவில்லை. சிறுவன் தந்தை முன் நின்றான். அப்பா நான்தான் அந்தச் செடியை வெட்டிவிட்டேன். நீங்கள் பரிசாகத் தந்த பேனாக் கத்தியால் சில செடிகளை வெட்டிப் பார்த்தேன். அவைகளில் இந்தச் செடியும் அகப்பட்டு விட்டது" என்றான் அழுகையோடு.

இப்பொழுது தந்தையின் கோபம் பச்சாத்தாபமாக மாறியது. மகனைத் தூக்கியெடுத்து முத்தம் கொடுத்தார். "மகனே! இம் மாதிரி ஆயிரம் செடிகள் அழிந்து போனாலும் எனக்குக் கவலையில்லை என் மகன் உண்மை சொன்னான். அதுவே எனக்குப் போதும்" என்றார்.

இந்தச் சிறுவன் தான் அமெரிக்க அதிபராகத் திகழ்ந்த ஜோர்ஜ் வோஷிங்டன். அவரின் பெயரால் அமெரிக்கா தலைநகரம் அமைந்துள்ளது.

யாழ்.பன்னாட்டு வர்த்தக கண்காட்சி

"வட பகுதிக்கான உங்களது நுழைவாயில்"

யாழவன்

வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு பரந்துபட்ட நிறைவான வாய்ப்புக்களை வழங்கி, வட பகுதிக்கான பன்முகத் தன்மையுடைய நுழைவாயிலாகக் கருதப்படுகின்ற யாழ்.பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி நிகழ்வுகள் இன்று முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 28ஆம் திகதி வரை கோலாகலமாக இடம் பெறவுள்ளன.

இவ்வாண்டு ஒன்பதாவது தடவையாகவும் இடம்பெறவுள்ள இந்த வருடாந்த சந்தை நிகழ்வானது உள்நாட்டு,பன்னாட்டு வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் சந்திக்கும் ஒரு முக்கியமான கள நிகழ்வாக அமையவுள்ளது. அந்தவகையில் 'வட பகுதிக்கான நுழைவாயில்' எனும் தனிச் சிறப்பை பெற்றுக்கொள்கின்றது.துரித கதியில் வளர்ச்சி நிலை கண்டு வருகின்ற வட பிராந்தியத்தில், வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள வழி ஏற்படுத்திக் கொடுக்கும் விதமாக இந்த வர்த்தக சந்தையானது, பரந்து

(கோப்புப் படம்)

> "ஒன்பதாவது தடவையாகவும் இடம்பெறுகின்ற இந்த பன்னாட்டு வர்த்தக கண்காட்சி நிகழ்வில், "நிர்மாணம், விருந்தோம்பல், உணவு, பான வகை மற்றும் பொதியிடல், மோட்டார் வாகனம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், நிதி, ஆடை மற்றும் புடவை, விவசாயம், நுகர்வோர் பொருள்கள் மற்றும் இன்னும் பல துறைசார் காண்பியங்கள் என்ற வகையில் மூன்று தினங்கள் காட்சி கூடங்கள் அமையவுள்ளன. கண்காட்சி நிகழ்வு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் அதற்கு இணையாக வேறு பல நிகழ்வுகளையும் ஏற்பாட்டாளர்கள் ஒழுங்குபடுத்தியுள்ளனர். கண்காட்சிக்கு முன்னரான வீதிப் பிரச்சாரம் சிறுவர்களுக்கான களியாட்ட நிகழ்வு மற்றும் பொழுதுபோக்கு பூங்கா போன்ற பல்வேறு அம்சங்கள் உள்ளடங்கியுள்ளமை குறித்து நோக்கத்தக்கது.

பட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளை உள்ளடக்கிய 350 வரையான கண்காட்சிக் கூடங்களை கொண்டமைந்துள்ளது.

ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும் 'Lanka Exhibition & Conference Services (Pvt)Ltd (LECS)' நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நிர்வகிக்கப்படும் இந்த கண்காட்சி நிகழ்வுக்கு, யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் (CCIY) இணை ஏற்பாட்டாளர்களாக செயற்படுவதுடன், யாழ்.மாநகர சபை, இலங்கை மாநாட்டு இலாகா மற்றும் பன்னாட்டு வர்த்தக மன்றம் ஆகியவற்றின் ஆதரவும் வழங்கப்பட்டுவருகிறது. அத்தோடு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணை தூதரகம், தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் மற்றும் இந்தியாவின் 'ASSOCHAM' நிறுவனம் ஆகியவற்றின் அங்கீகாரமும் கிடைக்கப்பெறுகிறது.

வட பிராந்தியத்தில் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த விரும்புகின்ற நிறுவனங்களுக்கான நிகழ்வாக கருதப்படுகின்ற, பல வகையான உற்பத்திகளைக் கொண்ட இந்த வர்த்தகக் கண்காட்சியானது வட பகுதி நிறுவனங்களுக்கும் எல்லைக்கு அப்பால் சென்று தமது வர்த்தக முயற்சிகளை திருப்திகரமான முறையில் முன்னெடுப்பதற்கான அடிப்படையை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. அத்துடன் எந்தவொரு தொழிற்றுறையிலும் சிறந்து விளங்குகின்ற முன்னணிச் செயற்பாட்டாளர்களுடன் கரம் கோர்த்து ஒன்றாக செயற்படுவதற்குரிய வாய்ப்பினை வழங்குகிறது.

ஒவ்வோர் ஆண்டிலும் சராசரியாக 60 ஆயிரம் வரையான பார்வையாளர்களை தன்பால் ஈர்க்கின்ற வகையில் இந்த கண்காட்சி நிகழ்வு தனித்துவம் பெற்று விளங்குகிறது. வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் 2 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு விலைத் தள்ளுபடி கிடைக்கப்பெறுவதுடன், அனைத்து வயது மட்டங்களை சார்ந்தவர்களையும் கவரும் விதமான பொழுதுபோக்கு அம்சங்களும், வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.குறிப்பாக, "சிறுவர்கள் விளையாடி மகிழ்வதற்குரிய பிரதேசத்துடன், பொழுதுபோக்கு பூங்கா ஒன்றும், பல வகைப்பட்ட உணவு மற்றும் பான வகைகளும், வியப்பூட்டும் பரிசுகளை வென்று தரும் ஒவ்வொரு மணித்தியால நேர இடைவெளியிலும் இடம் பெறும் அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பு செயன்முறையும்" சிறப்புற வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவை பிரதிநிதித்துவம் செய்கின்ற வர்த்தக சம்மேளனக் கூட்டமைப்பின் (ASSOCHAM) ஏற்பாட்டிலும்,அனுசரனையிலும் இந்தியாவிலிருந்து வருகைதரவுள்ள விசேட தூதுக்குழு ஒன்று வர்த்தக கண்காட்சியில் கலந்துகொள்ளவுள்ளதுடன், வட பிராந்தியத்திலுள்ள வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராயவுள்ளது.

மேலும், நாட்டின் தென் பாகங்களைச் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளை மட்டுமே உள்ளடக்கியவாறு தனித்து 120 கண்காட்சிக்கூடங்களுடன் கடந்த 2002ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி செயற்றிட்டமானது கடந்த காலங்களில் முன்னேற்றம் கண்டதுடன், பன்னாட்டு பங்காளர்கள் மற்றும் வட மாகாணத்தில் வளர்ச்சி கண்டு வருகின்ற நிறுவனங்களையும் தற்போது உள்வாங்கிக் கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்தக் கண்காட்சி நிகழ்வு வளர்ச்சி கண்டுள்ளமை தொடர்பில் 'LECS' நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆசிம் முக்தார் கருத்து தெரிக்கையில்,

"வடக்கில் கிடைக்கும் வர்த்தக வாய்ப்புகளையும், வளர்ச்சி வாய்ப்புகளையும் வர்த்தகர்கள் இனங்கண்டு கொண்டுள்ளனர்.நாம் முதன் முறையாக கண்காட்சி நிகழ்வை ஏற்பாடு செய்த வேளையில் கண்காட்சியில் கலந்துகொண்ட வர்த்தகர்கள் பலர் அவர்களுடைய உற்பத்திகள் மற்றும் சேவைகளை ஒரு நாளிலேயே விற்றுத் தீர்த்தனர். இதன் காரணமாக நிகழ்வில் தொடர்ந்து வந்த தினங்களுக்கு கண்காட்சிக் கூடங்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த காலங்களை பொறுத்தவரையில், பல்வேறு துறைகள் சார்ந்தும் வடக்கில் வெளிப்படையான வளர்ச்சியை நாம் கண்டுகொண்டுள்ளோம். இத்தகைய பன்னாட்டளவிலான வர்த்தக கண்காட்சி நிகழ்வானது, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகத்துறைகளுக்கு அதிக வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதிலும் முக்கிய பங்கினை வழங்கியுள்ளது." என்றார்.

வடமாகாணத்தில் வெளிப்படையான வளர்ச்சியின் அம்சமாக இவ்வாண்டு இடம் பெறுகின்ற கண்காட்சி நிகழ்வில், யாழ்ப்பாணத்தை முதன்மைத் தளமாகக் கொண்டு இயங்குநிலை பெறுகின்ற 30 நிறுவனங்கள் கலந்துகொள்ளவுள்ளன.

தவிர, 'சமூகத்துக்கு பிரதியுபகாரம் செய்தல்' என்ற முன்னெடுப்புக்கு அமைவாக, நுழைவுச் சீட்டு விற்பனை மூலமாக பெறப்படும் வருமானத்தை ஒவ்வோர் ஆண்டும் யாழ்ப்பாணம் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துக்கு (CCIY)நன்கொடையாக வழங்கி, வட பிராந்தியத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மீது மீள் முதலீடு செய்து, பல வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு மிகவும் தேவையாகவுள்ள அடிப்படைக் கட்டமைவுகளுக்கு 'எல்.ஈ.சி.எஸ்' நிறுவனம் (LECS) உதவி வருகின்றது.

அந்த வகையில் ஒன்பதாவது தடவையாகவும் இடம்பெறுகின்ற இந்த பன்னாட்டு வர்த்தக கண்காட்சி நிகழ்வில், "நிர்மாணம், விருந்தோம்பல், உணவு, பான வகை மற்றும் பொதியிடல், மோட்டார் வாகனம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், நிதி, ஆடை மற்றும் புடவை, விவசாயம், நுகர்வோர் பொருள்கள் மற்றும் இன்னும் பல துறைசார் காண்பியங்கள்" என்ற வகையில் மூன்று தினங்கள் காட்சி கூடங்கள் அமையவுள்ளன. கண்காட்சி நிகழ்வு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அதற்கு இணையாக வேறு பல நிகழ்வுகளையும் ஏற்பாட்டாளர்கள் ஒழுங்குபடுத்தியுள்ளனர். கண்காட்சிக்கு முன்னரான வீதிப் பிரச்சாரம் சிறுவர்களுக்கான களியாட்ட நிகழ்வு மற்றும் பொழுதுபோக்கு பூங்கா போன்ற பல்வேறு அம்சங்கள் உள்ளடங்கியுள்ளமை குறித்து நோக்கத்தக்கது.

இறைவனின் நிழலில் எவர் அந்த ஏழுபேர்?

வெயிலின் கொடுமையை வெறுப்பவர் உண்டு. நிழலை விரும்பாதவர் எவரே னும் உள்ளனரா? அதிலும் குறிப்பாக இறைவன் தரும் நிழலை விரும்பாதவர் எவர் இருக்கிறார்?
உலகில் கிடைக்கும் சாதாரண நிழலைப் பெறுவதற்காக ஓடி இடம் தேடும் எம்மில் பலர், இறைவனின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத மறுமை நாளில் அந்த நிழலைப் பெறுவதற்காக நாம் என்ன முயற்சிகள் செய்தோம் என்று ஒரு நொடி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நீதிமிக்க ஆட்சியாளர்:
"ஓர் அடியானுக்கு குடிமக்களின் பொறுப்பை இறைவன் வழங்கியிருக்க, அவன் அவர்களின் நலனைக் காக்கத் தவறினால், சொர்க்கத்தின் வாடையைக் கூட அவன் பெறமாட்டான்" என நபி தெரிவிக்கிறார்.

இறைவழிபாட்டில் வளர்ந்த இளைஞன்:
"மறுமை நாளில் நான்கு கேள்விகள் கேட்கப்படும் வரை எந்தவொரு அடியானின் இரண்டு கால்களும் அந்த இடத்தைவிட்டு நகராது. அவை: அவன் தமது ஆயுளை எவ்வாறு கழித்தான், அவன் தமது வாலிபத்தை எவ்வாறு செலவழித்தான், அவன் பொருளை எவ்வாறு சம்பாதித்து, எவ்வாறு செலவு செய்தான், அவன் தான் கற்றவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தினான்" என்று குறிப்பிடுகிறார் நபி.

பள்ளிவாசலுடன் தொடர்புடைய இதயத்தைக் கொண்டவர்
"ஊர்களில் இறைவனுக்கு மிகவும் பிடித்தமானது, அதில் அமைந்திருக்கும் பள்ளிவாசல்களாகும். ஊர்களில் இறைவனுக்கு மிகவும் வெறுப்பு தரக்கூடியது அங்கு அமைந்திருக்கும் கடைவீதிகளாகும்" என நபி மொழிகிறார்.

இறைவனுக்காகவே நேசித்து அவனுக்காகவே பிரியும் இருவர்
"எவர் அல்லாஹ்விற்காக மட்டும் பிறருக்குக் கொடுக்கிறாரோ, மேலும், அல்லாஹ்விற்காக மட்டும் கொடுப்பதை நிறுத்துகிறாரோ, மேலும் அவரை அல்லாஹ்விற்காக மட்டும் நேசிக்கிறாரோ, மேலும் அவர் அவரை அல்லாஹ்விற்காக மட்டும் வெறுக்கிறாரோ, அத்தகைய மனிதரின் இறை நம்பிக்கை பரிபூரணம் அடைந்து விட்டது" என நபி எடுத்தியம்புகிறார்.

பாதுகாக்கும் பொறுப்பு:
"எவர் தமது இரு தொடைகளுக்கு மத்தியிலுள்ள மறைவிடத்தையும், தமது இரு தாடைகளுக்கு மத்தியிலுள்ள நாவையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாரோ, அவருக்கு சொர்க்கம் உண்டு என்பதை நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்" என நபி தெரிவிக்கிறார்.

தமது இடக்கரம் செய்த தர்மத்தை வலக்கரம் அறியாது காத்தவர்
"தமது செல்வங்களை இரவிலும், பகலிலும், ரகசியமாகவும், வெளிப்படையாகவும் செலவிடுவோருக்கு தமது இறைவனிடம் அவர்களுக்கான கூலி உண்டு. அவர்களுக்கு எந்த அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்" என நம்பிக்கை தருகிறார் நபி.

இறைவனை நினைத்து கண்ணீர் சிந்திய மனிதர்
இறையச்சத்தால் அழுத கண், இறை வழியில் விழித்திருந்து பாதுகாத்த கண் ஆகியவை ஒருபோதும் தீண்டப்படாது. மறுமையில் நிழலே இல்லாத அந்த நாளில் இறைவனுடைய நிழலில் இளைப்பாறும் பாக்கியமும், சுவன பாக்கியமும், சொர்க்கத்தின் சகலவித மான பாக்கியங்களும், நற்பேறு களும் இந்த ஏழு அம்சங்கள் நிறைந்த மனிதர்களுக்குக் கிடைக்குமாம்.

2001 - இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட 7.7 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தை அடுத்து சுமார் 20ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

வரலாற்றில் இன்றைய தினம் 26.01.2018

1531 - போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் ஏற்பட்ட பூகம்பத்தில் சுமார் 30 ஆயிரம் பேர்வரை உயிரிழந்தனர்.
1950 - இந்தியாவின் குடியரசு அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.
1952 - பிரித்தானிய மற்றும் எகிப்திய உயர் வகுப்பு வர்த்தகர்களை இலக்காகக் கொண்டு எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் கலவரம் வெடித்தது.
1965 - இந்தியாவின் உத்தியோகபூர்வ மொழியாகியது ஹிந்தி.
1980 - இஸ்ரேலும், எகிப்தும் இராஜரீக உறவை ஏற்படுத்திக்கொண்டன.

மனசாட்சிக்குக் கட்டுபட்டு செயல்படும் தனுசு ராசியினரே இந்த மாதம் எடுத்த முயற்சிகள் கை கூடும். வரவுக் கேற்ற செலவு ஏற்படும். எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் உண்டாகும். மனோ தைரியம் கூடும். மற்றவர்களால் வீண் குற்றம் சாட்டப்படலாம். எனவே கவனம் தேவை. கண்நோய், பித்தம், வாதம் சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட்டு நீங்கும். வார்த்தைக்கு மதிப்பு இருக்கும். திடீர் கோபம் உண்டாகும்.
தொழில், வியாபாரத்தில் செலவுகள் அதிகரிக்கும். உங்கள் கீழ் வேலை செய்பவர்களின் செயல்களால் உங்களுக்குக் கோபம் உண்டாகலாம். நிதானமாக அவர்களிடம் பேசுவது நன்மை தரும். பழைய பாக்கிகளை வசூலிப்பதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகம் தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். அலுவலகத்தில் உள்ள சக ஊழியர்கள், மேல் அதிகாரிகளிடம் வீண் பேச்சுக்களைத் தவிர்ப்பது நல்லது.
கணவன், மனைவிக்கிடையே திடீர் வாக்குவாதம் ஏற்படும். கவனமாக பேசுவதன் மூலம் நெருக்கம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை குடும்பத்தினரின் ஆரோக்கிய குறைவு ஆகியவற்றால் செலவு அதிகரிக்கும். சில்லறைச் சண்டைகள் அக்கம் பக்கத்தினருடன் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது.

பெண்களுக்கு: வலியச் சென்று உதவுவதன் மூலம் வீண் பழி ஏற்படலாம். கவனம் தேவை. கோபத்தைத் தவிர்ப்பது நல்லது.
அரசியல்வாதிகளுக்கு: வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சில விடயங்களை அமைதியாக இருப்பதன் மூலம் சாதித்துக் கொள்வீர்கள்.
கலைத்துறையினருக்கு: உடல் நலத்தில் அக்கறை செலுத்துவது நன்மை தரும். அலைச்சலைக் குறைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.
மாணவர்களுக்கு: எந்த வேலை செய்தாலும் கவனமாகச் செய்வது நல்லது. பாடம் தொடர்பான சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டு படிப்பது நல்லது.

பரிகாரம்: வியாழக்கிழமையில் முல்லை மலர் சாற்றித் தட்சிணாமூர்த்தியை வழிபடுவது கடன் பிரச்னையைத் தீர்க்கும். செல்வம் சேரும்.

கோபுரம் தரிசனம்

ஆலயம் என்பதைப் படுத்திருக்கும் ஒரு மனிதனின் உடலாக எண்ணிக் கொள்ளவேண்டும். மனிதனின் தலை, கழுத்து, மார்பு, தொப்புள், கால்கள், பாதங்கள் இப்படியாகக் கோயிலின் கர்ப்பக்கிரகம் முதல் ராஜகோபுரம் வரை உள்ளன.
கருவறை விமானம் தலை, அர்த்தமண்டபம் கழுத்து, மகாமண்டபம் மார்பு, இங்கு தான் இதயத் துடிப்பு இருப்பது போல நடராஜர் நடனமாடும் சந்நிதி அமைக்கப்படும். தொப்புள் கொடிமரம். ராஜகோபுரம் பாதங்கள். இப்படி இறைத்திருமேனியாக இருக்கும் கோயிலில் கருவறையின் மேலே விமானம் உள்ளது. "மானம்' என்றால் "அளவு', 'வி' என்றால் "கடந்தது'. "அளவு கடந்த தெய்வீக சக்தி கொண்டது விமானம். கோபுரம் என்பதைக் கோ+புரம்' என்று பிரிக்க வேண்டும். "கோ' என்றால் இறைவன். "புரம்' என்றால் "இருப்பிடம்' . இறைவனின் இருப்பிடமே கோபுரம். அதனால் தான் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் அளவுக்கு கோபுரத்தை உயரமாகக் கட்டுகிறார்கள். இதனால் தான் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்று சொல்லும் வழக்கம் வந்தது.

நாளை
27.01.2018
சனிக்கிழமை
தை - 14 ஏகாதசி விரதம்
திதி: தசமி காலை 07.27
நட்சத்திரம்: ரோகினி பி.இ. 01.04 வரை
சுபநேரம்: 03.36–05.06 வரை
ராகுகாலம்: 09.36–11.06 வரை

புதுக்குடியிருப்பு பிரதேசசபை பொது அறிவித்தல் - 2018

1. படவரைஞராக பதிவு செய்தல்.
   1.1. 2018 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்வதற்கும், புதுப்பித்து கொள்வதற்கும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.
2. வியாபார உரிம அனுமதிப் பத்திரம் - 2018
   2.1. இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2018ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தைத் தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனை பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 2018.03.31 ஆம் திகதிக்குள் மீளச்செலுத்தி உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுகொள்கின்றேன்.
3. வீடமைப்பு நகர சீரதிருத்தம் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகராரமான அறிவித்தல்
   3.1. புதுக்குடியிருப்பு பிரதேசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார், அரசசார்பு கட்டங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளை அனுமதி இன்றி செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக் குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.
   3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கபடாத பட்சத்தில் புதுப்பித்தல் வேண்டும்.
   3.3. சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டிமுடித்தவர்கள் கட்டிமுடிக்கப் பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.
4. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) - 2018
   4.1. மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் ப்யனைக் கொண்டு, எனக்கு வழங்கப்பட்ட குறிக்கபட்ட அதிகாரங்களின் கீழ், புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க, 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்க பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக, மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கபட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2018 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றேன்
5. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்
   5.1. இப் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 28.02.2018 ஆம் திகதிக்கு முன் உரியகட்டணத்தைச் செலுத்திசபையின் அனுமதியைப் பெற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்றுமட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடானான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப் பலகைகளுக்குப் பிரதேசசபையின் அனுமதிபெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத பெயர்ப்பலகைகள் பிரதேச சபையால் அகற்றப்படும்.
6. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அன்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்.
   6.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச் சந்தைகள், இறைச்சிகடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1.5கி.மீ வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பனவர்த்தக நிலையங்களிலோ, வீதி யோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடை செய்ய பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறிய தருகின்றேன்.
7. பொது இடங்களில் கழிவுகள் போடுதல்.
   7.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றிக் கொண்டுசெல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடைசெய்யபட்டுள்ளது. தவறின் பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.
8. பொது இடங்களில் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளைப் போடுதல் தடைசெய்யபட்டுள்ளது.
   8.1. சபையின் எல்லைக்குட்பட்டபொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுப் பொருள்களைப் போடுதல் தடை செய்யப் பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமை யாளர்கள் கொள்கலனில் கழிவுப் பொருட்களைச் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணத்தைச் செலுத்தி சுற்றுசூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
9. பொது சுகாதாரம் பேனுதல்.
   9.1. சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும், பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
10. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டிவைத்தல்.
    10.1. சபை எல்லைக்குள் பொதுப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளை உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டு பிடிகூலி, தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன் செலுத்தத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.
11. சபைஎல்லைக்குள்.
    11.1. சபை எல்லைக்குள் கல், மண் என்பவற்றுக்கான வழி அனுமதிகுறித்த உபஅலுவலங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். சபை எல்லைக்குள் வளர்ப்புநாய் பதிவுகள் உட்படுத்தப்பட வேண்டும். சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான அனுமதி பெறப்படல் வேண்டும்.

செயலாளர்,
பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு.
2018.01.25

(JN 5653)(10)

பணியாளர் தேவை

யாழிலும் கொழும்பிலும் இயங்கும் மொத்த வியாபார நிலையத்திற்கு தங்கிநின்று கடமை புரிய ஆண் பணியாளர்கள் தேவை. உணவு தங்குமிடம் இலவசம்.

T.P: - 071 766 7715

(C3150/3/15)

பிரத்தியேக வகுப்பு

கணிதம்/விஞ்ஞானம்
தரம் - 6, 7, 8
English / Tamil Medium
உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு - 021 320 7949

(C 9122)

விநியோக வாகனம் தேவை

சிறிய ரக டெலிவரி.
வான் விநியோக நடவடிக்கைக்காக விலைக்கு தேவை.
தொடர்பு -
077 659 5275, 077 963 6502

(C 9120/15)

கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டச் செயலகத்தில் திட்டமிடல் பிரிவின் சாரதியாக கடமையாற்றிய

ஆறுமுகம் சிவலட்சணம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்

(c 5646,16/15,17)

மரண அறிவித்தல்

திருமதி பவானியம்மா குழந்தைவேலு
(நயினாதீவு)

நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், கோண்டாவில் பழனியாண்டவர் கோயிலடி மற்றும் நாயன்மார்கட்டு ஆகிய பிரதேசங்களை வதிவிடமாகக்கொண்ட திருமதி பவானியம்மா குழந்தைவேலு நேற்று (25.01.2018) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான சுப்பையா இராமாசிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து வள்ளியம்மை தம்பதியரின் அன்புமருமகளும் குலசபாநாதன், தவகுலநாதன் (இளைப்பாறிய தபால்அதிபர், யாழ்ப்பாணம்), சுந்தரநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் மகேந்திரனின் சிறியதாயும் அருள்நாயகி, வசந்தி, நந்தினி (சுவிஸ்), பத்மராணி ஆகியோரின் அன்புமாமியும் சுவேந்தா (யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), நிகேசன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), சுபாங்கி (சுவிஸ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற வர்களான பாலசுந்தரம், சுந்தரமூர்த்தி, பொன்னம்பலம், பாலாம்பிகை, அன்னபூரணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, விசாலாட்சி, நாகமுத்து மற்றும் நாகரத்தினம் காலஞ்சென்றவர்களான m.k. கனகரத்தினம், தங்கேஸ்வரன் மற்றும் அன்னலட்சுமி, இரத்தினசபாபதி காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், சபாரத்தினம் மற்றும் சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்மணி வீதி,
இல. 11, அம்பாள் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

தகவல்: மகன்மார்
குலசபாநாதன் (குலம்) 076 850 4025
தவகுலநாதன் (077 456 8885)
சுந்தரநாதன் (சுந்தா) 077 918 6555
0041 22 329 0194

(c 5601/8)

அம்பிகை துணை

மயிலை வீரமாணிக்க தேவன்துறை
அருள் மிகு ஸ்ரீ கண்ணகாதேவி
தேவஸ்தானம்
பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

கிரியைகள் ஆரம்பம் :
28.01.2018ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையுள்ள சுபவேளையில் பாலஸ்தாபனக் கும்பாபிஷேகம் 29.01.2018 திங்கட் கிழமை காலை 5.30 மணிமுதல் 6.35 மணி வரையுள்ள திருவாதிரை நட்சத்திரத்திரமும் மகரலக்கின மும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையில் அம்பிகை அடியார்கள் அனைவரும் இப்புனித வைபவத்தில் கலந்து அன்னையின் திருவருள் பெற்றின்புறுவீர்களாக.
காலை 10.00 மணிக்கு விஷேட பூஜை வழிபாடு களும் அன்னதானமும் இடம் பெறும்.

ஆதீனகர்த்தாக்களும்
நிர்வாக சபையினரும்.

9121.16

மரண அறிவித்தல்கள்

தெய்வர் சின்னத்துரை (ஏழாலை வாத்தியார்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிட மாகவும், மந்துவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வர் சின்னத்துரை நேற்று (25.01.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான தெய்வர் சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் சிவ நாயகம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வர்களான நல்லம்மா, பூலோக பூரணம் மற்றும் செல்வராசா (ஆசிரியர்), பாக்கியம் (கனடா), தங்கராசா (கோண்டாவில்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் பிரணவன் (பிரான்ஸ்), தேவிகா (கனடா), செல்வலட்சுமி (ஆசிரியர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), அகிலன், தெய்வசீலன், தெய்வநிதி, இசைஞானி, மயூரன், ஞானசொரூபி, குகதாஸ், தயாளினி, தயாபரன் (ஆசிரியர் மன்/ கணேசபுரம் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பெரியதந்தையும் பாலசங்கர், குமுதினி, பாலஸ்கந்தன், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, சிவபாதம், குலசிங்கம் ஆகியோரின் மாமனாரும் சிவானுஜா, தனுஸ்ரன், நித்திலன், ஆதவன், பவனுஷ்யன், யானுகா, பிரவீனா, பிரவீன், நவீன், சுயேவ், திகழ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
தங்கராசா (சேவையர்)

(Cs 13274)(8)

சுப்பிரமணியம் வீரகத்தி

தோற்றம்
28
.
04
.
1946

மறைவு
24
.
01
.
2018

கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி கிழுவானை லேனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வீரகத்தி கடந்த (24.01.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக்கணவரும் கிருஷ்ணவேணி, அரவிந்தன், மயூரா, கிருத்திகா ஆகியோரின் அன்புதந்தையும் இந்திரகாசனின் அன்புமாமனாரும் அஷ்விதாவின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக் கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை ,உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 349 9459

(9119,16.)

G.C.E (A/L) 2018, 2019, 2020
GROUP & PERSONAL CLASSES
(ENGLISH & TAMIL MEDIUM)
CAPS

- Physics - Mr.M.Jeya Bsc PGDE
- Chemistry - Ms.Thadchajini Bsc.(Hons) in Chemistry
- Biology - Ms.Kirubalini Bsc.(Hons) in zoology
- English - Mr. P.Bala B.A. Eng Dip.Eng

- Paper Classes for 2018
- Revision for Repeat classes

ஆரம்பம் :- 31.01.2018
காலை 9.00 பதிவுகள் நடைபெறுகின்றன.

No.52, Palaly Road, Thirunelvely Junction,
Near Sampath Bank,
Contact No:- 021 - 205-2240, 077 386 7458

JAFFNA COLLEGE
Inter House Athletic Meet 2018
CHIEF GUESTS :
Dr. T. Sathiyamoorthy
(DIRECTOR, TEACHING HOSPITAL, JAFFNA) &
Mrs. Sujathasri Sathiyamoorthy

Venue : Bichnell Grounds
Date : Friday , 26 th January 2018
Time : 2.00 pm

Alumni, Parents, Friends and well wishers are condially invited.

Jaffna College,
Vaddukoddai.

(C/31851)(8)

Principal.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

O/L ஏழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள் கலந்துகொள்ளும்

இலவச ஆங்கில வகுப்பு [English Workshop]

27. 01. 2018 சனிக்கிழமை
பிரிவுகள்[இரண்டு பிரிவுகளில் ஏதாவதொன்றில் பங்குபெறமுடியும்]
1.காலை 10–12 2.மாலை 03–05

பங்குபற்றியமைக்கான சான்றிதழ் மற்றும் கையேடு இலவசம்.

இலவச வகுப்பு ஆரம்பமாவதற்கும் வகுப்பு இறுதிநாள் வகுப்பில் இணையமுடியும்.

SAAMSON
Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்நகர்.
021 320 3313 077 1570 486

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சிட்டிழுப்பு வாரம் 1436
சிட்டிழுப்பு திகதி 25.01.2018

வெற்றி இலக்கங்கள்
04 22 27 65 G

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 15, 722, 700/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLBnumber<LOTnumber>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அவசர தகவல்: 0114 824 824, 0112 333 778
திங்கள் நிற ஜக்பொட்டுக்கள் 2018.01.29 ஆம் திகதி சிட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் ஜக்பொட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

රට්ම දන්න ලබ් දශමය
සවර්ධන වාසනාව
Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்
சிட்டிழுப்பு வாரம் 112
சிட்டிழுப்பு திகதி 25.01.2018 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 03 10 24 48
சுப்பரி இலக்கம் 03
அதிர்ஷ்ட மாதம் மே

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 8, 692, 112 /=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3, 525, 542/=
அடுத்த ஜக்பொட் ரூ. 1, 290, 320/=

2018.01.27 ஆம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் குரே சில்வா மாவத்தை, பூமியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித தகவல்: 0114 824 824 www.dlb.lk

கோபத்தை புதைப்போம்

மனித எண்ணங்கள் எப்போதும் ஒன்று போல இருப்பதில்லை. உணர்வுகளிலும் அப்படித்தான். வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கற்பிக்கும் மனிதர்கள் மத்தியில் வாழும்போது, பார்வையும் செயல்களும் கூட எதிர்வினையாற்றும். அனைத்துக்கும் விளக்கம் சொல்வதோ, அனைத்தையும் ஏற்றுக்கொள்வதையோ, விரைவு வாழ்க்கையில் நினைத்தும் பார்க்க முடியாது.

தடித்த வார்த்தைகள் எத்தனை மனதை புண்படுத்தி இருக்கும். தன் கீழ் பணியாற்றுபவர்கள் சொல்லும் சிறந்த ஆலோசனைகளை கூட கேட்காமல் நிராகரிக்கும் போது அவர்களின் மனம் எத்தனை புண்படும் என்பதை எல்லாம் சிந்திக்கக்கூட நேரம் இருக்காது. காரணம், அடுத்த நிமிடத்தை தேடி பயணிக்கும் காலச்சக்கரத்துக்குள் இருக்கிறோம்.

காலச்சக்கரத்தை பின்னோக்கி பார்க்க ஒய்வு காலம் மட்டுமே நேரம் ஒதுக்குகிறது. அப்போது கண்ணீரும், கவலை தோய்ந்த முகமும் என்ன மகிழ்ச்சியை கொடுத்து விட முடியும். வார்த்தைகளை சிந்திவிடக்கூடாது என்றே அனைவரும் நினைத்தாலும், நிலைதடுமாறும் போது உதடுகளையும் தாண்டி ஒலிச்சத்தம் வெற்றி பெற்று விடுகிறது. அந்த ஒலியின் குணம் புண்படுத்துவது.

'தீயினால் சுட்டப் புண் உள்ளாரும் ஆறாதே நாவினால் சுட்ட வடு' என்று அய்யன் திருவள்ளுவன் இதைத்தான் கூறிச் சென்றார். மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் இருக்கும் மிக முக்கிய வித்தியாசம், மனிதனால் சிரிக்க முடியும். மற்றவையும் சிரிக்கலாம். ஆனால் அதை நாம் உணர முடியாது. ஆனால் மனிதனின் சிரிப்பை, அழகிய புன்னகையை அனைவரும் உணர முடியும். கோபப்படும் விலங்குகள் கூட சிலநேரம் மனிதரின் சாந்தமான புன்னகைக்கு அடங்கிப்போகும். எப்போதோ பேசிவிட்டு பிரிந்துபோன உறவுகள் தென்பட்டால் மகிழ்வுடன் வணங்குவோம். சிரிக்க சிரிக்க விளையாடி பழைய கோபங்களை புதைத்துப் போடுவோம்.

போட்டிப் பரீட்சை வகுப்புகள்

- சட்டமானி நுழைவு
- கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
- ஆசிரியர் தெரிவு
- திட்டமிடல் சேவை

போன்ற பரீட்சைகளுக்கு உரிய வகுப்புகள் நடை பெறுக்கின்றன.

(C 31501/15)

தொடர்புகளுக்கு
076 688 3394

செல்லும் இடங்கள் எல்லாம் குப்பைகளை விட்டுச் செல்லாமல் நல்ல எண்ணங்களை விட்டுச் செல்வோம். கோபங்களை சுமந்து செல்லாமல் புதிய கனவுகளை சுமந்து பயணப்படுவோம். நாம் நடக்கும் வழியில் வன்மமும், வெறிகளும் மிதிபடட்டும். அன்பின் பாதச்சுவடுகள் பதியட்டும்.

தங்குமிடம் வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறைந்த வாடகையில் இல.531, பலாலி வீதி, திருநெல்வேலியில் (UNICARE DENTAL CLINIC NEXT DOOR) உள்ளது. நேரில் வரவும்
27.01.2018 - 30.01.2018 வரையும்
077 776 9260

(Cs 13260) (13)

LIMITED SPECIAL OFFER

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி – 2018

19

IIS விசேட காட்சிக்கூடம்

பெற்றோர்களே! மாணவர்களே! உங்கள் உயர்கல்வி கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்கான ஆலோசனைகளை 26.27.28 ஆம் திகதிகளில் IIS இன் இலக்கம் 19, விசேட காட்சிக்கூடத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். சித்திரை 2018 ஆரம்பிக்க உள்ள பிரிவுகளுக்கு கணினி விஞ்ஞானம், வியாபார முகாமைத்துவம், குடிசார் பொறியியல் துறைகளில் உயர் தேசிய டிப்ளோமா இளமானி மற்றும் முதுமானி கற்கை நெறிகளுக்கு தம்மை இணைத்துக்கொள்ள விரும்பும் மாணவர்கள் இம் 3 நாள்களில் தம்மை பதிவுகளை மேற்கொள்வதன் ஊடாக 10 முதல் 25 வீதம் வரையான கட்டண கழிவுகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு,
071 777 5666

200, Sivan Pannai Road, Jaffna.
021 222 8060, 021 4900 900
IIS CITY CAMPUS

(IN 5632/15/17)

பிற்போடப்பட்டது 'கரு' திரைப்படம்

சாய்பல்லவியின் நடிப்பில் பெரும் எதிர் பார்ப்புக்கு மத்தியில் உருவாகியுள்ள 'கரு' திரைப்படம் திரையிடப்படுவது பிற்போடப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்படுகிறது.

'பிரேமம்' என்ற மலையாளப் படத்தின் மூலம் பலரினதும் அபிமானத்தை வென்றவர் சாய் பல்லவி. அந்தப் படத்தில் மலர் டீச்சராகநடித்திருந்த அவரதுகதாபாத்திரம் அனைவராலும் விரும்பிப் பார்க்கப்பட்டது. தமிழில் 'கரு' என்ற படத்தில் நான்கு வயதுசிறுமிக்குஅம்மாவாகபல்லவிநடித்துள்ளார். இந்தப்படம் பெப்ரவரி 9ஆம் திகதி வெளியாகும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி பெப்ரவரி23ஆம்திகதிபடம்வெளியாகும்என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

படித்ததில் ரசித்தது

★ உருக்கப்படும் தங்கம் தான் உரு மாறி நகையாகிறது!

★ அறுக்கப்படும் மரம் தான் அழகான ஜன்னலாகிறது!

★ இடிக்கப்படும் நெல் தான் உமி நீங்கி அரிசியாகிறது!

★ ஏற்றப்படும் விளக்குத் தான் இருள் நீக்கி ஒளி தருகிறது!

★ தட்டப்படும் தந்தி தான் தம்புராவில் இசை தருகிறது!

★ செதுக்கப்படும் பளிங்கு தான் செம்மை பெற்றுச் சிலையாகிறது!

★ பதப்படுத்தப்படும் தோல் தான் பயனுள்ள காலணியாகிறது!

★ மிதிக்கப்படும் மண் தான் மிருதுவான பானையாகிறது!

★ புதைக்கப்படும் விதைதான் மண்ணை விட்டு மரமாக எழுகிறது!

★ தோற்றுப்போகும் மனிதன்தான் துணிவு பெற்று வீரனாகிறான்!

★ தொடர்ந்து முயலும் வீரன்தான் சரித்திரம் படைத்தது வாழ்கிறான்!

மகன் : அப்பா நம்ம வீட்டில் காக்கா கத்தினா சொந்தக்காரங்க வருவாங்காளா??
அப்பா : ஆமாம்டா செல்லம்
மகன் : அப்படினா எப்ப திரும்ப அவங்க போவாங்க?
அப்பா : உன் அம்மா கத்தின்னா போய்டுவாங்க டா

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 . 10 . 1919
உதிர்வு 05 . 02 . 2017

அமரர் சின்னத்தம்பி முருகேசு

திதி: பூர்வபக்கதசமி (26.01.2018)

ஆண்டொன்று மறைந்ததையா ஆறவில்லை எம் துயரம்
மாண்டீர்கள் என்று சொல்ல மனமோ மறுக்குதையா
கலங்காத நெஞ்சுடனே காலமெல்லாம் வாழ்ந்தீர்களே
கலங்கித் தவிக்கின்றோம் எந்நாளும் உங்கள் நினைவால்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cs. 304) (13)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 672 8386
077 373 9912

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 04 . 1928
மறைவு 06 . 02 . 2017

அமரர் மயில்வாகனம் கெங்காதரம்

(ஓய்வு நிலை பிரதி அதிபர் - சா/இந்துக்கல்லூரி,
சா/சந்திர புரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்)

பருத்தறிவுப் பகலவனாய் பவனி வந்தீர்
பாங்குடனே கனிதந்தைப் பயிற்றுவித்தீர்
படித்திடவே தமிழர் வரலாறு தந்தீர்
துடிப்புடனே தன்னாத வயதிலும் நீர்
வீந்தினையும் வீழுனையும் வீரவாய்ச் சொன்னீர்
என்றென்றும் நன்றியுடன் நினைவு கூர்வோம்

குறிப்பு: அவரது இல்லத்தில் இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை நடைபெறும் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(CS 00302) (14.17)
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

பொன்னம்பலம் சண்முகராஜா (ராசா)



பிறப்பு 02.09.1948 இறப்பு 25.01.2018

சூழானை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் முகாந்திரம் ஒழுங்கை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சண்முகராஜா நேற்று (25.01.2018) வியாழக்கிழமைஅதிகாலைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர் களானகந்தையா-உருக்குமணி தம்பதியரின் அன்பு மருமகனும் தவராணியின் அன்புக் கணவரும் அபிராமி (London), பார்த்தீபன் (Orient finance Jaffna), பார்த்தீபா (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசா மற்றும் செல்வராணி (ரஞ்சி), சாஞ்சிராணி (கிளி), சுவேந்திரராணி (பட்டு), புஸ்பராணி (குட்டி) ஆகியோரின்அன்புச் சகோதரனும் சுதாகரனின் (London) அன்பு மாமனும் காவியாவின் அன்புப் பேரனும் பரமலிங்கம், மகாலிங்கம், அரியமலர், பற்குண லிங்கம் (குணம்), தவனேஸ்வரன் (ராசா கனடா), சந்திரவேணி, பர ராஜசிங்கம், நடராசா (வெள்ளை), காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின்மைத்துனரும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகாந்திரம் ஒழுங்கை,
மல்லாகம்.(காங்கேயன் பேக்கரி அருகாமை)
077 204 0585, 077 256 3658

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 13270/15)

அம்பிகை துணை

அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலய பாலஸ்தானம் - 2018

அம்பிகை மெய்யடியார்களே !
நிகழும் மங்களகரமான ஏ விளம்பி வருஷ தைதிங்கள் 16 ஆம் நாள் (29.01.2018) காலை 5.30 மணி தொடக்கம் 6.00 மணி வரையுள்ள மகர லக்கினத்தில் பாலஸ்தாபனம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அடியார்கள் 28.01.2018 மாலையிலிருந்து 29.01.2018 அதிகாலை வரை நடைபெறும் நிகழ்வுகளில் பங்கு பற்றுவதோடு அம்பிகையினுடைய மகா கும்பாபிஷேக திருப்பணி நிறைவு பெறுவதற்கு அனைத்து அடியார்களும் தங்களால் இயன்ற நிதி உதவியை செய்து அம்பிகையினுடைய ஆலயம் புதுப்பொலிவோடு கும்பாபிஷேகம் நடைபெற அனைவரும் ஒத்துழைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய குருக்களும்
- ஆலய நிர்வாக சபையினரும் -

C/ 31502.16

யாழ்ப்பாணம் மாநகர சபை, 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையவாறு வீதவரி விதித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் திரு.இ.த.ஜெயசீலன், ஆணையாளர் ஆகிய நான் யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286m பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு இன் கீழ் யாழ்ப்பாணம் மாநகரசபை இற்குக் உரித்தாக்கப் பட்டுள்ள தத்து வங்களின் பயனைக் கொண்டு மாநகர சபைகள் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்பு களின் வருடாந்த பெறுமதிக்கு 2017 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு / மதிப் பீட்டை 2018 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு / மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும். மேற்படி விலை மதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286m ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்-கட்டளைச் சட்டத்தின் 230(1) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனத்தின் மீது குறித்த மதிப்பீட்டுக்கு வருடாந்தப் பெறுமதியில் 6 சத வீதமான (6%)வருடாந்த வீத வரி விதிக் கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2018 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப் பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாணமாநகரசபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும். அவ்வாறு வருடாந்த வீதவரி 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப் படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும். மேற்படி அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித் தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக் குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாத விடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% திலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% திலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

யாழ்ப்பாணம் மாநகர சபை

திரு.இ.த.ஜெயசீலன்
ஆணையாளர்

காலாண்டு	மேற்படி அட்டவணை செலுத்த வேண்டிய திகதி	5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி
முதலாவது காலாண்டு	01.01.2018 - 31.03.2018	31.01.2018
இரண்டாவது காலாண்டு	01.04.2018 - 30.06.2018	30.04.2018
மூன்றாவது காலாண்டு	01.07.2018 - 30.09.2018	31.07.2018
நான்காவது காலாண்டு	01.10.2018 - 31.12.2018	31.10.2018

குறிப்பு:- 2018 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகர சபை ஆதனவரிப்பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதன விவரங்களைத் தெரிவித்து 2018 ஆம் ஆண்டிற்கான ஆதனவரிகளைச் செலுத்த முடியும் என்பதுடன் 31.01.2018 ஆம் திகதிக்குள் செலுத்துவதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

(வாரவிடுமுறை நாள்களான 2018 தை மாதம் 27, 28, ஆம் திகதிகளிலும், பொதுவிடுமுறை நாளான 31 ஆம் திகதியும் அலுவலக செயற்பாடுகள் இடம்பெறும்.)

திரு.இ.த.ஜெயசீலன்
ஆணையாளர்
மாநகர சபை,
யாழ்ப்பாணம்

(IN/5649)(11)

இறுதிக்குக் தகுதி பெற்றார் வோஸ்னியாக்கி



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றார் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி. வோஸ்னியாக்கியை எதிர்த்து பெல்ஜியம் வீராங்கனை மெர்டனிஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:3, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் வெற்றியுடன் இறுதிக்குத் தகுதி பெற்றார் வோஸ்னியாக்கி. (ம)

நேர்செற் வெற்றியுடன் அரையிறுதிக்குள் சங்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் தென்கொரிய வீரர் சங்.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் தென்கொரிய வீரர் சங்கை எதிர்த்து அமெரிக்க வீரர் சான்கிரென் மோதினார்.

6:4, 7:6, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்பமையில் முதல் மூன்று செற் களையும் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் வெற்றியுடன் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் சங்.

சங், பிலபல வீரர் ஜோகோவிக்கை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

நியூசிலாந்துக்கு பாக். பதிலடி

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பிதலடிகொடுத்தது பாகிஸ்தான் அணி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையாலான மூன்று ஆட்டங்களைக் கொண்டதொடர்தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றிருந்தது. இரண்டாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில்துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து201ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அசாம் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும், சமன் 50 ஓட்டங்களையும், செசாட் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வீலர் இரு இலக்குகளையும், ராஞ்சி, கிரான்ட்ஹோம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 153 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றது பாகிஸ்தான். அதிகபட்சமாக சான்நெர் 37 ஓட்டங்களையும், வீலர் 30 ஓட்டங்களையும், கப்ரில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அஸ்ரப் 3 இலக்குகளையும், அமீர், சடப்கான் இருவரும் தலா 2 இல்க்குகளையும், ரயீஸ், ஹசன் அலி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். கிண்ணத்தைத் தீர்மானிக்கும் இறுதி ரி-20 ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. (ம)

இறுதியாட்டத்தில் இலங்கை அணி

முத்தரப்புத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி இறுதிக்குத் தகுதி பெற்றது இலங்கை அணி.

இலங்கை - சிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. தொடரின் இறுதி லீக் ஆட்டம் பங்களாதேஷ் இலங்கை அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்றது. பங்களாதேஷ் அணி ஏற்கனவே இறுதிக்குத் தகுதி பெற்றிருந்தது. ஆனால் இலங்கை அணி இறுதிக்குத் தகுதி பெறவேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடியான நிலை இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இலங்கையின் எழுச்சியான பந்துவீச்சில் அந்த அணி வெறும் 82 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. ரகிம் 26 ஓட்டங்களையும், சபிர் ரகுமான் 10 ஓட்டங்களையும் பெற்றனர். அவர்களைத் தவிர வேறுஎவரும் இரட்டை இலக்கங்களில் ஓட்டங்களைப் பெறவில்லை.

பந்துவீச்சில் லக்மல் 3 இலக்குகளையும், சமீர, பெரேரா, சன்டகன் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி வெறும் 11.5 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் எதையும் இழக்காமல் வெற்றிபெற்றது. குணதிலக 35 ஓட்டங்களையும், தரங்க 39 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் மிர்பூரில் நாளை நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி முற்பகல் 11.30 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது. (ம)

அரையிறுதிக்கு பெடரர் தகுதி



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் றோயர் பெடரர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் சுவிற்சர்லாந்து வீரர் றோயர் பெடரரை எதிர்த்து செக்குடியரசின் தோமஸ் பெர்டிச் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 7:6, 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய பெடரர், அடுத்த இரண்டு செற்களுக்கும் வேலை வைக்காமல் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

இறுதியாட்டத்தில் சிமோனா கேலப்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்.

ருமேனிய வீராங்கனை கேலப்பை எதிர்த்து ஜேர்மனிய வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட தாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கேலப். இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கெர்பர். முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஓர் வெற்றியுடன் இருந்தனர்.

மூன்றாவது செற்றில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 9:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் கேலப். (ம)

சென். தோமஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 26

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம்வடமாகாண ரீதியாக நடத்தும் கபடித் தொடரில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். தோமஸ் அணி வெற்றிபெற்றது.

பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதியது. 72:22 என்ற புள்ளிகளின்அடிப்படையில்வெற்றி பெற்று கிண்ணம் வென்றது சென். தோமஸ் அணி. (ம-23)

பார்சிலோனாவில் இருந்து விலகவுள்ளார் மசரானோ

ஆர்ஜென்ரீனா தேசிய கால்பந்து அணியின் நட்சத்திர வீரரான மசரானோ, கழகத்தைப் பொறுத்தமட்டில் பார்சிலோனாவுக்காக விளையாடிவந்த நிலையில், தற்போது அவர் பார்சிலோனாவில் இருந்து விலகவுள்ளார் என்று தகவல் வந்துள்ளது.

சீனாவைச் சேர்ந்த கால்பந்தாட்டக் கழகமான ஹெபெய் சைனா அணியுடன் ஒப்பந்தம் மேற்கொண்டதை அடுத்தே அவர் பார்சிலோனாவில் இருந்து விலகிச் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

சென். பற்றிக்ஸ் இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கை பாடசாலை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மெறகஸ் முல்லை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

(ம-23)

சென். அன்ரனிஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜன. 26

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணி கிண்ணம் வென்றது.

அல்பதா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அல்பதா விளையாட்டுக் கழக அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தாழ்வுபாடு சென் அன்ரனிஸ் அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக றோய் 49 ஓட்டங்களையும், சுஜன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

96 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அல்பதா விளையாட்டுக் கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 58 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். அன்ரனிஸ் அணி.

(ம-23)

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 26

13 வயதுப்பிரிவு துடுப்பாட்டத் தொடர்

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப்பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்று அனுராதபுரம் சமாதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு மகாநாமக் கல்லூரி அணி மோதவுள்ளது.

19 வயதுப்பிரிவு துடுப்பாட்டம்

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று அம்பாந்தோட்டை சூரிய வெவ மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து களனிய தர்மலோகக் கல்லூரி அணி மோதவுள்ளது.

(ம-23)

தென்னாபிரிக்கா – இந்தியா டெஸ்ட் வேகப்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம்

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் இரண்டு அணிகளதும் வேகப்பந்து வீச்சாளர்கள் பெரும் ஆதிக்கம் செலுத்தினர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 187 ஓட்டங்களுக்குச் சுருண்டது. அதிகபட்சமாக கோக்லி 54 ஓட்டங்களையும், புஜாரா 50 ஓட்டங்களையும், புவனேஸ்வர் குமார் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரபாடா 3 இலக்குகளையும், மோர்கல், பிளன்டர், பிளுக்வையோ ஆகியோர் தலா 2 இலக்குகளையும், நெக்டி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி நாள் முடிவில் ஓர் இலக்கை இழந்து 6 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மார்க்ரம் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எல்கர் 4 ஓட்டங்களுடனும், ரபாடா ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

194 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது தென்னாபிரிக்கா. அம்லா 61 ஓட்டங்களையும், பிளன்டர் 35 ஓட்டங்களையும் ரபாடா 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பும்ரா 5 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார் 3 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நாள் முடிவில் ஓர் இலக்கை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

(ம)

ஜோகன்ஸ்பார்க் ஆடுகளமானது துடுப்பாட் வீரர்களுக்கு அநீதி

கங்குலி கடும் அதிருப்தி

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்துக்கான ஜோகன்ஸ்பார்க் ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று காட்டமாகத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 187 ஓட்டங்களில் சுருண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 194 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்தே இவ்வாறு தெரிவித்தார் கங்குலி.

"ஆடுகளம் வேகத்துக்கும், பவுன்ஸுக்கும், திரும்பல் தன்மைக்கும் சீராக ஒத்துழைக்கிறது. வேகப்பந்து வீச்சாளர்களுக்கு கனவுப் பூமியாக உள்ளது. துடுப்பாட்ட வீரர்களின் நிலைதான் கவலைக்கிடம். பன்னாட்டு கிரிக்கெட் சபை இதைக் கவனிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக டெஸ்ட் ஆட்டங்களில் சீரான வாய்ப்புக்கள் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்" என கங்குலி மேலும் தெரிவித்தார்.

(ம)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
17
•
03
•
1939

உதிர்வு
27
•
12
•
2017

திதி:
வளர்பிறை நவமி

கடந்த 27.12.2017 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி அரியநாயகம் சேதுப்பிள்ளை

உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்

அன்புத் துணைவியாரும் அருமைத் தாயாருமான நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து இன்று 31 நாள்கள் கடந்து விட்டதென்று நம்ப முடியாமல் உங்களை இன்னும் தேடிக் கொண்டிருக்கின்றோம்.

உங்கள் அன்பு, பாசம், ஆதரவு, நம்பிக்கைகள் வாழ்வில் முக்கியமளித்தவை. எல்லாம் இப்பொழுது தான் எம்மை புடம் போடுகின்றன.

உங்கள் ஆத்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து இன்றும் என்றும் எங்களை வழிகாட்ட வேண்டி நிற்கும்

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், உற்றார், உறவினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.